



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாசப் பயணம்

சிறுவர் நாவல்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"உல்லாசப்பயணம்"***
சிறுவர் இலக்கியம்

ஆசிரியர்
***ச. அருளானந்தம்***

பதிப்புரிமை
***ஆசிரியருக்கு***

அட்டைப்படம், ஓவியங்கள்
***ச. அ. அருள்பாஸ்கரன்***

வெளியீடு
***அருள் வெளியீடு***
***37/7 மத்திய வீதி***
***உவர்மலை***
***திருகோணமலை***

நூல் வரிசை
***18***

முதலாம் பதிப்பு
***24. 01. 2004***

கணினி வடிவமைப்பு
அச்சாக்கம்
***கிறிப்ஸ்***

நூல் கிடைக்கும் இடம்
***லங்கா புத்தகசாலை***
FL 1-14, ***டயஸ் பிளேஸ்,***
***குணசிங்கபுர,***
***கொழும்பு 12.***

விலை
***ரூபா 175.00***

ISBN 955-98211-0-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம் இவருக்கே...

கிழக்கின் ஆசானாய்,
சிவானந்த வித்தியாலயத்தின் அதிபராய்,
மட்டக்களப்பு மாநகர முதல்வராய்,
மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களின்
கல்விப் பணிப்பாளராய், வடக்கு கிழக்கு மாகாணக்
கல்விப் பணிப்பாளராய்,செயலாளராய்,
ஆளுநரின் பிராந்திய இணைப்பாளராய்,
விபுலானந்த நூற்றாண்டு விழாச் சபையின்
தலைவராய், கல்விப்பணி, சமூகப்பணி என
எங்குமாய், யாவுமாய்த்
தன்னைச் சேவைக்காக அர்ப்பணித்து,
இனியன கூறி, இனியன செய்த

**அமரர் கந்தையா தியாகராசா**

அவர்களுக்கு இந்நூல்

**சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் திருகோண மலை - அவர்
முந்தையர் பலகோடி ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் திருகோண மலை - அதைச்
சிந்தையில் வைத்துத் தினம்தினம் பாடி
சீரினைப் போற்றிடு வோம் - எது
வந்திட்ட போதுமெம் தாதையர் நாட்டினை
என்றென்றும் காத்திடு வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திருகோணமலை தந்திருக்கும் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர் கேணிப்பித்தன் ச. அருளானந்தத்தின் 'உல்லாசப் பயணம்' என்ற இந்தச் சிறுவர் நவீனத்தை வாசித்தபோது மிக்கத் திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன. இலக்கிய உலகு அறிந்த கல்வியாளர். மாணவர்களின் தரம், சுவை, உளப்பாங்கு என்பவற்றை நன்கு அறிந்தவர். இதுவரை 'இன்பக்கனிகள்', 'பாட்டுப் பாடுவோம்', 'காகமும் தம்பியும்', 'பாடி ஆடுவோம்', 'கடலும் காவிரியும்', 'சின்னச் சின்னப் பாட்டு', 'மனதுக்கினிய பாட்டு', 'ஆனந்தமான பாட்டு', 'பூஞ்சிட்டுக்கள்', 'பளிங்குத் தீவு', 'காட்டில் கலவரம்', 'பயங்கொள்ளலாகாது பாப்பா', 'ஆடி மகிழ்வோம்', 'தங்கமாம்பழம்' எனப் பதினான்கு படைப்புகளைச் சிறுவர்களுக்காக எழுதி நூலுருவில் தந்துள்ளார். அந்த வரிசையில் பதினைந்தாவது நூலாக 'உல்லாசப் பயணம்' என்ற இந்த நாவல் சிறுவர்களுக்கு விருந்தாக அமைகின்றது என்பேன்.

ஞாயிறு விடுமுறை நாள் ஒன்றில் உல்லாசப் பயணம் ஒன்றினை மேற்கொள்ளத் திட்டமிட்டு புறப்பட்ட மாணவர்கள், தமது பயணத்தில் சந்திக்கின்றவற்றையும், காண்பவற்றையும் உரையாடல் மூலம் அறிந்து கொள்ளும் அற்புதங்களையும், ஆசிரியர் சுவைபட இந்நூலில் சித்திரித்துள்ளார். இந்த நூலில் விதந்துரைக்கத்தக்க அம்சங்கள் பல உள்ளன. அவற்றினைப் பட்டியலிட முடியும்.

1. சிறுவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளத்தக்க எளிமையானதும், சுவையானதுமான உரை நடையில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. சுத்தமான உரையாடல்கள் இந்த நாவலில் கையாளப் பட்டுள்ளது. சிறுவர்களுக்கான புனைகதைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு வழக்கினைப் படைப்பாளிகள் கையாள்வதால் ஏற்படுகின்ற, மாணவர்கள் எதிர்நோக்கும் வசன உருவாக்கச் சிக்கல்கள் இன்று பாடசாலைகளில் அவதானிக்கப்படுகின்றன. கற்கின்ற நிலையிலுள்ள மாணவர்கள் அச்சில் வரும் சொற்பிரயோகங்களைச் செந்தமிழ் என நம்பித் தமது கட்டுரைகளில் பொழிந்து விடுகின்றனர். அருளானந்தம் இந்தக் குறைபாட்டை நன்குணர்ந்தவராக இந்த நாவலில் செயற் பட்டுள்ளார். பாராட்டுக்குரியவர்.

2. சிறுவர்கள் விரும்பிப் பாடக்கூடிய பாடல்கள் ஆங்காங்கு இந்த நாவலில் கையாளப்பட்டுள்ளன. அருளானந்தம் ஒரு கவிஞராக இருப்பது இதற்கு மிகமிக உதவியுள்ளதென எண்ணுகிறேன். ஆடலும் பாடலும் இந்த நாவலை நன்கு நகர்த்திச் செல்லுகின்ற உத்திகளாக உள்ளன.

3. உலக அதிசயங்கள் பற்றிய தகவல்களை உரிய இடத்தில் பாத்திரங் களூடாகவும் ஆசிரியர் கூற்றாகவும் மாணவர்களுக்கு எடுத்தியம்பும் பண்பு இந்த நாவலில் மிகச் சிறப்பாக உள்ளது. அதேபோல் காவிய நாயகர்களையும் இலக்கிய கர்த்தாக்களையும் நல்ல முறையில் மாணவர்களுக்கு இந்த நூலில் அறிமுகப்படுத்தியுள்ள பாங்கு இந்த நாவலுக்கு மகுடமாகின்றது.

4. இந்த நாவலில் அருளானந்தம் விபரிக்கின்ற அறிவியல் செய்திகள், சிறுவர்களுக்கான கல்விக்கு உரியதாயினும் அவை யாவும் பயனுள்ள வையாக உள்ளன. நிறையவே அறிவியல் தகவல்கள் கூறப்படுகின்றன. எனினும் நூலின் சுவையைக் கெடாது செய்துள்ள தன்மை சிறப்பாக உள்ளது.

5. தயை, அன்பு, காருண்யம் முதலான பண்புகளையும் அனைத்துக்கும் மேலாக மானிட சமூகம் அங்கீகரித்துள்ள ஒழுக்க நெறிகளையும் அருளானந்தம் ஏற்றவிடத்து ஏற்றவாறு இந்த நூலில் புகுத்தி உள்ளார். சிறுவர் இலக்கியத்தின் சமூகப் பயன் இவைதாம் என்பது அறிஞர்களது கருத்து நிலையாம்.

ச. அருளானந்தத்தின் 'உல்லாசப் பயணம்' என்ற இந்த நாவலைக் குறித்து நிறையவே விதந்து பேசமுடியும். சிறுவர் நூல்களில் சித்திரங்கள் மிகமிக அவசியமானவை. இந்தப் பொறுப்பினை ஏற்று அவரது மகன் அருள் பாஸ்கரன் கதைக்கு மெருகேற்றும் வண்ணம் அற்புதமான சித்திரங்களை வரைந்து தந்துள்ளார். அவரது சித்திரங்கள் நூலுக்குப் புது மெருகேற்று கின்றன. அவருக்கு எனது வாழ்த்துக்கள்.

இந்நாவலைச் சிறுவர் உலகம் மிக்க ஆரவாரத்தோடு உவந்தேற்கும் என்பதில் ஐயமில்லை.

**கலாநிதி. க. குணராசா**
**செங்கை ஆழியான்**

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது உரை

சிறுவர்களுக்கு எழுதும்போது அவர்களாகப் பாவனை செய்து எழுதவேண்டும். அவர்களுக் குப் புரியும் மொழியில் இலகுவாக்கி எழுத வேண்டும். அத்துடன் புதிய சொற்களை அறிமு கம் செய்யவும் வேண்டும். நான் இரண்டாம் வகுப்புப் படிக்கும் போது வாசிக்க முடியாதிருந் தேன். எனது தந்தையார் 'அஸ்வமேத யாகம்', 'உலக விநோதக் கதைகள்', 'இராமாயணம்' போன்ற நூல்களைப் படிக்கும்படி கூறுவார்.

எழுத்துக் கூட்டிப் படிப்பேன். வாசிக்கும் போது சிரமமாக இருந்தது. புத்தகங்களில் உள்ள படங் களையும் பார்ப்பேன். கதையின் சுவை என்னை இழுத்து வாசிக்கத் தூண்டியது. வாசித் தேன். பின்னர் ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்தேன். அப்போது தேவதைக் கதைகளைப் (Fairy tales) படிப்பேன். வாசிக்கும்போது கற்பனையில் சிறகடிப்பேன். எனது கிராமச் சூழல், கடல், வயல் வெளிகள், சிறு காடுகள் எனது கற்பனா வளத்துக்கு உதவின. இவை யாவும் எனது உந்து சக்திகளாகி என்னை எழுதத் தூண்டியன. எனது ஆசிரியர்களும் நண்பர்களும் வழிகாட்டினார்கள். இன்று நான் சிறுவர்களுக்காக அதிகம் எழுதுகிறேன்.

சிறுவர்களுக்காக எழுதும்போது நான் எனது இளமைக் காலத்துள் நுழைந்து விடுவேன். அதில் உள்ள சுகம் அலாதியானது. சிறுவனாக இருந்த போது அனுபவித்தவை எட்டிப் பார்க்கும். எந்தவித துன்பங்களும் துயரங்களும் மனதில் குடைந்து வேதனைகள் தருவதில்லை. அவற்றை மறப்ப தற்கும், மகிழ்ச்சியாக இருப்பதற்கும் இளமைக் காலத்தில் மூழ்குவது நன்மை பயக்கும். அதிலே ஒரு சுகம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எவைகளை எல்லாம் விரும்பிச் செய்தேனோ அவைகளைச் சிறுவர்களும் அனுபவிக்க வேண்டும் என்பது எனது அவாவாகும். இன்றைய நிகழ்வுகளையும் சிறுவர்களில் ஒருவனாகி ரசித்து எழுதுகிறேன். இந்த சிறுவர் நாவலில் சிறுவர்கள் கற்கவேண்டிய பல விடயங்களைச் சேர்த்துள்ளேன்.

எனது ''பயங்கொள்ளலாகாது பாப்பா'' சிறுவர் நூலுக்குச் சாகித்திய விருது கிடைத்தது. சாகித்திய விருது கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் எழுதவில்லை. சிறுவர்கள் வாசிக்கவேண்டும் என்பதற்காகவே எழுதுகிறேன். என்னை எவ்வாறு எனது தந்தையாரும் ஆசிரியர்களும் வாசிக்க அறிவுரை கூறி வழிகாட்டினார்களோ அவ்வாறே அனைத்துச் சிறுவர்களையும் வழிப்படுத்த வேண்டியது பெற்றார், ஆசிரியர்களது கடமையாகும். சிறுவர்களுக்கு வழிகாட்டி வாசிக்கும்படி தூண்டி அவர்களுக்கு நூல்களை அறிமுகம் செய்யவும் வேண்டும்.

இன்றைய சிறுவர்களும் இயற்கையையே விரும்புகின்றனர். அவர்களுக்குப் பரிச்சயமான மிருகங்கள் பறவைகளையே விரும்புகின்றனர். அதிசயமான நிகழ்வுகளைப் பெரிதும் ரசிக்கின்றனர். தலைமை தாங்கிச் செயற்படுதல், கூட்டாகச் செயற்படுதல், புதுமைகளை ஆராய்ந்தறிதல் ஆகியவை சிறுவர்களை மகிழ்வில் ஆழ்த்துகின்றன. இவற்றை அனுபவ வாயிலாகக் கண்டறிந்த பின்தான் இவ்வகை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளேன்.

இந்த நூலை ஆக்குவதில் ஈடுபட்டு உழைப்போர் பலர். ஒரு நூலைக் கவர்ச்சிகரமாக ஆக்குவதற்கு நல்ல ஓவியங்கள் அவசியம். எனது நூல்கள் அனைத்துக்கும் ஓவியங்களை வரைந்ததுடன் நூலாக்கப் பணியில் எனது மகன் ச. அ. அருள்பாஸ்கரன் ஈடுபடுகிறார். இந்த நூலின் அட்டைப்படம் தொடக்கம் எல்லாப் படங்களையும் அவரே வரைந்துள்ளார். நூலாசிரியர் என்ற வகையில் அவருக்கு எனது நன்றி.

பல சிரமத்தின் மத்தியிலும் நூலை வாசித்து மனமுவந்து அணிந்துரையை பிரபல எழுத்தாளரும் பிறரது எழுத்துக்களை மதித்து அவற்றை அறிமுகம் செய்வதோடு அவர்களைப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் அறிமுகம் செய்யும் நல்மனம் கொண்ட அறிஞரும் வலிகாமம் வடக்குப் பிரதேசச் செயலாளரும் புவியியல் வல்லுநருமான கலாநிதி. க. குணராசா அவர்கள் வழங்கியுள்ளார்கள். இந்நூலை வாசித்து செவ்வை பார்த்துத் தந்துள்ளார் கவிஞர்தாமரைத்தீவான். அவர்களுக்கு என் இதயத்தால் நன்றி நவில்கிறேன்.

இந்த நூலைப் பிரசுரித்துத் தர லங்கா புத்தகசாலை இயக்குநர் திரு. க. சதீஸ் அவர்கள் முன்வந்து உதவியுள்ளார்கள். எனது நூல்களில் பெரும் பகுதியை சந்தைப்படுத்தலில் லங்கா புத்தகசாலையே எனக்கு உதவியாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைப் போல் சிலராவது நமது நாட்டில் உள்ளனர் என நினைக்கும் போது நன்றியுணர்வு பொங்குகின்றது. நூலை அழகாக அச்சிட்ட 'கிறிப்ஸ்' நிறுவனத்தினருக்கும் எனது நன்றி.

அருள் வெளியீட்டகம் இதுவரை சுமார் 21 நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றுள் கவிஞர் தாமரைத் தீவானின் 'போரும் பெயர்வும்' நூலும் ஒன்றாகும். அருள் வெளியீட்டகம் ஈழத்து எழுத்தாளர்களது ஆக்கங்களை வெளியிட ஆர்வமாய் உள்ளது. அதற்கான திட்டத்தையும் வகுத்துள்ளது. எழுத்தாளர்கள் தொடர்பு கொண்டால் உதவியாக இருக்கும். வழமைபோல் எனது ஆக்கங்களுக்கு ஆதரவு தரும் வாசகர்களுக்கு நன்றி கூறி இந் நூலுக்கும் உங்கள் ஆதரவைத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆலங்கேணி,
கிண்ணியா.

**ச. அருளானந்தம்**
**(கேணிப்பித்தன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

திருகோணமலைக் கடற்கரை கலகலத்தது. எங்கும் சனக் கூட்டம். ஞாயிறு விடுமுறை நாள். அன்றுதான் எல்லோர் மனதி லும் சந்தோஷம். ரியூசன் வகுப்புக்களும் இல்லை. சனங்கள் குடும்பமாகத் திரண்டு வருவார்கள். பெரியவர்களும் பிள்ளை களுமாய் நிறைவார்கள். நிம்மதி அடைவார்கள், நிமேசிக்காவும் தனது குடும்பத்தவரோடு வந்தாள். குட்டித் தம்பி விபூசன் படுசுட்டி. தங்கை சுலக்சிகாவும் படுசுட்டிதான். நிமேசிக்கா மகிழ்ந்து துள்ளி னாள். அண்ணன்மாரோடு சேர்ந்து விளையாடினாள். கடல் நீரைக் கால்களால் எற்றினாள்.

ரதீபன் ஈரமணலில் உருண்டைகள் செய்தான். நிரூசன் உருண்டையைக் கடலுக்குள் எறிந்தான். எல்லோரும் உருண்டை கள் செய்தார்கள். கடலுக்குள் எறிந்தார்கள். சந்தோஷமாக இருந்தது. கூட்டம் கூட்டமாகப் பிள்ளைகள் சேர்ந்தனர்.

கடல் பரந்து கிடந்தது. அலைகள் கரையில் வந்து மோதின. காற்று வீசியது. தூரத்தே கப்பல்கள் சென்றன. சுலக்சிகா விபூசனைத் துரத்தினாள். மணலில் ஓடிக் களைத்தார்கள். சுலக்சிக்கா மணலில் விழுந்து புரண்டாள். அவளை நிமேசிக்கா தூக்கினாள். விபூசன் ஓடி வந்தான். அவனை ரதீபன் தூக்கி னான். கடலில் படகு போவதைக் காட்டினான். அவை அலைகளை ஊடறுத்துச் சென்றன. கெம்பி எழுந்து சென்றன. கடலும் அதற்கேற்ப மெதுவாக நெளிந்தது. மீன்கள் துள்ளிப் பாய்ந்தன. ரதீபன் பாடலைப் பாடிக் காட்டினான்.

**கடலைப் பாரடா —தம்பி**
**அலை யடிக்குது.**
**படகு போவதை —மீன்**
**பார்த்துத் துள்ளுது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூசனும் சேர்ந்து கொண்டான். அலைகள் மடிந்து சுருண்டன. கரையில் மோதி உடைந்தன. நிரூசன் பாடினான். எல்லோரும் தாளம் போட்டுப் பாடினர்.

**வீசும் காற்றினால் —அலை**
**விரைந்து சுருளுது.**
**மூசிக் கரையிலே —வந்து**
**மோதி உடையுது.**

விபூசன் சிரித்தான். சின்னக் கைகளால் தாளம் போட்டான். சுலக்சிக்கா இசைக்கு ஏற்றவாறு அசைந்தாள். அனுசியனும் வந்து சேர்ந்து கொண்டான். வட்டமாக சுற்றி இருந்தனர். விபூசன் ரதீபனிடம் இருந்து இறங்கினான். அவன் அவர்களைச் சுற்றி ஓடினான். சுலக்சிக்கா அவன் பின்னால் ஓடினாள். அலைநீரை மணல் உறிஞ்சியது. உறிஞ்சும் ஓசை காற்றில் பரவியது. அலைகள் கால்களை நனைத்துச் சென்றன. இவற்றை நிமேசிக்கா கவனித்தாள். அதனைத் தன் பாடலில் சேர்த்தாள். நிமேசிக்கா தொடர்ந்து பாடினாள். பாடலின் இசைக்குப் பொருத்த மாகத் துள்ளினர். பாடலைச் சேர்ந்து பாடினர்.

**ஓசை பரவுது —காதில்**
**ஊதிக் காட்டுது.**
**ஆசை தீர்க்குது —கால்**
**அலையில் நனையுது.**

பிள்ளைகள் பாடுவதை முரளி பார்த்தார். அனுஜாவைச் சேர்ந்து பாடச் சொன்னார். அனுஜாவும் சேர்ந்து பாடினார்.

**நண்டு ஓடுது —அலை**
**நனைக்கத் துரத்துது.**
**கிண்டி மணலிலே —வீடு**
**கட்டி நுழையுது.**

எல்லோரும் சேர்ந்து பாடினர். ஆடிப்பாடி இரசித்துச் சிரித்து மகிழ்ந்தனர்.

நிசோ வந்து சேர்ந்து கொண்டான். அபிசேக், சனோ, தனுவும் வந்தனர். ஒன்றாகச் சேர்ந்தனர். அம்மா அவர்களை விளையாட அனுமதித்தார். எல்லோரும் ஒரே பாடசாலையில் படிப்பவர்கள். அனுசியன் மட்டும் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறான். ரதீபன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் வகுப்பு. நிமேசிக்கா ஏழாம் வகுப்புப் படிக்கிறாள். மற்றவர்கள் ஆறாம் ஐந்தாம், வகுப்பில் படிப்பவர்கள். அனை வரும் சாரணியத்தில் சேர்ந்தவர்கள். சேர்ந்து பாடி விளையாடி னார்கள். கடற்கரையில் வீடுகள் கட்டினர்.

ஈரமணலை எடுத்தனர். கால்களை வைத்து மூடினர். அழுத்தித் தட்டினர். மெதுவாகக் கால்களை எடுத்தனர். ஆமை வடிவத்தில் வீடுகள். வெவ்வேறு வடிவங்களில் வீடுகள். பிரமிட்டுகள் கட்டினர். பிரமிட்டுகளைப் பற்றி அனுசியன் விளக்கினான்.

''எகிப்தில் பிரமிட்டுகள் ஏராளமுண்டு. இறந்த அரசர்களின் உடல்களை அதற்குள் வைப்பார்கள். அரசர்களது திரவியங்களும் வைக்கப்படும். சில பிரமிட்டுக்கள் மிகப் பிரமாண்டமானவை. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தினைக் கொண்டிருக்கும். ஒரு பிரமிட் கட்டுவதற்குப் பல வருடங்கள் ஆகும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தேவை. மிக நுட்பமாகக் கட்டுவார்கள். பிரமிட்டு களுக்குள் பொருட்கள் பழுதடைவது இல்லை. அவை நமது குளிர் சாதனப் பெட்டிகள் போன்றவை. இவை உலக அதிசயங்களாக விளங்குகின்றன''.

அனுசியனின் விளக்கத்தை அவதானித்தனர்.

கடற்கரையில் பல கோபுரங்கள் எழுந்தன. அவை பலவகைத் தோற்றங்களைக் காட்டின். இந்துக் கோயில்கள் போல் அமைத்தனர். கிறிஸ்தவ ஆலயங்களைச் சில சுட்டின. விகாரைகள் கட்டினர். பள்ளிவாசல்களை சில நினைவூட்டின. மாட மாளிகை கள் எழுந்தன. சிறுவர்களது கைவண்ணம் அற்புதமானது. சிறிதும் பெரிதுமாக பல வீடுகள். எங்கும் கட்டிடங்கள் உருவாகின. அவற்றைச் சுற்றி மதில்கள் எழுந்தன. வீடுகளை அழகு செய்தனர். பல பொருட்கள் உள்ளே வைக்கப்பட்டன. பாடலும் எழுந்தது. பாடிப் பாடி வேலை செய்தார்கள். 'வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்'. இது பழமொழி. அதற்கேற்ப அவர்களது விளையாட்டு இருந்தது. ஆட்டமும் பாட்டமுமாக இருந்தது. சிலர் பாடினார்கள். சிலர் அபிநயம் பிடித்து ஆடினார்கள்.

முதலில் நிமேசிக்கா பாடலைத் தொடங்கினாள். பாடலைத் தொடங்குமுன் மெட்டை அமைத்தார்கள். மெட்டை ஒருமுறை எல்லோரும் சேர்ந்து பாடினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தான தன்னத் தானினா.**

**தான தன்னத் தானினா.**

**தான தன்னத் தானினா.**

**தான தன்னத் தானினா.**

அனுஜா கேட்டு ரசித்தார். பாராட்டினார்.

''நன்றாக இருக்கிறது. பாடுங்கள்''

என்று அனுஜா உற்சாகப்படுத்தினார். முரளியும் உற்சாகப்படுத்தினார். போட்டி போட்டுப் பாடினார்கள். உற்சாகம் குடிகொண்டு விட்டது.

**ஈர மணலை எடுத்துநாம்**
**இனிய வீடு கட்டுவோம்**
**ஓரம் பதுங்கும் அலைகளை**
**ஒதுக்கி மதிலும் போடுவோம்.**

ரதீபன் தொடர்ந்து பாடினான். அவன் ஒவ்வொரு வரியாகப் பாடினான். அதே இசையில் எல்லோரும் தொடர்ந்தனர். ஒரே குதூகலமாக இருந்தது. பாடினார்கள்.

**தோட்டம் வைத்துக் காட்டுவோம்**
**சுகம் அனைத்தும் தேடுவோம்.**
**கூட்டுச் சேர்ந்து வாழுவோம்**
**கூடி ஒன்றாய் வாழுவோம்.**

நிரூசனின் சந்தர்ப்பம் வந்தது. அவன் ஆடியாடிப் பாடினான். மற்றவர்கள் சேர்ந்து பாடினார்கள். சுலக்சிக்காவும் விபூசனும் சேர்ந்தாடினர். முரளி சிரித்து ரசித்தார் அனுசியனும் சேர்ந்து பாடினான்.

**சேர்ந்து சுத்தம் செய்குவோம்**
**சூழல் அழகாய் மாற்றுவோம்**
**பேரும் புகழும் சேரனும்**
**பண்பைப் போற்றி வாழனும்.**

இப்போது முரளியும் சேர்ந்து கொண்டார். அவர் பிள்ளைகளை உற்சாகப்படுத்தினார். அவரும் பாடினார்.

**அம்மா அப்பா வாழ்த்தனும்**
**அவர்க்குப் பெருமை சேர்க்கனும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளி பாடலை முடிக்கவில்லை. பிள்ளைகள் சேர்ந்து பாடி முடித்தார்கள்.

**எம்மால் முடிந்ததைச் செய்யணும்.**
**என்றும் ஒன்றாய் வாழணும்.**

அவர்களது பாடல் முரளிக்கு இதமாக இருந்தது. அவர்களை மனதுள் பாராட்டினார். அனுஜாவிடம் கூறி மகிழ்ந்தார். பிள்ளைகள் சேர்ந்து விளையாடினார்கள். விளையாட்டு மிகவும் பயனுள்ளது. 'வாழ்க்கையின் ஆயத்தமே விளையாட்டுத்தான்.' முரளி இதனை உணர்ந்து இருந்தார். பிள்ளைகள் சேர்ந்து பாடினார்கள். பாடலுக்குச் சேர்ந்து ஆடினார்கள். அவர்களது மகிழ்ச்சிக்கு வானமே எல்லை. பெற்றார் பார்த்துப் பிரமித்தனர். மனதுள் பாராட்டினர். மகிழ்ந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

அந்த விளையாட்டு முடிந்தது. சேர்ந்து வட்டமாக இருந்தனர். விபூசன் மணலில் ஓடித் திரிந்தான். சுலக்சிக்கா அவனைத் துரத்தி விளையாடினாள். அப்பாவும் அம்மாவும் பார்த்து ரசித்தனர். மாலை நேரம் சூழ்ந்தது. குளிர் காற்று வீசியது. உரமாகவும் உற்சாகமாகவும் அமைந்தது. இன்றைய நாள் இனிமையானது. அனுஜாவும் பிள்ளைகளோடு ஐக்கியமாகி விட்டார். முரளிக்கு இது நிம்மதியைக் கொடுத்தது.

கடல், அலையை மெதுவாகவே வீசியது. அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. கரையில் மோதிச் சிரித்தன. 'சலார்' என்ற ஒலி காற்றில் பரவியது. நீலக் கடல் அழகாக நெளிந்தது. பார்க்கப் பரவசமாக இருந்தது. படகில் போவது சந்தோஷமானது. நீரைக் கிழித்துக் கொண்டு படகு செல்லும். நீர்த் திவலைகள் சிதறும். நீர்க் குமிழிகள் உருவாகி உடையும். நுரை மாலையாய்ப் படரும். படகு மேலும் கீழும் குதித்துச் செல்லும். சுகமான அனுபவம் கிடைக்கும்.

கற்பனையில் மூழ்கினர். கடற்கரை மணல் விரிந்து கிடந்தது. சிறுநண்டுகள் ஓடித் திரிந்தன. அவற்றின் கால்கள் மணலில் பதிந்து கோடுகள் நெளிந்தன. சிறுவர்களின் கிறுக்கல்கள் போன்று இருந்தன. அவை அழகான ஓவியங்கள் போல் தெரிந்தன. வளைகளில் இருந்து நண்டுகள் வெளிவந்தன. கால்களை நீட்டி அசைந்து திரிந்தன. அலைகள் நண்டுகளைத் துரத்தின.

நண்டுகள் அலைகளிடம் சிக்கவில்லை. அவை வளைகளில் ஓடி ஒழிந்தன. அலைகள் பொங்கி வந்தன. நண்டுகளின் தடங்களை அழித்துச் சென்றன. நிமேசிக்கா இக்காட்சியைப் பார்த்தாள். மகாகவி நம்நாட்டுக் கவிஞன். மகாகவியின் பாடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகள் நினைவில் நின்றன. அது வகுப்பில் கற்ற அற்புதமான பாட்டு. ஆசிரியர் இசையோடு பாடிக் கற்பித்தார். அந்தப் பாடலை மெல்லப் பாடினாள். அனைவரும் தாளம் போட்டு ரசித்தனர்.

''சிறு நண்டு மணல்மீது படமொன்று கீறும் சிலவேளை அலை வந்து அழித்தோடிப் போகும்.''

பாடல் முடிந்தது. பிள்ளைகளின் இசை சீராக அமையவில்லை. முரளி அனுஜாவைப் பார்த்தார். ''அனுஜா அந்தப் பாடலைப் பாடிக் காட்டுங்கள். பிள்ளைகள் நன்றாகப் பாடட்டும்.''


முரளி கூறியதும் அனுஜா பாடினார். அனுஜா தெளிவாகப் பாடிக் காட்டினார். அனைவரும் தாளம் போட்டனர். சேர்ந்து பாடிப் பயின் றனர். அம்மாவின் குரலைக் கேட்டு மகிழ்ந்தனர். சந்தோஷத்தால் கடல்நீரைக் கைகளில் அள்ளினர். ஆளுக்கு ஆள் பிசிறி அடித் தனர். தண்ணீர் உடலில் பட்டது. பட்டதும் 'சில்'என்று குளிர்ந்தது. சுகமாய் இருந்தது. கூடி இருந்து கதைத்தனர்.

நிமேசிக்காவுக்கு மாமாவின் நினைவு வந்தது. அவர் விடுமுறைக்கு வரும்படி அழைத்திருந்தார். அதனை இப்போது சொன்னாள். எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். மாமா வீடு செல்லும் திட்டம் உருவாகியது. மாமாவின் வீடு சம்பூரில் இருந்தது. அங்கு செல்வதற்குத் தீர்மானித்தனர். தங்கள் திட்டத்தைப் பெற்றாருடன் பகிர்ந்தனர். பிள்ளைகள் நல்ல அனுபவங்களைப் பெறுவது பயனுடையது. முரளி மனைவியுடன் கலந்துரையாடினார். அந்தநேரம் அனுஜாவும் சம்மதித்தார். இருள் சூழ்ந்து கொண்டது. அனைவரும் வீடு திரும்பினர். அவர்கள் விடுமுறையை எதிர்பார்த்து இருந்தனர்.

சம்பூர் அழகிய கிராமம். அங்கே பத்திரகாளி அம்மன் ஆலயம் உள்ளது. அது பழம் பெருமை வாய்ந்தது. நம்பியவர்களுக்கு அருள் கிடைக்குமாம். இது பெரியவர்களது நம்பிக்கை. கோயிலி னுள் அழகிய அம்மன் சிலை உண்டு. உற்சவ காலங்களில் பக்தர்கள் கூடுவார்கள். திருகோணமலையில் இருந்து படகில் செல்வது சந்தோஷமானது. சம்பூருக்குப் படகிலேயே செல்லத் தீர்மானித்தனர். ஆனால் அதற்கு அப்பா விரும்ப மாட்டார். என்ன செய்வது? சேர்ந்து யோசித்தனர். அனுசியன் உதவ முன்வந்தான். அனுசியனின் அப்பாவிடம் படகு இருந்தது. அது மோட்டார்ப் படகு. அப்பாவோடு சேர்ந்து படகு ஓட்டுபவன். படகு ஓட்டிய அனுபவமும் உண்டு. மோட்டார் திருத்தவும் பழகி இருந்தான். அனுசியன் மிகவும் கெட்டிக்காரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை அறிவிக்கப்பட்டது. சம்பூர் கோவில் உற்சவமும் தொடங்கியது. மாமாவும் வரும்படி அறிவித்து இருந்தார். அம்மா விடம் கூறினார்கள். படகில் செல்வதற்கு அப்பா சம்மதிக்கத் தயங்கினார். அம்மாவும் அப்பாவின் கருத்தை ஆமோதித்தார்.

அனுசியன் வந்தான். அவனுக்குச் செய்தியைச் சொன்னார்கள். உதவுமாறு கேட்டுக் கொண்டனர். அனுசியன் தனது அப்பாவிடம் வந்தான். உதவும்படி கேட்டுக் கொண்டான்.

அனுசியனின் அப்பா சங்கர் மிக நல்லவர். சங்கரும் ஆசிரியர்தான். பிள்ளைகளின் மனதை நன்கு அறிந்தவர். நிமேசிக்காவின் அப்பாவும் நல்லவர். அவர் ஒரு டாக்டர். பிள்ளைகள் நல்ல அனுபவம் பெறுவதை விரும்புபவர். முரளியும் சங்கரும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் உறவினர்கள். சங்கர் முரளியின் வீட்டுக்கு வந்தார். முரளி அவரை வரவேற்றார். நலம் விசாரித்தார்கள். கதையோடு கதையாக சங்கர் விடயத்தைக் கூறினார்.

''நான் சம்பூர் செல்ல விருக்கிறேன். பிள்ளைகள் ஆசையோடு கேட்கிறார்கள். சம்பூர்த் திருவிழாவும் தொடங்கி விட்டது. உங்கள் பிள்ளைகளும் ஆசைப்படுகிறார்கள். என் மகன் கூறினான். பிள்ளைகளது ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும். அது நமது கடமை. உங்கள் பிள்ளைகளையும் அனுப்புங்கள். எனது படகில் ஆபத்தில்லாது போய்வரலாம். என்னை நம்புங்கள்'' சங்கர் நிதானமாகக் கூறினார்.

சங்கர்மேல் மதிப்பும் மரியாதையும் இருந்தது. முரளி பிள்ளை களது ஆசையை நினைத்தார். முரளி யோசனையில் ஆழ்ந்தார். சங்கர் நிலைமையைப் புரிந்து கொண்டார்.

''பயமில்லை. பிள்ளைகளுடன் நானும் செல்கிறேன். அனுப்புங்கள்''. என்றார்.

''கடல் பயணம். அதுதான் சற்று யோசிக்கிறேன். பரவா யில்லை. அனுப்பி வைக்கிறேன்''

முரளி மறுக்க முடியாமல் சம்மதித்தார். இவர்களது உரை யாடலை உற்றுக் கேட்டனர். அனுமதி கிடைக்க வேண்டும். இறைவனைப் பிரார்த்தித்தனர். பிரார்த்தனை வீண் போக வில்லை. பலித்து விட்டது. பிள்ளைகளுக்குச் செய்தி இனித்தது. பிள்ளைகள் சந்தோஷத்தில் துள்ளினர். இறைவனுக்கு நன்றி கூறினர். ஆளுக்காள் கை குலுக்கிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

வெள்ளிக்கிழமை ஒன்றுகூடினர். அனுசியன் வந்தான். கூடவே நிசோ,அபிசேக், மது, சசாங்கன், சனோவும் வந்தனர். மூன்று நாட்களுக்குத் தங்க நேரிடும். அதற்குத் தேவையான பொருட்கள் வேண்டும். அதையிட்டு ஆராய்ந்தனர். வேண்டிய பொருட்களின் பட்டியலைத் தயாரித்தனர். பெரிய பட்டியல் தயாரானது. நிமேசிக்கா பட்டியலைச் சரிபார்த்தாள். ரதீபன் பட்டியலை எல்லோரிடமும் கொடுத்தான்.

‘‘நாளைக் காலையில் புறப்பட வேண்டும். ஆறு மணிக்கு ஜெற்றியில் சந்திப்போம். சங்கர் மாமா அங்கே காத்திருப்பார்.’’ எனக் கூறிப் பிரிந்தனர்.

இரவு முழுவதும் சிறுவர்கள் உறங்கவில்லை. பொழுது விடிந்தது. வேண்டிய பொருட்களை எடுத்துக் கொண்டனர். பயணத்துக்கான வேலைகளைச் சங்கர் கவனித்தார். உண்பதற் காக பிஸ்கற் வகைகளும் வந்தன. வெந்நீர் குடுவைகளில் தேநீரும் எடுத்தனர். படகில் பலவகை வசதிகளும் இருந்தன. ஒரு கிழமைக்கு வேண்டிய உணவுப் பொருட்களும் இருந்தன. ஒரு வீட்டைப் போன்று தெரிந்தது.

பிள்ளைகளின் பெற்றார் இறங்குதுறை(ஜெற்றி)க்கு வந்தனர். படகுடன் அனுசியன் நின்றான். அவன் பக்கத்தில் சங்கர் காத்திருந்தார். படகு நீரில் அசைந்து கொண்டிருந்தது. முரளியும் அனுஜாவும் பிள்ளைகளோடு வந்தனர். தங்கள் பெற்றாரிடம் விடை பெற்றனர். படகில் சிறுவர்கள் ஏறினர். அனுசியன் படகில் ஏறுவதற்கு உதவினான். நிமேசிக்கா, ரதீபன், நிரூசன், சனோ, என வரிசையாக ஏறினர். ஏறும்போது அசைந்து ஆடி ஏறினர். சிரிப்பும் கும்மாளமும் தாண்டவம் ஆடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர் பிள்ளைகளை நெறிப்படுத்தினார். முரளிக்குச் சற்று நிம்மதியாக இருந்தது. எல்லோரது பொதிகளையும் படகில் ஏற்றினர். படகு புறப்படத் தயாரானது. சங்கர் படகில் இருந்து இறங்கினார். முரளியோடு உரையாடினார். முரளியும் சங்கரும் கைகுலுக்கிக் கொண்டனர். பிள்ளைகளின் பெற்றோரிடமும் உரையாடினார். பின் சங்கர் படகில் ஏறிக் கொண்டார். பிள்ளை களுக்குக் கட்டளை பிறப்பித்தார். நிமேசிக்கா படகினுள் சென்றாள். இருப்பவர்களைக் கணக்கெடுத்தாள். பன்னிரண்டு பேர் படகில் இருந்தனர்.

அனுசியன் படகை இயக்கினான். ரதீபன் பக்கத்தில் நின்று கொண்டான். சங்கர் புன்னகையோடு நின்றார். எல்லோரும் பெற்றோர்களைப் பார்த்தனர்.

''கவனமாகப் போய் வாருங்கள்''.

பிள்ளைகளின் பெற்றோர் விடை கொடுத்தனர். படகு புறப் பட்டது. எல்லோரும் கை அசைத்து விடைபெற்றனர். படகு நீரைக் கிழித்துச் சென்றது. படகின் பின்னால் நுரை மாலையாக விரிந்தது.

சின்னஞ் சிறு குமிழிகள் உருவாகி உடைந்தன. சூரிய வெளிச்சம் பட்டுப் பளிச்சிட்டன. நீலக்கடலில் வெண்ணிற மாலைகள். அன்று கற்பனையில் கண்ட காட்சிகள். இன்று கண் முன்னால் தெரிந்தது. நிமேசிக்கா இருகைகளிலும் கடல் நீரை அள்ளினாள். சந்தோஷத்தால் மேலே வீசினாள். தண்ணீர் மழைத் துளிகள் போல் வீழ்ந்தன. அண்ணார்ந்து பார்த்தனர். நீர்த் துளிகள் முகத்தில் வீழ்ந்தன. உப்புக் காற்றை உள்ளிழுத்துச் சிலிர்த்தனர். அதனால் மகிழ்ந்து ரசித்தனர். படகு போய்க் கொண்டிருந்தது.

திருகோணமலைத் துறைமுகம் இயற்கை அழகு மிக்கது. உள்துறை முகம் அழகானது. மிகப் பாதுகாப்பானது. பல மலைத் தொடர்கள் தென்பட்டன. அவை கடலுள் நீண்டிருந்தன. இயற்கை அரணாக இருந்தன. தம்மை மரஞ்செடி கொடிகளால் போர்த் திருந்தன. செம்மையும் பசுமையும் கலந்து காட்சியாகியது. துறைமுகம் சுறுசுறுப்பாக இயங்கியது. வெளிநாட்டுக் கப்பல்கள் நங்கூரமிட்டு நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகம் நண்டுக் காலின் கொடுக்குப்போல் தெரிந்தது. மலைத் தொடர்களின் ஊடாக இடைவெளி தெரிந்தது. அது துறைமுக வாசல். படகு அதனூடாகச் சென்றது. நிமேசிக்கா அதிசயமாகப் பார்த்தாள். இரண்டு கைகளையும் முன்னால் விரித்தாள். இரு பெருவிரல்களையும் சேர்த்துப் பிடித்தாள். சுட்டு விரல்களைப் பட்டும் படாதவாறும் இணைத்தாள். ஏனைய விரல் களை ஒரே சீராகப் பிடித்தாள். மலைத் தொடர்களையும் பார்த்தாள். அவளது விழிகள் விரிந்தன.

''அண்ணா இங்கே பாருங்கள். என்னைப் போல் செய்யுங்கள்'' என்று விரல்களைக் காட்டினாள். எல்லோர் கவனமும் நிமேசிக்கா பக்கம் திரும்பின. நிமேசிக்கா போல் அவர்களும் செய்தனர். சரிபார்த்துக் கொண்டாள்.

''இப்போது மலைத் தொடர்களையும் பாருங்கள். இரண்டு பெரு விரல்களும் சேர்ந்துள்ளன. சுட்டு விரல்களைச் சேருங்கள். ஆனால் ஒன்றிலொன்று படக்கூடாது. ஒரு முக்கோணம் உருவாகி உள்ளது. சரியா என்று கவனியுங்கள்''.

நிமேசிக்கா கூறியபடியே செய்தனர். அப்படியே மலைத் தொடர் களையும் பார்த்தனர். நிமேசிக்கா சொன்னது போலவே இருந்தது. சுட்டு விரல்கள் பட்டும் படாமலும் இருந்தன. மலைத் தொடர் களின் இருமுனைகளும் அவ்வாறே இருந்தன. ஒரு வீட்டின் நுழை வாயில்போல் தெரிந்தது. துறைமுகத்தினுள் இதனூடாகவே கப்பல்கள் போகும். கடற்படைப் படகுகள் உலா வந்தன. சில வெளியேறின. சில உள்ளே நுழைந்தன.

நீலக் கடல் நெளிந்து கொண்டிருந்தது. காற்று அலைகளை முட்டி மோதவைத்தது. துறைமுக வாயிலைப் படகு கடந்தது. திருகோணமலை நகரைப் பார்த்தனர். மிக அழகாகக் காட்சி அளித்தது. கடலில் மீன்பிடி வள்ளங்கள். விதையாத வயல்தான் கடல். அது மனிதருக்கு வாரி வழங்குகிறது. கடலை நம்பி மக்கள் வாழ்கிறார்கள். கடல் இல்லாவிட்டால் மழை இல்லை. சூரிய வெப்பத்தால் கடல்நீர் ஆவியாகிறது. மேலெழுந்து ஒடுங்குகிறது. பின் மழையாகப் பெய்கிறது. பயிர்கள் செழிக்கின்றன. மரஞ் செடி கொடி மண்ணில் வளர்கின்றன.

***'விசும்பின் துளி வீழின் அல்லால் மற்றுஆங்கே***
***பசும்புல் தலை காண்பு அரிது'.***

வகுப்பில் கற்ற திருக்குறள் நினைவாகியது.

கடல்மீது காற்று விளையாடியது. கடல் நெளிந்து அமிழ்ந்து எழுந்தது. சிறிய அலைகளை வீசிச் சிரித்தது. நுரைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ்த்தன. அவற்றை மாலைகளாகத் தொகுத்து விரித்தது. கடலின் அழகுக்காட்சி கவர்ந்தது. மனதிலே கவிதை வந்து மோதியது.

''பாட்டுப் பாடுவோமா'' என்று நிமேசிக்கா தொடங்கினாள். பாடுமுன் மெட்டமைத்தாள். பின் பாடினாள்.

**தான தனத் தானினா**
**தான தனத் தானினா.**
**தான தனத் தானினா**
**தான தானத் தானினா**

**நீலக் கடல் நெளியுது.**
**நிமிர்ந்து வளைந்து சுழலுது**
**நீல வானும் சிரிக்குது.**
**நீந்தும் மேகம் பறக்குது.**

நிரூசன் தொடர்ந்து அதே இசையில் பாடினான்.

**காற்று நீரைக் கலக்குது.**
**கரையில் அலையை ஒதுக்குது.**
**பார்த்து மனதும் துள்ளுது.**
**பாடல் பிறந்து நடிக்குது.**

அவனைத் தொடர்ந்தான் ரதீபன். தாளம் தப்பாது பாடினான். அவனோடு அனைவரும் சேர்ந்தனர்.

**காற்று மெல்ல வீசுது.**
**கடலில் கப்பல் போகுது.**
**மேற்கு நாட்டுப் பொருட்களும்**
**வந்து குவிந்து கிடக்குது.**

அனுசியன் எழுந்து நின்றான். தாளம் போட்டான். பாடலைப் பாடி முடித்தான்.

**பாடல் பெற்ற துறைமுகம்**
**பலரும் புகழும் மறையகம்**
**ஆடல் வல்ல கோணேசர்**
**ஆளும் நல்ல திருத்தலம்.**

எல்லோரும் கவிஞராகி விட்டனர். பாடல் பிறந்தது. இசை சேர்த்து எல்லோரும் பாடினர். சங்கர் மகிழ்ந்து போனார். அவரும் சேர்ந்து பாடினார். ஒரே கலகலப்பாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

திருகோணமலை நகர் பின்னோக்கி நகர்கிறதா? நிரூசனுக்குப் புதிராகத் தெரிந்தது.

''அண்ணா நாங்கள் போகிறோமா? அல்லது திருகோணமலை நகர்ந்து போகிறதா''?

நிரூசன் வியப்போடு கேட்டான்.

''நாங்கள்தான் போகிறோம். சிலநேரம் நிலம் போவதாகத் தெரியும்.''

ரதீபன்விளக்கினான். ஆனாலும் நிரூசனுக்குப் புரியவில்லை. மீண்டும் கேட்டான்.

''அது எப்படி ? எப்படித் தெரியும்?

''படகு போய்க் கொண்டு இருக்கிறது. படகில் நாம் இருக்கிறோம். படகில் இருந்து நிலத்தைப் பார்க்கிறோம். அப்போது நிலம் நம்மிலிருந்து பின்னோக்கிப் போகும். படகில் இருந்து முன்னால் பார். படகு போவதை உணரமுடியும். விளங்குதா''? ரதீபன் விளக்கமாகச் சொன்னான்.

நிரூசன் அப்படியே திரும்பிப் பார்த்தான். மீண்டும் மீண்டும் பார்த்தான். அவனுக்கு விளங்கி விட்டது. நிமேசிக்கா கற்பனையில் இருந்தாள். அவள் இராமாயணம் படித்தவள். அது நினைவுக்கு வந்தது. கற்ற விடயங்களை அலசினாள். திருகோணமலை நகர் கடலில் மிதப்பதுபோல் காட்சியாகியது.

''கம்பர் இராமாயணத்தில் குறிப்பிட்ட இலங்கை இதுதான்.''

நிமேசிக்கா மனதில் நினைத்துக் கொண்டாள். படகு துறை முகத்தை விட்டு நீங்கியது. பாடல் பெற்ற கோணேஸ்வர ஆலயம் தெரிந்தது. ஆலயம் உயர்ந்த பாறைத்தொடரில் உள்ளது. பாறைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரைச் சூழந்து கடல். பாறையில் இராவணன் வெட்டுப் பளிச்சிட்டது.

இராவணன் வெட்டில் அலை மோதியது. உடைந்து சிரித்து ஆர்ப்பரித்தது. கரிய பாறையில் வெண்நிற மத்தாப்பு விரிந்தது. பாறையில் படர்ந்து இறங்கியது. நீர்த்திவலைகள் தூறலாய் விழுந்தன. இசையாகி காற்றில் கலந்தது. கரிய பாறையில் அழகுக் காட்சி. பார்த்து மகிழ்ந்தனர்.

''மாமா இராவணன் பலசாலியா? பாறையை வாளால் வெட்டினானா? இந்த வெட்டு எப்படி உருவாகியது''? நிரூசன் வினா தொடுத்தான்.

சங்கரின் கண்கள் விரிந்தன. அவர் புன்னகை செய்தார். ''இராவணன் மிகுந்த பலசாலி. மாமன்னன். இலங்கையினை ஆண்டவன். இசையில் வல்லவன். அவனைக் கம்பர் எப்படிச் சொல்வார் தெரியுமா?'' வினாவைக் கேட்டார். கேட்டு விட்டு எல்லோரையும் பார்த்தார். ஆவலோடு அவரையே பார்த்தனர். அவரே தொடர்ந்தார். வைத்த கண் வாங்காது பார்த்தனர். அவர் இப்போது சித்தி அமரசிங்கம் போலாகி விட்டார். சித்தி அமரசிங்கம் ஒரு பிறவிக் கலைஞன். இராவணனாக நடித்துப் புகழ் பெற்றவர். மேடையில் அவர் ஏறினால் இராவணேசன்தான். கதாப் பிரசங்கம் செய்வதில் வல்லவர். திருக்கோணமலைக்குப் புகழ்சேர்த்த கலாபூசணம்.

அவரைப் போல் சங்கர் தொடர்ந்தார். அவரது இமைகளும் நடித்தன.

''வாரணம் பொருத மார்பன். வரையினை எடுத்த தோளன். தாரணி மௌலி பத்தும் கொண்டவன். சங்கரன் கொடுத்த வாளை உடையவன்.''

அவர் அடுக்கிக் கொண்டே போனார்.

''மாமா வரை என்றால் என்ன''? மௌலி என்றால் என்ன''? நிரூசன் குறுக்கே கேட்டான்.

'' வரை என்றால் மலை. மௌலி என்றால் அரசர்கள் அணியும் முடி.'' அனுசியன் பதிலளித்தான். மாமா தொடர்ந்தார். குட்டிக் கதாப்பிரசங்கமே செய்தார்.

''தன் தாய்மேல் அன்பு கொண்டவன். தாய் கோணேசப் பெருமானின் பக்தை. நிதமும் கோயிலுக்குப் போவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலை வலம் வந்து வணங்குவாள். அவளுக்கு உடல்நலம் குன்றியது. கோயிலுக்குச் செல்ல முடியவில்லை. கவலை அடைந்தாள். தன் தாயின் மனவேதனையை அறிந்தான். நேரே கோணேசர் மலைக்குச் சென்றான். திருக்கோணமலை நகரைப் பார்த்தான். அது குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றியது. கோயிலைச் சுற்றிப் பார்த்தான். சுற்றிவரக் கடல். கோயில் இருக்கும் பாறையைப் பார்த்தான். அற்புதமான கோயில். அந்தக் கோயில் அமைந்த இடத்தைப் பார்த்தான். அந்த அழகில் தன்னை மறந்தான். தன் தாயையும் நினைத்தான். தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை. அல்லவா? என்பதையும் நினைந்தான்.

''வருவது வரட்டும். அம்மாவின் முன்னால் கோயிலை வைப்பேன்.'' என்று தனது வீரவாளை உருவினான். மலையைப் பெயர்க்க எண்ணி வெட்டினான். அது பிளந்தது. அந்த இடத்தைத் தடவினான். தன் பலத்தை உடலில் சேர்த்தான். அவனது தோள்கள் மலை போன்றன. தனது தோள்களைக் கொடுத்துப் பெயர்த்தான். மலை சற்று அசைந்தது. கோயிலினுள் இறைவன் இருந்தார். அவர் விழிகள் மூடியிருந்தன. இமைகள் மூடி தியானத்தில் இருந்தார். இறைவனின் தியானம் கலைந்தது. கண்கள் மூடியபடியே இருந்தன. நிலைமை இறைவனுக்குப் புரிந்தது.

தனது வலக்கால் பெருவிரலை மெல்ல அழுத்தினார். மலை இராவணனை அழுத்தியது. அவனுக்குத் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. வேதனையில் சிக்கி நொந்தான். இரத்தம் கசிந்தது. மூச்சுத் திணறியது. அங்கே நாரதர் வந்தார். இராவணனின் துயரைக் கண்டார்.

''இராவணேசா நீ இசையில் வல்லவன். அல்லவா? இறைவனும் இசையில் மகிழ்பவன். இறைவனை மகிழ வை. சாமகீதத்தைப் பாடு''. என்றார்.

இராவணன் இசையில் வல்லவன். வீணையைக் கொடியாகக் கொண்டவன். அவன் சாமகீதம் இசைத்தான். அவனது இசை இறைவனை ஈர்த்தது. இறைவன் மெய்மறந்தார். மெல்ல மெல்ல விரலழுத்தம் விலகியது. இராவணனின் வலியும் குறைந்து வந்தது. தான் செய்த தவறை உணர்ந்தான். இறைவன் மகிழ்ந்தார். அவனுக்கு இறைவன் அருளும் கிடைத்தது. அழியாப் புகழும் கிடைத்தது. இராவணன் வெட்டு இன்றும் இருக்கிறது.''

என்று சங்கர் கதையைக் கூறி முடித்தார். பிள்ளைகள் மெய்மறந்து கேட்டு ரசித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

சற்று நேரம் அமைதி நிலவியது. ரதீபன் அமைதியைக் கலைத்தான். அவன் விஞ்ஞானக் கருத்துக்களைக் கூறினான்.

''மாமா இது கடலின் தின்னற்செயல். சூரிய வெப்பத்தினால் பாறை விரிவடைகிறது. இரவில் குளிரினால் பாறை சுருங்கு கிறது. இது தொடர்ந்து நடைபெறும். அப்போது பாறை விரிந்து சுருங்கும். இதனால் பாறையில் வெடிப்புக்கள் உருவாகும். பின் சிதைவுகள் ஏற்படும். கடற் பிரதேசங்களில் அலையின் செயல் அதிகம். கடலலை பாறையில் மோதி அடிக்கும். தொடர்ந்து இச்செயல் நடைபெறும். இதனால் பாறை சிதைந்து கரையும். மென்பாறை விரைவில் கரையும். வன்பாறை நிமிர்ந்து நிற்கும். இதனை தின்னற் செயல் என்பார்கள். இந்தத் தின்னற் செயலினாற்தான் இராவணன் வெட்டும் வந்தது.'' என்றான். அனுசியன் தொடர்ந்தான்.


''பூமி நிலத்தையும் நீரையும் கொண்டது. நிலத் திணிவுகள் தான் கண்டங்கள். நீர்ப்பகுதிகள் சமுத்திரங்கள் ஆகும். இவை புவி ஓட்டில் உள்ளன. புவி ஓடு தடிப்பானது. கோள வடிவானது.

புவியோடு ஆறு தகடுகளைக் கொண்டது. கோளத்தினுள் கனிமங்கள் உண்டு. இவை கொதி நிலையில் உள்ளன. மின் காந்த அலைகளைத் தோற்று விக்கின்றன. மின்காந்த அலைகள் புவி ஓட்டைத் தாக்குவன. தாக்கும் போது புவிநடுக்கம் தோன்று கிறது. எரிமலைகள் வெடிக்கின்றன. புவித் தகடுகள் ஒன்றை ஒன்று தள்ளும். இதனைத் தகட்டோட்டம் என்றழைப்பர்.

தகட்டு ஓட்டத்தினால் கண்டங்கள் நகரும். நகரும்போது அழிவுகள் ஏற்படும். கடல் பொங்கும். நாடுகள் அழியும். இதனைக் கடல்கோள் என அழைப்பர். கடல்கோள்களால் பல நகரங்கள் அழிந்தன. சமூகக் கல்வி ஆசிரியர் கற்பித்தார்.'' மூச்சு விடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசியன் கூறினான். இமை வெட்டாது கேட்டுக் கொண்டிருந்தனர்.

''மாமா! செங்கை ஆழியானைத் தெரியுமா? அவர் புவியியல் நிபுணர். பல நூல்களை எழுதியுள்ளார். அவரது நூல்கள் படிக்க இலகுவானவை. இலகுவாக விளங்கும். தகட்டு ஓட்டம் பற்றியும் எழுதியுள்ளார்'' நிரூசன் கடலைப் பார்த்தபடி கூறினான்.

''செங்கை ஆழியான் கிண்ணியாவில் உதவி அரசாங்க அதிபராக இருந்தவர். சிறந்த பேச்சாளர். நாவலாசிரியர். சிறுகதை எழுத்தாளர். சிறுவருக்கு நாவலும் எழுதியுள்ளார். அவரைப் பற்றி நீங்கள் அறிவது நல்லது. அவரது நூல்களை வாசித்து இருக்கிறேன். நமது அறிஞர்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும். அது நமக்குப் பெருமை.'' சங்கர் மனம் திறந்து கூறினார்.

திருகோணமலையின் இயற்கை அமைப்பை வியந்தனர். கைகளின் விரல்களைப் போல் மலைத்தொடர்கள். இருபக்கமும் விரிந்து இருந்தன. மலைத்தொடர்களுக்கு இடையே கப்பல் நிற்கும். அது வெளித் தெரியாது. பல கப்பல்கள் ஒளிந்து நிற்கலாம். சூறைக்காற்றும் கப்பலைத் தாக்காது. எதிராளிகளது கப்பல்களும் காணமுடியாது. அதனால்தான் அந்நியர் திருகோணமலையை விரும்பினர்.

சங்கர் கடல் பக்கம் பார்த்தார். பாட்டம் பாட்டமாக மீன்களின் கூட்டம். துள்ளிப் பாய்ந்து மறைந்தன. வகை வகையான மீனினம். சிறிதும் பெரிதுமாய் வந்தன. எட்டிப் பார்த்து மறைந்தன. சுறாக் கூட்டம் விரைவாய்ச் சென்றது. அடையல்கள் நீர்மேல் ஆடி மிதந்தன. கடல் பாசிகள் மிதந்து அலைந்தன. டொல்பின்கள் நீந்தி விளையாடின. படகின் பின்னாலும் முன்னாலும் நீந்தின. கூட்டம் கூட்டமாகச் சென்றன. சத்தமிட்டுப் பாய்ந்து துள்ளின. அவைகள் மனிதர்களின் நண்பர்கள். படகைச் சூழ்ந்து கொண்டன. குரல் எழுப்பிப் பாடின.

அவற்றைத் தொட ஆசை. கையை நீட்டமுன் ஓடிமறைந்தன. பின் ஓடிவந்து தலையைக் காட்டின. நிமேசிக்கா சந்தோஷத்தால் துள்ளினாள். சந்தோஷம் வந்தால் பாடலும் வரும். ரதீபன் பாடல் ஒன்றைத் தொடங்கினான்.

**கப்பல் ஒன்று கடலிலே**
**காற்றைக் கிழித்துப் போகுது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உப்புக் காற்று ஊதியே**
**உறுமிக் கொண்டு வீசுது.**

எல்லோரும் சேர்ந்து பாடினர். பின்னர் சிரித்து ரசித்தனர். இப்போது நிரூசன் பாட மற்றவர்களும் தொடர்ந்து பாடினர்.

**அலை உருண்டு திரளுது.**
**ஆடிக் கரையில் மோதுது.**
**அலை கிழித்துக் கப்பலும்**
**நுரை பரப்பிப் போகுது.**

அனுசியன் பார்வை கடலில் இருந்தது. படகு போய்க் கொண்டு இருந்தது. மிகக் கவனமாகப் படகைச் செலுத்தினான். அவனும் சேர்ந்து பாடினான். போட்டி போட்டுப் பாடினர்.

**கடல் அடியில் மீனினம்**
**கப்பல் உள்ளே மனிதனும்**
**நடத்தும் காட்சி நாடகம்.**
**நினைக்க எல்லாம் வேடிக்கை.**

அனுசியனை வியப்போடு பார்த்தனர். அவனது பாடல் தத்துவம் பேசியது. சங்கரும் அவர்களோடு சேர்ந்து கொண்டார். ஒரே சிரிப்பாக இருந்தது. சங்கருக்கு நல்ல குரல்வளம். நன்றாகப் பாடுவார். அவர் இப்போது பாடினார். பிள்ளைகள் கை தட்டி ஆரவாரித்தனர்.

**கடல் அடியில் மனிதனும்**
**கப்பல் உள்ளே மீனையும்**
**எடுத்து வைத்தால் வாழ்க்கையும்**
**எல்லாம் ஆடிப் போகுமாம்.**

சங்கரின் பாடல் இனித்தது. அவரது குரல் வளத்தைப் பாராட்டினர். தொடர்ந்து எல்லோரும் அந்தப் பாடலைப் பாடினர். உல்லாசப் பயணம் சந்தோஷமாக இருந்தது.

அனுசியன் நிதானமாகப் படகைச் செலுத்தினான். நீலவான் பரப்பில் வெண்மேகக் கூட்டம். திரள் திரளாக உலாப் போயின. வானைப்போல் கடலும் பரந்து கிடந்தது. தூரத்தே பல படகுகள் தெரிந்தன. அவை போவதும் வருவதுமாக இருந்தன. நேரம் போய்க் கொண்டிருந்தது. படகும் நீந்திச் சென்றது. திடீரென வானம் கறுத்தது. வெண்மேகக் கூட்டம் நிறம் மாறின. வானத்தைப் போல் கடலும் கருமை கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6


கடல் பொங்கி ஆர்ப்பரித்தது. காற்றுப் பலமாக வீசியது. பெரிய அலைகள் படகில் மோதின. படகு தள்ளாடியது. மேலெழுந்து துள்ளி வீழ்ந்தது. அலைகள் படகை மூழ்கடிக்க முனைந்தன. கடல் நீர் படகுள் எட்டிப் பார்த்தது. அமைதியாய் இருந்த கடல் ஆர்ப்பரிக் கிறதே. மனதில் பயம் புகுந்து கொண்டது.

சங்கர் பயத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. ரதீபன் கையில் வாளி இருந்தது. படகினுள் புகுந்த கடல்நீரைப் பார்த்தான். வாளியால் அள்ளி இறைத்தான். எல்லோரும் துரிதமாகச் செயற் பட்டனர். இயற்கையோடு போராட்டம். சங்கர் படகை மிகக் கவன மாகக் கையாண்டார். அனுசியன் அப்பா சொல்வதைச் செய்தான்.

படகின் இயந்திரத்தினுள் நீர் புகுந்து கொண்டது. இயந்தி ரத்தின் இயக்கம் நின்று விட்டது. படகு அந்தரத்தில் எத்தப்பட்டது. பின் அப்படியே வீழ்ந்தது. பிள்ளைகளுக்குப் புது அனுபவம். பயமாகவும் இருந்தது. அதேநேரம் சந்தோஷமாகவும் இருந்தது. படகு மேலெழுந்து விழும். அப்போது பிள்ளைகள் கீச்சிட்டனர். காற்றும் மழையும் சேர்ந்து கொண்டது. கடலில் பெரும் போராட்டம். நிமேசிக்கா சுற்றிப் பார்த்தாள். படகில் உள்ள இருக்கையைப் பிடித்துக் கொண்டாள்.

காற்று படகை ஆட்டிப் படைத்தது. சங்கருக்கு இது புதியதல்ல. இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்களைச் சமாளித்தவர். படகில் பிள்ளைகள் இருந்தனர். அதனால் பயந்தார். படகின் சமன் நிலையைப் பாதுகாத்தார். அதனால் படகு மேலெழும். அதே போல் பொத்தென நீர்மேல் விழும். படகின் ஆட்டத்துக்கு ஏற்பப் பிள்ளைகளும் ஆடினர். படகு தளம்பாது நீரில் நீந்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுப் பலமாக வீசியது. காற்று வீசிய திசையில் படகு சென்றது. பத்து நிமிடங்கள் பயங்கரப் போராட்டம். படகு மெல்ல மெல்ல அசைந்தது. கங்கைக் கழிமுகத்தை அடைந்தது. மகாவலி கங்கை கடலுள் பாய்ந்து கொண்டிருந்தது. கங்கையும் கடலும் சங்கமமாகி விளையாடின.

காற்றின் வேகம் குறைந்து விட்டது. மகாவலி கடலுள் புகுந்தது. கடல் அதற்கு இடமளித்தது. கங்கைநீரைச் சேர்த்துக் கொண்டது. கடல் அலைகளால் மூடிக் கொண்டது. கங்கை நீர் கடலுள் வெகு தூரம் சென்றது. சிவப்பும் கருநீலமும் கலக்கும் தோற்றம். சங்கர் உற்றுப் பார்த்தார். அற்புதமான காட்சி. இப்போது காற்று மெதுவாக வீசியது. பயம் ஓடி விட்டது.

அவரது மனம் சந்தோஷப்பட்டது. பிள்ளைகளது மனதிலும் மகிழ்ச்சி வேண்டும். அவர்களை அதிர்ச்சியில் இருந்து திருப்ப வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களை உற்றுப் பார்த் தார். சற்று யோசித்தார். தான் இளமையில் கற்றதை நினைத்தார். கம்பராமாயணக் காட்சியை விளக்கினார். கும்பகர்ணனை வர்ணித்தார். அது பயங்கரமான நேரம். அந்த நேரத்திலும் அழகுக் காட்சியை ரசித்தனர். காற்றின் வேகம் குறைந்திருந்தது. பிள்ளை கள் உற்சாகமாகவே இருந்தனர்.

சங்கர் நிமிர்ந்து பார்த்தார். அங்கே உப்பாற்றுக் கிராமம். தென்னந்தோட்டம் தெரிந்தது. அவருக்கு உற்சாகம் பிறந்து விட்டது. அலைகள் மெலிதாகச் சுழன்றன. ஆழமற்ற பகுதியைக் கண்டு கொண்டார். அங்குதான் அலைகள் நெளியும். கரையை நாடிச் சாடும். சங்கர் புரிந்து கொண்டார்.

சற்றுத் தூரத்தில் மணற்திடல் இருக்கலாம். நீண்ட தடி படகில் இருந்தது. அந்தத் தடியை எடுத்தார். ஆழத்தை அறியும் ஆவல் பிறந்தது. தடியைக் கீழே விட்டார். மணற் திடல்தான் சந்தேகம் இல்லை. தடியை ஆழமாக ஊன்றினார். தடி கம்பமாக நின்றது. அதில் படகைக் கட்டினார். நங்கூரத்தையும் மெதுவாகக் கீழே இறக்கினார். ஆழம் குறைந்து காணப்பட்டது. படகு மெதுவாகவே அசைந்தது.

வானம் வெளுக்கத் தொடங்கியது. வெகு தூரத்தே கரு மேகங்கள் அசைந்தன. அவை உராயும்போது மின்னல் நெளிந் தது. மெலிதான முழக்கமும் உருவாகியது. மின்காந்தம் பற்றிய கதைகளை எண்ணினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' சூல்கொண்ட மேகங்களில் காந்தப்புலங்கள் உருவாகும். சில மேகங்கள் நேர்மின்னைக் கொண்டு இருக்கும். சில எதிர் மின்னைக் கொண்டு இருக்கும். இவை உராயும்போது மின்தாக்கம் ஏற்படுகிறது. மின்னல் உருவாகிறது. அது கண்களுக்குத் தெரிகிறது. ஒளி வேகம் கூடியது. அது விரைந்து வருகிறது. கூடவே ஒலியும் பிறக்கிறது. தொடர்ந்து ஒலி வருகிறது. நம் செவிப் பறையில் அதிர்கிறது. இந்த ஒலியை முழக்கம் என்கிறோம். அதனை இடியோசை என்றும் கூறுவர்.

சூல்கொண்ட மேகம் சக்திமிக்கது. வெகு தூரத்தில் மின்னு கிறது. அதனால் பயமில்லை. நமக்கு நேரே மின்னினால் ஆபத்து. நீர் நிலைகளில் நிற்பது ஆபத்து. மின்னல் தாக்கும். இப்போது பயமில்லை.''

நிமேசிக்கா விளக்கம் சொன்னாள்.

சங்கர் நீரில் இறங்கினார். படகின் இயந்திரத்தைத் திருத்து வதில் ஈடுபட்டார். 'பிளக்'கைக் கழற்றித் துப்பரவு செய்தார். அனுசியனும் நிரூசனும் அவருக்கு உதவினார்கள். ரதீபனும் மற்றவர்களும் நீரை வெளியேற்றினர். நேரம் போனதே தெரிய வில்லை. சூரிய ஒளி மேற்கில் பளிச்சிட்டது.

''அங்கே பாருங்கள்''

நிரூசன் சத்தமிட்டான். அவன் கை காட்டிய பக்கம் திரும்பி னார்கள். வானவில் தெரிந்தது.

''எப்படி வானவில் வந்தது?''

ஆராய்ந்தனர். சூரியனைப் பார்த்தனர். நேரே கருமேகக் கூட்டங்களையும் கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

"சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு. கருமேகங்களைச் சூரியஒளி ஊடறுக்கும். மேகம் நிறங்களை வடித்துவிடும். பூமி கோளவடிவம். சூரியஒளி அதற்கு ஏற்றாற்போல் விரியும். எதிர்த் திசையில் அந்த நிறங்கள் வில்லாக வளையும். வானவில் தெரியும்."

ரதீபன் விளக்கினான்.

காற்று இப்போது மெதுவாக வீசியது.

"அண்ணா 'விப்ஜியோர்' என்றால் என்ன"?

நிரூசன் வினா தொடுத்தான். அவனை அதிசயமாகப் பார்த்தனர். ரதீபன் சிரித்தான். அனுசியன் முந்திக் கொண்டான்.

"ஏழு நிறங்களைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்" என்றான்.

"அந்த ஏழு நிறங்களும் எனக்குத் தெரியும். ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு. சரிதானே"? நிரூசன் கூறிமுடித்தான்.

"நாங்கள் 'ஊகநீபமசெசி' என்று கூறினால் என்ன"? நிசோ அதிரடியாகக் கூறினான்.


"நினைவில் வைப்பதற்கு இலகுவானால் வைக்கலாம்". ரதீபன் பதில் அளித்தான்.

"அண்ணா 'விப்ஜியோர்'சொல் எப்படி வந்தது"?

நிமேசிக்கா கேட்டாள்.

"நிறங்களின் முதல் எழுத்துக்களை எடுத்தனர். அவற்றை ஒரு சொல்லாக்கினர். அது இப்படி வரும். பாருங்கள்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதீபன் ஒரு தாளை எடுத்தான். எழுதிக் காட்டினான். ஆங்கிலச் சொற்களை எழுதினான். நேரே தமிழ்ச் சொற்களையும் எழுதி னான். ஆவலோடு கேட்டு அறிந்து கொண்டனர்.

| | |
|---|---|
| Violet | ஊதா |
| Indigo | கருநீலம் |
| Blue | நீலம் |
| Green | பச்சை |
| Yellow | மஞ்சள் |
| Orange | செம்மஞ்சள் |
| Red | சிவப்பு |
| Vibgyor | ஊகநீபமசெசி |

ஆங்கில முதல் எழுத்துக்களைக் கூட்டினர். Vibgyor வந்தது. தமிழ் எழுத்துக்களைக் கூட்டினர். 'ஊகபமசெசி' என்று வந்தது. பலமாகச் சிரித்து மகிழ்ந்தனர். பல விடயங்களை அறிந்து கொண்டனர்.

சங்கரின் அழைப்பு வந்தது. சங்கரைப் பார்த்தனர். வந்து சங்கரோடு எல்லோரும் சேர்ந்தனர். அவருக்கு உதவினர். அவர் திருத்த வேலையில் ஆழ்ந்திருந்தார். நீருள் இறங்கிப் பார்க்க ஆசை. ஆவலை வெளிப்படுத்தினர். சற்றுத் தாமதிக்கும்படி கூறினார். வேலையில் கரிசனை காட்டினர். மேற்கு வானில் சூரியனின் அழகுக் காட்சி. நீருள் மெல்லிய ஒளிக் கீற்றுப் புகுந்தது. ஒளி விளையாடியது. நீரில் ஒளி பட்டுத் தெறித்தது. தண்ணீரில் சூரியன் தெரிந்தது. உயிரினங்கள் உலா வந்தன. அழகாய் இருந்தது.

ஒருவாறு திருத்த வேலைகள் முடிந்து விட்டன. அனுசியன் இயந்திரத்தை முடுக்கினான். அது இரைந்து வேலை செய்தது. எல்லோருக்கும் மகிழ்ச்சி. பயம் பறந்தோடி விட்டது. சங்கர் படகில் ஏறினார். இயந்திரத்தை முடுக்கி முடுக்கிப் பார்த்தார். அவரது முகத்தில் திருப்தி தெரிந்தது. ஆளுக்கொரு பொருளைக் கொடுத்தார்.

அது நீந்தும்போது முகத்தில் அணியும் கண்ணாடி. அணிந் தனர். நீருள் இறங்கினர். ஒருபுறம் கடல். மறுபுறம் மகாவலி கங்கை. கடல்நீரைச் சுவைத்தனர். உப்பாக ருசித்தது. கங்கை நீரையும் சுவைத்தனர். அது சுவையாக இருந்தது. இரண்டும் கலக்கும் இடத்தில் உவராகச் சுவைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின் அடியில் ஆராய்ந்தனர். பலவகை மீன் கூட்டங்கள். மகிழ்ந்து துள்ளி ஓடித்திரிந்தன. பல நிறங்களில் உலா வந்தன. பல வடிவங்களில் காணப்பட்டன. மிக அழகான சிறிய மீன்கள். ஒருபோதும் கண்டிராத மீன்வகைகள் உலா வந்தன. தங்க நிறத் தில் நீண்ட வால்களோடு வந்துபோயின. இடுப்பளவு ஆழமே இருந்தது. மணல் துல்லியமாகத் தெரிந்தது. சில இடங்களில் சகதியாக இருந்தது. சங்கரின் அனுமதியோடு வேடிக்கை பார்த் தனர். சங்கர் ஆழமற்ற பகுதியைக் கணக்கிட்டார். அது பரந்து கிடந்தது. பிள்ளைகளின்மேல் தனது கவனத்தைச் செலுத்தினார். அவரது கவனமெல்லாம் பிள்ளைகள் மேலேயே இருந்தது.

சில இடங்களில் ஆழம் குறைந்தே காணப்பட்டது. நிமேசிக்கா வும், ரதீபனும் உற்றுப் பார்த்தனர். நிரூசனோடு சற்றுத் தூரம் நடந் தனர். குனிந்து கொண்டே சென்றனர். அவர்களது பார்வை நீருக் குள்ளேயே இருந்தது. நீரடியைப் பார்த்த வண்ணமே நடந்தனர்.

ஆழம் இடுப்பைத் தாண்டியது. அதிசயமான காட்சி தெரிந்தது. பெரிய மீனொன்று ஆடாது அசையாது நின்றது. பெரியமீன் எதிர்த் திசையைப் பார்த்தபடி நின்றது. அவர்களை மீன் கவனிக்க வில்லை.

பெரிய மீனைச் சூழ்ந்து சிறிய மீன்கள். அவை பெரியமீனின் உடலில் விளையாடின. அந்த மீனைச் சுற்றி மொய்த்தன. ஒட்டி யிருந்த அழுக்குகளைப் பிடித்து உண்டன. மீனின் உடல் சுத்த மாகியது. அனைவரும் சத்தமின்றிப் பார்த்தனர். அப்படியே நின்று அவதானித்தனர்.

இப்போது அந்தப் பெரியமீன் உடலை வளைத்தது. அசைந்து சிலிர்த்தது. சிறியமீன்கள் விலகி நின்றன. நொடிப் பொழுதில் ஓடி மறைந்தது. இன்னுமொரு பெரியமீன் வந்தது. அந்த இடத்தில் அசையாது நின்றது. சிறியமீன்கள் தங்களது சேவை யைத் தொடங்கின. பெரியமீனின் உடலைச் சுத்தம் செய்தன. மீன்களும் ஒன்றுக்கு ஒன்று உதவுகின்றன. தங்கள் வீட்டுப் பசுவை நினைத்தனர்.

''இப்படித்தானே நமது வீட்டுப் பசுவும். அது மரத்தின்கீழ் படுக்கும். காகம் வந்ததும் புரண்டு கிடக்கும். காகம் பசுவில் உள்ள ஒட்டுண்ணிகளை அகற்றும். அழுக்குகளை உண்டு சுத்தப்படுத் தும். வேலை முடிந்ததும் காகம் பறந்துவிடும். பசுவும் தொல்லை நீங்கி மகிழும்.'' நிமேசிக்கா விளக்கமாகச் சொன்னாள்.

''விலங்குகளும் சமுதாயமாகி வாழ்கின்றன'' நிசோ சிரித்த படியே கூறினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

நேரம் போனதே தெரியவில்லை. சங்கர் எல்லோரையும் அழைத்தார். வந்து சேர்ந்தனர். அனுபவங்களைக் கூறினர். தனது கையை நேரே நீட்டினார். அவரது கை கிண்ணியாவை நோக்கி நீண்டிருந்தது.

''அங்கே தெரிவது கிண்ணியா விரிகுடா. அதனைத் தம்பலகாமக் குடா என்றும் கூறுவர். அங்கு முத்து விளைகிறது. ஒரு காலத்தில் முத்து எடுக்கப்பட்டது. இன்றும் முத்துச் சிப்பி ஓடுகளைக் காணலாம். இப்போது கவனிப்பார் இல்லை. நமது நாட்டின் வளம் நமக்கே புரியாதுள்ளது''.

சங்கர் கவலையோடு கூறினார். எல்லோருக்கும் புதிராக இருந்தது. கடற் பரப்பைப் பார்த்தனர். சங்கரே தொடங்கினார்.

''புறப்படும் போதே இரண்டு மணி. இப்போது ஐந்து மணி ஆகிறது. வேளைக்குப் போய்ச் சேரவேண்டும். அங்கே உங்கள் மாமா காத்திருப்பார். வீட்டில் உங்கள் பெற்றார் கவலை அடைவார்கள். புறப்படுவோம். படகில் ஏறுங்கள்'' என்றார். படகை இயக்கினார். சம்பூரை நோக்கிப் படகு சென்றது.

'' மாமா படகு நின்றதும் நல்லதுதான். நாங்கள் பலவற்றைக் கற்றுக் கொண்டோம். அழகான பலவகை மீன்களைக் கண்டோம். கடல்நீரையும் ருசித்தோம். கங்கைநீரையும் சுவைத்தோம். வான வில்லைப் பார்த்தோம். அதன் நிறங்களைக் கற்றோம். கும்ப கர்ணனைக் காட்டினீர்கள்.''

நிமேசிக்கா அனுபவத்தை விளக்கினாள். படகு கடற் பகுதிக்குள் நுழைந்தது. ரதீபனுக்கு விசித்திரமான எண்ணம் தோன்றியது. வாளியை எடுத்தான். நீளமான கயிற்றையும் எடுத்தான். வாளி யைக் கயிற்றில் கட்டினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அவனை வேடிக்கையாகப் பார்த்தனர்.

'' ரதீபன் என்ன செய்யப் போகிறாய்?'' அபிசேக் கேட்டான்.

''குடிப்பதற்கு நல்ல தண்ணீர் வேண்டுமா? தண்ணீர் எடுக்கப் போகிறேன்''

ரதீபன் கூறிக் கொண்டே செயற்பட்டான். கடலில் எப்படி குடிக்க நீர் கிடைக்கும்? அனைவரும் கேலியாகச் சிரித்தனர். சிந்தித்தனர்.

'' ரதீபன் இது கடல். உப்புத் தண்ணீர்தான் கிடைக்கும்.''

ஏகோபித்த குரல்கள் ஒலித்தன. ரதீபன் சிரித்துக் கொண்டான். வாளியைக் கடலுள் விட்டான். அது ஆழமாகப் போனது. அவனது செயலை அவதானித்தனர். வாளியை மேலும் கீழுமாக அசைத்தான். பின் வாளியை வேகமாக மேலிழுத்தான். வாளி தண்ணீரோடு வந்தது. ஆவலோடு தண்ணீரை எடுத்தான். வாயில் விட்டுச் சுவைத்தான். சந்தோஷத்தால் துள்ளினான். அவனை விசித்திரமாகப் பார்த்தார்கள்.

அவன் சிரித்துக் கொண்டே ''யுறேக்கா! யுறேக்கா! குடித்துப் பாருங்கள். நடுக்கடலில் நல்ல தண்ணீர். கண்டு பிடித்து விட்டேன். நானும் ஒரு ஆக்கிமிடிஸ். நான் விஞ்ஞானி. ஹேய்! வெற்றி..'' ரதீபன் கைகளை மேலேதூக்கி ஆடினான். எல்லோரும் விழுந்தடித்துச் சுவைத்தார்கள். ஆச்சரியமாக இருந்தது. நடுக்கடலில் எப்படி நல்ல நீர் கிடைக்கும்?. யோசனை பிடித்து விட்டது. ரதீபன் தொடங்கினான்.

''மகாவலி திருகோணமலைக் கடலில் சங்கமிக்கிறது. கடலுள் நீண்ட தூரம் வரை பாய்கிறது. கடல்நீர் மேலாகத் தெரியும். அடியில் நல்ல நீர் ஓடும். அது குறிப்பிட்ட தூரம்வரை கிடைக்கும். இதனை அப்பா சொல்லித் தந்தார். அதைப் பரீட்சித்துப் பார்த்தேன். வெற்றி. அனுபவம் கிடைத்து விட்டது. இதுதான் கல்வி''

அவன் கூறுவதை நன்றாக அவதானித்தனர்.

'' அதுசரி, அப்பாவுக்கு எப்படித் தெரியும் அவர் எனக்குச் சொல்லவில்லையே?.

நிமேசிக்கா தொடர்ந்தாள். அவளுக்கு அது தெரிந்திருக்க வில்லை. மறந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' ஒரு கப்பல் கடலில் சென்றது. குடிநீரின் இருப்புக் குறைந்து விட்டது. அக் கப்பலில் இருந்து உதவி கோரப்பட்டது. தூரத்தில் சென்ற கப்பலின் தலைவன் புரிந்துகொண்டான். புன்னகைத் தான். ''தண்ணீர் அடியில் உண்டு. வாளியைப் போட்டு எடுக்க வும்'' என்ற செய்தியை அனுப்பினான். இந்தக் கப்பலின் தலைவனுக்குப் புரியவில்லை. மீண்டும் செய்தி அனுப்பினான். ''வாளியைக் கடலில் போடுங்கள். நீர் கிடைக்கும்''

என்ற பதில்தான் வந்ததாம்.

கப்பலின் தலைவன் குழம்பினான். கொஞ்சம் யோசித்தான். கட்டளை இட்டான். வாளியை நீண்ட கயிற்றில் கட்டினார்கள். கடலடியில் விட்டார்கள். மேலும் கீழும் அசைத்தார்கள். பின்னர் இழுத்து எடுத்தார்கள். அவர்களுக்கு ஆச்சரியம். நல்ல தண்ணீர் கிடைத்து விட்டது.

எப்படிக் கிடைத்தது? பெரிய ஆறுகள் கடலில் கலக்கின்றன. நைல்நதி, அமேசன், கொங்கோ நதிகள் அப்படியானவை. கடலடியில் பல கிலோமீற்றர் வரை ஓடும். மேலே உப்பு நீர். அடியில் நல்ல நீர் ஓடும். அவர்களுக்கு அந்த ஆற்றுநீரே கிடைத்தது. இன்றும் மாலுமிகள் இவ்வாறு நீரைப் பெறுகி றார்கள். என்று அப்பா சொன்னார். கடல்நீர் அடர்த்தி குறைந்தது. நன்னீர் அடர்த்தி கூடியது. அடர்த்தி கூடியது கீழே போகும். அடர்த்தி குறைந்தது மேலே வரும். கடல் நீர் அடர்த்தி குறைந்தது. கங்கை நீர் அடர்த்தி கூடியது. அதனாலேயே கடல் அடியில் நல்லநீர் கிடைத்தது.''

ரதீபன் சொல்லி முடித்தான். நிமேசிக்காவுக்கு அப்பா கூறியது நினைவுக்கு வந்தது.

''சே .. நான்தான் மறந்து போனேன். அப்பா பாவம்.''

அப்பாவை நினைத்தாள். தலையை அசைத்துக் கொண்டாள். தனது செயலுக்காக வருந்தினாள்.

படகு சென்று கொண்டிருந்தது. இன்னும் செல்ல வேண்டும். படகின் இயந்திரம் குழப்படி செய்தது. தூரத்தே அந்த செம்மலைத்தீவு தெரிந்தது. அந்தத் தீவுக்குப் போக எண்ணினார்கள். தீவின் கரையில் படகைத் திருத்தலாம். வசதியாக இருக்கும். அத்தீவில் இருந்து சம்பூருக்கு இலகுவாகப் போகலாம். படகு நிற்பதும், ஓடுவதுமாகச் சென்றது. ஒருவாறு மலைத்தீவை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஐந்தரையைத் தாண்டி விட்டது. படகைக் கரைக்கு இழுத்தனர். தீவு அழகாக இருந்தது. கரையில் மணல் விரிந்து கிடந்தது. மரஞ்செடி நிறைந்து பூத்துக் குலுங்கின. பல மலைத் தொடர்கள் காணப்பட்டன. இடையிடையே அழகான பள்ளத் தாக்குகள் தென்பட்டன. அது ஒரு குட்டித் தீவு. சுமார் இரண்டு கிலோமீற்றர் அகலமுடையது. மூன்று கிலோமீற்றர் நீளமுடையது. கடல் நடுவே அத்தீவு இருந்தது. கிறேவலும் செம் மண்ணும் கலந்திருந்தது. அதனாலேயே செம்மலைத் தீவு என்றனர். கரையோரம் வெண்மணல் காணப்பட்டது. படகிலிருந்த தேநீர் சிற்றுண்டி வகைகளை எடுத்தனர். ஒரு விரிப்பையும் கொண்டு வந்தனர். மணலில் நிமேசிக்கா விரிப்பை விரித்தாள். எல்லோரும் அதில் அமர்ந்தனர். சிற்றுண்டியை ருசித்து உண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

‘‘மாமா இங்கே பாருங்கள்’’.

நிமேசிக்கா விரலால் சுட்டிக் காட்டினாள். எல்லோர் கண்களும் நோக்கின. கடற்கரை மணலில் பெரிய தடங்கள். ஆழமாகப் பதிந்திருந்தது. ஆச்சரியமாக இருந்தது. அத்துடன் பயமாகவும் இருந்தது.

‘‘யானையின் கால் தடம்’’ என்றான் நிசோ.

‘‘இது யானையின் காலடித் தடம் இல்லை. யானையின் தடம் வட்டமாக இருக்கும். இது மனிதரின் பாதங்களைப் போல் பெரிதாய் இருக்கிறது. மாமா! விரல்களின் அடையாளமும் இருக்கிறது. நன்றாகப் பாருங்கள்.’’

ரதீபன் உறுதியாகச் சொன்னான். ஏதோ பெரிய சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையைப் பார்த்தார்கள். வெகுதூரத்தில் பெரிய உருவம். அது அசைவது தெரிந்தது. மிகவும் உயரமாகத் தெரிந்தது. அதன் அசைவில் வேகம் தெரிந்தது. தொடர்ந்து விலங்குகளின் அலறல். அவற்றின் அவல ஒலி கேட்டது. அவை ஓடித் திரிந்தன. பறவைகள் அலறியடித்துப் பறந்தன.

‘‘இந்தத் தீவில் ஏதோ நடக்கிறது. மாமா! இது என்னவாக இருக்கும்’’?

நிமேசிக்கா சங்கரைப் பார்த்துக் கேட்டாள். ‘‘முதலில் படகைத் திருத்துவோம். பிறகு அதனைப் பார்ப்போம்.’’

கூறியபடி படகைத் திருத்துவதில் ஈடுபட்டார். அவருக்கும் மனதுள் பயம். அவர் காட்டிக் கொள்ளவில்லை. இருள் சூழ்ந்து கொண்டு வந்தது. எனினும் சூரியஒளி தெளிவாக இருந்தது. நடப்பது கண்களுக்குத் தெரிந்தது. இயந்திரத்தைத் திருத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியைத் தொடங்கினர். சங்கர் முழு முயற்சியில் ஈடுபட்டார். எடுபிடி வேலைகளை எல்லோரும் செய்தனர். வேகமாக முயற்சித்தனர். நேரம் போய்க் கொண்டிருந்தது. ஆனால் வேலை தான் முடியவில்லை.

நிமேசிக்கா சற்று யோசித்தாள். ரதீபனைப் பார்த்தாள். அவனுக்கு விளங்கி விட்டது. இருவரும் நகர்ந்தனர். பெரிய பாறைத்தொடர் குறுக்கிட்டது. அது நிலத்திலிருந்து பத்தடி உயரங்கொண்டது. முன்நோக்கி நீண்டிருந்தது. மெதுவாக அதில் ஏறினர். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பார்த்தனர். தீவு முக்கோண வடிவில் அமைந்து இருந்தது. மலைத் தொடர்கள் விநோதமானவை. ஒரு படகின் தோற்றத்தில் தீவு இருந்தது. கடல் பக்கம் குத்துச் சாய்வாக தெரிந்தது. நிலப்பக்கம் மென்சாய்வாக அமைந்திருந்தது. மத்தியில் சமநிலமாகக் காணப்பட்டது. கோணேசமலையை நினைத்துக் கொண்டனர். பயங்கர அலறல் மீண்டும் கேட்டது. அவர்களுக்கு நெஞ்சு படபடத்தது. சங்கர் ஓடி வந்தார். ஏனையோரும் வந்து சேர்ந்தனர்.

பெரிய உருவம் ஓடுவதைக் கண்டனர். விலங்குகள் பதறியடித்து ஓடின. பறவைகள் களைத்துப் பறந்தன. அந்த உருவம் இவற் றைத் துரத்தின. பிடிக்க முயற்சித்தது. யாவும் ஓடித் தப்ப முனைந் தன. ஓடியோடிக் களைத்தன. வெருண்டு கொண்டிருந்தன. பார்க்கப் பயமாக இருந்தது. அதேவேளை பாவமாகவும் இருந்தது.

''இது யானையா? அல்லது மனிதமிருகமா''? கண்களாலேயே கேள்வி கேட்டனர். பதில்தான் கிடைக்கவில்லை. நிமேசிக்கா பாறைத் தொடரின் உச்சியை அடைந்தாள். பின்னால் ஏனை யோரும் தொடர்ந்தனர். நன்கு உற்றுப் பார்த்தனர். உயரமாகத் தெரிந்தது. அது ஒரு மனிதமிருகம். ஓடியோடிக் களைத்து விட்டது. நீண்ட கால்கள் தெரிந்தன. அவை யானையின் கால்கள்போல் தெரிந்தன. வால் இல்லை. பாய்ந்தும் நடந்தும் திரிந்தது. முன்னால் இருப்பது கால்களா? கைகளா? விளங்கவில்லை. கைகள்தான் அவை. சிறியதாய்த் தெரிந்தன. நீளம் குறைந்தவை. கங்காரு போன்ற தோற்றம். முதலையின் தலை. வாயைப் பிளந்து கொண்டு ஓடும். கைகளை முன்னால் நீட்டும். தாவித் தாவி ஓடும். அது ஒரு மானைத் துரத்தியது. மான் வேகமாக ஓடியது. இப்போது பாறையை நோக்கி வந்தது. மனித மிருகத்தின் கவனம் மான்மீதே இருந்தது. அதன் உருவத்தைக் கண்டு கொண்டனர். அவர்கள் மறைந்து கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்படியான மிருகத்தை நாங்கள் காணவில்லை. இது என்ன மிருகம்''

ஆளையாள் கேட்டுக் கொண்டனர்.

''இதுதான் குறங்குட்டான்''

ரதீபன் தெரிந்ததாகக் கூறினான். அவன் கூறியது சரிதானென ஏற்றனர். குறங்குட்டான் என்றே பெயரிட்டனர்.

குறங்குட்டான் களைத்து மெதுவாகச் சென்றது. அதன் நடையில் தளர்வு தெரிந்தது. தட்டுத் தடுமாறி நடந்தது. கழுத்தோடு ஒட்டியவாறு பெரிய முதலைத் தலை. யானைபோல் சத்தமிட்டது. வாயைப் பிளந்து அலறியது. அதற்கு ஒன்றும் அகப்படவில்லை. தூரத்தே சென்று மறைந்து விட்டது. இருளின் ஆட்சி தொடங்கி விட்டது. வானில் நட்சத்திரப் பூக்கள். அலையின் ஆரவாரம். எங்கும் அமைதி நிலவியது. நிலவின் பூரிப்பு.

பயத்துடன் பார்த்தனர். படகு திருத்தப்பட்டுவிட்டது. சங்கருக்குத் திருப்தி. இருள் சூழ்ந்த நேரம். இரவில் கடற்பயணம் ஏற்றதல்ல. பிள்ளைகள் பயப்படுவர். சங்கர் அஞ்சினார். தீவின் மர்மத்தை அறிய வேண்டும். நிமேசிக்கா ரதீபனோடு ஆலோசித்தாள். சங்கருக்குப் பிள்ளைகளது திட்டம் புரிந்துவிட்டது. அவரே கருத்தை வெளியிட்டார்.

''இரவுப் பொழுதை இங்கேயே கழிப்போமா''?

சங்கரின் குரல் ஒலித்தது. பிள்ளைகள் ஏகோபித்த குரலில் சம்மதித்தனர். வாழ்க்கையில் இப்படியான சந்தர்ப்பங்கள் கிடைப்பதரிது. இன்று இத்தீவை ஆராய வேண்டும். மெதுவாகப் பாறையை விட்டு இறங்கினர். படகின் அருகே சென்றனர். விரிப்புகளில் அமர்ந்தனர். உணவைப் பரிமாறி உண்டனர். படங்கை எடுத்து வந்தனர். விரித்துப் பாறையோடு இணைத்தனர். அருமையான வீடு உருவாகியது. விரிப்புக்களை விரித்தனர். சுற்றி அமர்ந்து கொண்டனர். சங்கர் காவலாக இருந்தார். நேரம் மெது வாகச் சென்றது.

குறங்குட்டான் பற்றியே விவாதித்தனர். ஏதோ மெல்லிய சத்தம் கேட்டது. அது பாறையின் அருகிலேயே கேட்டது. காது கொடுத்துக் கேட்டனர். மெதுவாக பாறைத் தொடரில் ஏறினர். ஒளிந்திருந்து நடப்பதைப் பார்த்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. விலங்குகளும் பறவைகளும் கூடியிருந்தன. கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

'' இப்படியே இருந்தால் அழிந்து விடுவோம். எங்காவது ஓடுவோம்.'' அந்த முள்ளம்பன்றி கூறியது.

''எங்கே நாம் போவது? சுற்றிவரக் கடல். எப்படிப் போவது''? முயல் முன்னால் வந்து சொன்னது.

''சந்தோஷத்தை இழந்து விட்டோம். எங்களை இந்த அரக்கன் விடாது. நாங்கள் அழிந்தோம்.''

மயில் வாட்டத்தோடு கூறியது.

''யார் அந்த அரக்கன்''?

நிமேசிக்கா ரதீபனிடம் கேட்டாள்.

''நீயே கேள்''

என்றான் ரதீபன். காது கொடுத்துக் கேட்டனர்.

''நடப்பதைப் பார்ப்போம். கவனியுங்கள்.''

அனுசியன் பேசினான். விலங்குகளும் பறவைகளும் உரையாடின. கேட்கப் பாவமாக இருந்தது. இவற்றுக்கு எவ்வாறு உதவலாம். யோசித்தனர். கூட்டத்தில் சூடு பிடித்து விட்டது. பன்றி எழுந்தது.

''இனியும் பொறுக்க முடியாது. எல்லோரும் அணி திரள்வோம். ஒன்றாகச் சேர்ந்து எதிர்ப்போம்.'' உணர்ச்சி ததும்பக் கூறியது.

''மடத்தனமாய்ப் பேசாதே. அந்தக் குறங்குட்டானை நம்மால் எதிர்க்க முடியாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரடி அடித்துச் சொன்னது. தூரத்தே குறங்குட்டானின் அலறல் கேட்டது. யாவும் பயந்து நடுங்கின.

''சத்தத்தைக் கேட்டே நடுக்கம் எடுக்கிறது. நம்மால் எதிர்க்க முடியாது.''

வான்கோழி நடுங்கியபடி கூறியது. சற்று நேரம் அமைதி நிலவியது. கலைமான் ஓடிவந்து நின்றது. கலைமானையே யாவும் பார்த்தன. ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டும். கவனமாகக் கேட்டனர்.

''குறங்குட்டான் என்னைத் துரத்தியது. ஓடித் தப்பி வருகிறேன். நரி காட்டிய குழியுள் புகுந்தேன். குறங்குட்டான் என்னைக் காண வில்லை. தப்பி வந்தேன். நரியார்தான் காப்பாற்றினார்.''

கலைமான் நடுங்கியவாறு கூறியது. நரியார் மெதுவாக நுழைந் தார். அவர் சொல்வதை யாவும் அவதானித்தன. நரியார் ஒரு கனைப்போடு தொடங்கினார்.

''நாம் வாழும் இந்தத் தீவு நம்முடையது. நமது தோழர்களைக் காப்பாற்ற வேண்டும். அந்த எதிரியை விரட்டவேணும். அதற்கு வழிதேட வேணும். அமைதியாக நாம் வாழவேண்டும்.'' சொல்லி விட்டு உலவினார். அமைதி நிலவியது. அமைதியை நிமேசிக்கா கலைத்தாள். குரலை மாற்றினாள்.

''உங்கள் பிரச்சினை என்ன? சொல்லுங்கள். நாங்கள் உதவி செய்கிறோம்.''

அவற்றின் மொழியிலேயே பேசினாள். பறவைகள் பயந்து பார்த்தன. விலங்குகளும் சுற்றி நோட்டம் விட்டன. மோப்பம் பிடித்தன. மிருகங்களின் மூக்குகள் விரிந்து சுருங்கின. சுழன்று வந்தன.

''பேசியது யார்''?. ''நீ பேசினாயா .. நீ பேசினாயா''

ஆளையாள் கேட்டுக் கொண்டன. குறுக்கும் மறுக்கும் நடந்தன.

''நான் பேசவில்லை... நான் பேசவில்லை.'' என்னும் பதிலே கிடைத்தது. அவற்றுக்குப் பயம் பற்றிக் கொண்டது.

நிமேசிக்கா நிலமையைப் புரிந்து கொண்டாள்.

''நான்தான் பேசினேன். நாங்கள் மனிதர்கள். தீங்கு செய்ய மாட்டோம். உங்களுக்கு உதவி செய்வோம். பயப்பட வேண்டாம்.'' சொல்லிக் கொண்டே வெளியில் வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மனிதர்களா அவர்கள் பொல்லாதவர்கள். எங்களை வேட்டை ஆடுவார்கள். நாங்கள் அழிந்தோம்''. என்று சொல்லி மிருகங்கள் பதுங்கின. குரங்குகள் மரத்தில் தாவின. சில பறவைகள் பறந்தன. குட்டிகள் மட்டும் பயமின்றி நின்றன. பறவைக் குஞ்சு கள் அப்படியே இருந்தன. நிமேசிக்கா குட்டிகளை அன்போடு அணைத்தாள். அவற்றைத் தூக்கி வருடி விட்டாள். பறவைக் குஞ்சுகளை எடுத்துக் கொஞ்சினாள். மிருகங்களும் பறவைகளும் பார்த்தன. பிரமித்தன. சில முயல்கள்* முன்னே வந்தன. அவற்றையும் அன்போடு தடவினாள். பறவைகளும் வந்தன. யாவும் நிமேசிக்காவைச் சூழ்ந்து கொண்டன. பயமின்றி நின்றன.

''உங்கள் பிரச்சினை என்ன? அந்தப் பெரிய மிருகமா? ஏன் பயந்து வாழ்கிறீர்கள். சொல்லுங்கள்.''

நிமேசிக்கா ஆதரவாகக் கேட்டாள். மிருகங்களும் பறவைகளும் ஒன்று கூடின. தமக்குள் பேசிக் கொண்டன. நிமேசிக்காவை நோக்கி வந்தன. அவை ஒவ்வொன்றாகப் பேசின. அனுதாபத் தோடு கேட்டாள். கரடி எழுந்தது. மற்றவை அமைதியாக இருந்தன.

''நாங்கள் சந்தோஷமாக இத்தீவில் வாழ்ந்தோம். எங்கள் நிம்மதி போய்விட்டது. குறங்குட்டான் எங்களை வதைக்கிறது. அதை எதிர்க்கக் கூடிய சக்தி இல்லை. யானைகளோ புலிகளோ இல்லை. எப்படியோ இங்கு வந்துவிட்டது. அதை விரட்ட வழி தெரியவில்லை.''

மிக்க கவலையோடு கரடி கூறியது. நரியாரும் பேசினார்.

''நாங்கள் கவனமாக எங்களைப் பாதுகாக்கிறோம். பகலில் பயந்து வாழுகிறோம். இரவில் சுதந்திரமாகத் திரிகிறோம். இரவில்தான் உணவு தேடுகிறோம். ஒற்றுமையாக இருக்கிறோம்''

நிமேசிக்கா குறுக்கிட்டுக் கேட்டாள். அவளுக்கு ஆர்வம் பெருகி யது. இந்த உயிர்கள் படும் பாட்டை உணர்ந்தாள்.

''இரவில்தான் சுதந்திரமா? பகலில் என்ன நடக்கிறது. கூறுங்கள்'' நிமேசிக்கா தொடர்ந்தாள்.

''பகலில் குறங்குட்டான் எங்களை வேட்டையாடும். தப்பிப் பிழைப்பது தம்பிரான் புண்ணியம். ஓடி ஓடிக் களைத்து விட்டோம். இனி ஓட இயலாது.''

நரியார் கூறிக்கொண்டு இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நொண்டி மரை முன்னே வந்தது. நிமிர்ந்து கூறியது. மற்றவை அதனைப் பார்த்தன.

''குறங்குட்டானுக்கு இரவில் கண்தெரியாது. இரவில் மலைக் குகையில் கிடக்கும். வெளியில் வராது. இரவில்தான் அதனைக் கலைக்கலாம்.''

நொண்டி மரை கூறியது. நரியார் மீண்டும் கனைத்தார். எழுந்தார். சற்று நடந்தார். யோசித்து விட்டுக் குந்தினார். பின் பேசினார்.

''எங்களுக்கு நீங்கள் உதவ வேண்டும். அழிவில் இருந்து காப்பாற்றுங்கள். எங்களுக்கு வேண்டும் சுதந்திரம். நிம்மதியாய் இருக்க வேண்டும்''

நரியாரின் பரிதாபம் புரிந்தது. நிமேசிக்கா யோசித்தாள். தன்னோடு வந்தவர்களை அழைத்தாள். ஒருவர் பின் ஒருவராக வந்தனர். பறவைகளும் விலங்குகளும் பார்த்தன. அவைகளுக்கு நம்பிக்கை வந்து விட்டது.

''சரி குறங்குட்டான் இப்போது எங்கிருக்கும்? காட்ட முடியுமா''?

ரதீபன் கூறினான். அவனை அதிசயமாகப் பார்த்தன. அவை பேசாது நின்றன.

''இரவில் அதற்குக் கண் தெரியாது. இல்லையா? சரி. அது இருக்கும் இடத்தைப் பார்ப்போம். பிறகு திட்டம் போடுவோம். எங்களைக் கூட்டிச் செல்லுங்கள்''

ரதீபன் தொடர்ந்தான். யாவும் மகிழ்ந்தன. சங்கர் பிள்ளைகளைப் பார்த்தார். அவர்களின் மனவுறுதியை மெச்சினார். நரியார் தலைமை தாங்கினார்.

''வாருங்கள். குறங்குட்டான் குகையை நோக்கிச் செல்வோம். குறங்குட்டானை நமது தீவில் இருந்து விரட்டுவோம். சுதந்திரமாக வாழ்வோம். வெற்றி நமதே.''

என்று கூறி முன்னால் நடந்தார். நிமேசிக்காவும் மற்றவர்களும் தொடர்ந்தனர். பறவைகளும் விலங்குகளும் பின் தொடர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

வானில் சிறுநிலவு பவனி வந்தது. நட்சத்திரங்கள் பார்த்துக் கண் சிமிட்டின. காற்றுக் குளிர்ந்து வீசியது. ஒன்றன் பின் ஒன்றாய் அணி வகுத்தன. நடந்தன. பெரிய படையணி நகர்ந்தது. பின்னால் நிமேசிக்காவின் அணி தொடர்ந்தது.


வழி கரடுமுரடாக இருந்தது. ஏற்றமும் இறக்கமும் தெரிந்தது. மணலும் புல்லும் கால்களுக்கு இதமளித்தன. மரஞ்செடி நிறைந்து இருந்தன. கொடிகள் குறுக்கிட்டன. நடந்து கொண்டே இருந்தனர். இப்போது நிலம் உயரமாகத் தெரிந்தது. பெரிய குறட்டைச் சத்தம் கேட்டது. நடை மெதுவாக நின்றது. படையணி ஒரு வட்ட வடிவில் நின்றது. நரியார் ரதீபன் பக்கம் வந்தார்.

தூரத்தே தெரிந்த மலைத் தொடரைக் காட்டினார். அது நீண்டு உயர்ந்து தெரிந்தது. இருள் சூழ்ந்து பயங்காட்டியது. ஒற்றையடிப் பாதை ஊடாக நடைதொடர்ந்தது. நரியார் வழி காட்டினார். சற்றுத் தூரம் நடந்தனர். நரியார் திரும்பினார். படையணியைத் திரும்பிப் பார்த்தார். அப்படியே நிற்குமாறு கூறினார். குரங்கு களைக் காணவில்லை. வானைப் பார்த்தார். அசையாது நின்றார். தூரத்தில் குரங்குகள் வருவதைக் கண்டார்.

அவைகள் பழங்களோடு வந்தன. அனைவருக்கும் பகிர்ந்தன. பழங்களை உண்டவாறே நடை தொடர்ந்தது. நிமேசிக்கா இத் தீவின் உயிரினங்களின் ஒற்றுமையை வியந்தாள். ரதீபன் பிரமித்து விட்டான். சங்கர் மாமாவுக்கு ஆச்சரியம்.

''எவ்வளவு ஒற்றுமையாக இவை செயற்படுகின்றன. ஒரு குறங்குட்டானால் இவற்றின் நிம்மதி போய்விட்டது. இவற்றின் துயரைப் போக்க வேண்டும். நாளை சம்பூர் போகலாம். இந்த உயிர்களுக்கு உதவுவது மேலானது. உதவுவோம்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தீர்மானித்துவிட்டார். பிள்ளைகளோடு கலந்து உரையாடி னார். அவர்கள் சந்தோஷத்தோடு வரவேற்றனர்.

''இந்த உயிர்களுக்கு உதவிய பின் செல்வோம்.'' ஏகமனதாகக் குரல் ஒலித்தது. சங்கருக்கு மகிழ்ச்சி. பிள்ளைகளை மனதினுள் புகழ்ந்தார்.

நரியார் உயரமான இடத்தில் நின்றார். ''எல்லோரும் அப்படியே நில்லுங்கள். நாங்கள் மட்டும் பார்த்து வருகிறோம். நாங்கள் வந்ததும் சேர்ந்து செயற்படுவோம். அதுவரை பொறுமையாய் இருங்கள்.''

நரியார் கூறி முடித்தார். யாவும் அப்படியே நின்றன. நரியார் வழி காட்ட நிமேசிக்காவின் குழு நடந்தது.

உயர்ந்து வளர்ந்த புதர்கள். அதன் ஊடாகச் சென்றனர். அது ஒரு ஒற்றையடிப் பாதை. வளைந்து நெளிந்து சென்றது. புதர்களை விலக்கி அகற்றிச் சென்றனர். வழி உயர்ந்து சென்றது. உன்னி ஏறினர். நிமேசிக்காவுக்கு வெயர்த்துக் கொட்டியது. மனதில் உதவும் எண்ணம் உருவாகியது. நடந்தனர். நரியார் நின்றார். முன்னங் கால்களை உயர்த்தினார். பின்னங் கால்களில் நின்றார். காதுகள் குத்திட்டன. தலையை அசைத்துப் பார்த்தார். மோப்பம் பிடித்தார். பின் சைகை காட்டினார். நடந்தவர்கள் அப்படியே நின்றனர். நரியார் மட்டும் முன்னே போனார். சற்று நேரத்தின் பின் வந்தார்.

பின்னால் சத்தமில்லாது வரும்படி அழைத்தார். அனைவரும் பின் தொடர்ந்தனர். ரதீபனுக்கு உற்சாகமாக இருந்தது. நிமேசிக்கா வுக்கு அதிசயமாக இருந்தது. நன்றாக உற்று அவதானித்தனர். அந்த மலைத் தொடர் அற்புதமானது. மிகவும் அழகானது. ஒரு குகையைக் கொண்டிருந்தது. அந்தக் குகை பத்தடி அகலமானது. அதேபோல் முப்பதடி நீளமானது. ஒரு சுரங்கப் பாதையும் இருந்தது. முன்புறம் பெரிய வாசலைக் கொண்டது. சுரங்கப் பாதை ஊடாகச் செல்லலாம். அந்தச் சுரங்கப் பாதை உயர்ந்து சென்றது. ஏறிச் சென்றால் உயரமான இடத்தில் முடியும். அங்கே ஒரு வாசல் இருந்தது. மெதுவாகச் சத்தமின்றி உள்ளே நுழைந் தனர். கவனமாகப் பார்த்துக் கொண்டனர்.

குறங்குட்டானின் குறட்டை ஒலி எதிரொலித்தது. நெஞ்சு படபடத்தது. பயத்தைக் காட்டிக் கொள்ளாது முன்னேறினர். பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம் அயர்ந்து படுத்து இருந்தது. அதன் மூக்கு விரிந்து மூடியது. மெதுவாக வெளியில் வந்தனர். நரியார் முன்னே நடந்தார். சத்தமிடாதவாறு பின்னால் நடந்தனர். மலையில் ஏறும் உணர்வு ஏற்பட்டது. சற்றுத் தொலைவில் வாசல் தெரிந்தது. நரியார் அந்தப் பக்கம் போனார். அதனைச் சுட்டிக் காட்டினார்.

''இந்தத் துவாரத்தின் ஊடாகவும் அது வெளியில் வரும். பகலில் குறங்குட்டான் இங்கு இருப்பதில்லை. அது இல்லாத வேளைகளில் நாங்கள் இங்கே ஒழிந்து கொள்வோம்''

நரியார் பரிதாபத்தோடு கூறினார். நிமேசிக்காவோடு அந்தக் குகையைச் சுற்றி வந்தனர். அந்தப் பாறையை நன்கு நோட்டம் விட்டனர். பின்புற வாசல் சிறியது. அதனூடாக வெளியே வந்தனர். பாறையின் அமைப்பைப் பார்த்தனர். நடந்து பாறையின் உச்சிக்கு வந்தனர். அந்த வாசலால் வெளிவரலாம். வந்தால் அதே வாசலாற்தான் திரும்ப வேண்டும். வேறு வழி யில்லை. நேரே சென்றால் பாறை முகட்டைச் சந்திக்கலாம். அது குத்துச் சரிவான பாறை. அதனைச் சூழ ஆழமான கடல். கடல் அலைகளை வீசி ஆர்ப்பரித்தது. உச்சியில் இருந்து விழுந்தால் அவ்வளவுதான். பிழைக்க முடியாது. நன்றாக அவதானித்தனர். சிறிய வாசலால் உள் நுழைந்தனர். வந்ததுபோல் திரும்பினர்.

பெரிய வாசலால் வெளிவந்தனர். மீண்டும் கடற்கரைக்கே வந்தனர். விலங்குகளும் பறவைகளும் குவிந்து நின்றன. மெதுவான அமைதி நிலவியது. நிமேசிக்கா யோசித்தாள். அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ரதீபன் வானைப் பார்த்தான். நிரூசன் ஒரு திட்டத்தைச் சொன்னான்.

''அண்ணா குறங்குட்டானுக்கு நெருப்புக்குப் பயம். குகை வாசலில் விறகுக் கட்டைகளைக் குவிப்போம். படகில் பெற்றோல் இருக்கிறது. எடுத்து வருவோம். விறகில் ஊற்றித் தீயை மூட்டு வோம். குறங்குட்டான் பயந்து ஓடிவிடும். எப்படி எனது திட்டம்.''

பெருமையாகக் கூறினான். எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. நிமேசிக்கா சிரித்துக் கொண்டாள். அவனைப் பாராட்டினர்.

''நிரூசன் சொன்னதைச் செயலாக்குவோம். அருமையான திட்டம். சரி எப்படிச் செயற்படுத்துவது''?

அனுசியன் குறுக்கிட்டான். எல்லோரும் சேர்ந்து யோசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குறங்குட்டான் உசாராகி விட்டால் என்ன செய்வது?''

நிசோ பயங்காட்டினான். அவன் இப்படியான கேள்விகளைக் கேட்பான். அதனால் நல்ல பயன் கிடைக்கும்.

''அதுவும் சரிதான். என்ன செய்யலாம்.? திட்டம் இருந்தால் கூறுங்கள்.''

சங்கர் மாமாவும் கலந்து கொண்டார்.

''இப்படிச் செய்தால் நமக்கு வெற்றி நிட்சயம்'' ரதீபன் சொன்னான்.

''எப்படி ..?

நிமேசிக்கா ஆவலோடு கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

ரதீபன் சிரித்தான். பின் தொடர்ந்து விளக்கினான்.

''இங்கு முதலில் தீ மூட்டுவோம். தீப்பந்தங்களை எல்லோருக்கும் கொடுப்போம். தீவிர பயிற்சி கொடுப்போம். பந்தங்களை எடுத்துக் கொள்வோம். பின் சென்று பாறையைச் சுற்றி நிற்போம். குகை முன்வாசலில் விறகுகளைக் குவிப்போம். பெற்றோலை ஊற்றித் தீ மூட்டுவோம். குறங்குட்டான் திடுக்கிடும். பாறையின் பின் துவாரத்தால் ஓடும். அது ஓடும்போது தீப் பந்தங்களை உயர்த்திப் பிடிப்போம். அலறியடித்து ஓடும். எல்லோரும் சேர்ந்து சத்தம் போடுவோம். பாறை குத்துச் சரிவானது. அது ஓடும்போது உரத்துச் சத்தமிடுவோம். தீப்பந்தங்பளை வீசிக் காட்டுவோம். கண்தெரியாது வேகமாக ஓடும். பாறையின் முடிவில் கீழே கடலில் விழும். குறங்குட்டான் கடலில் மிதக்கும். நிம்மதி வந்துவிடும். விடுதலையும் கிடைத்து விடும்.''

ரதீபன் விபரித்தான். நன்றாக யோசித்தனர்.

''மிதந்து கொண்டு இங்கேயே மீண்டும் வராதா? வந்தால் என்ன செய்வது. அதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.''

நிமேசிக்கா எச்சரிக்கைபோல் குறுக்கிட்டாள். ''குறங்குட்டான் மீண்டும் வராது.''

ரதீபன் உறுதியாகக் கூறினான்.

''எப்படித் திடமாகச் சொல்லலாம்?

சங்கர் மாமா சிரித்துக் கொண்டே கூறினார்.

''மாமா! குறங்குட்டான் விழப்போகும் இடம் மிக ஆழமானது. அடியில் கடினமான பாறைகள் உண்டு. எப்படி விழுந்தாலும் அடிபடும். கடல்நீரில் மூச்சுத் திணறிவிடும். அத்துடன் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் அமைப்பு மனிதரைப் போன்றது. நீரில் இலகுவில் அமிழக் கூடியது. அதன் கழுத்து கட்டையானது. விலங்குகளின் உடலமைப்பு நீரில் மிதக்கக்கூடியது. குறங்குட்டான் விதிவிலக்கானது. எனவே அது திரும்பிவர வாய்ப்பில்லை.''

ரதீபன் விபரமாக விளக்கினான். எல்லோரும் கவனமாக் கேட்டனர். ரதீபனின் அறிவை மெச்சினர்.

''சரி இனித் தாமதிக்க நேரமில்லை. நமது திட்டத்தைத் தொடங்குவோமா.? அடுத்துச் செய்வது என்ன''? நிசோ உசார்ப் படுத்தினான். ரதீபன் செயற்திட்டத்தை விபரித்தான்.

''நான் சொல்வதை நன்கு கவனியுங்கள். குழுக்களாகச் செயற் படுவோம். குழுக்களுக்குச் சில கடமைகள் தரப்படும். அதனை விரைவில் செய்ய வேண்டும். நாம் இந்தத் தீவிலுள்ள உயிர் களுக்கு உதவுகிறோம். இதனை மனதில் இருத்துங்கள். நமது திட்டம் வெற்றி பெறும். அதனால் எல்லோரும் செயற்பட வேண்டும்.''

விளக்கமாகக் கூறினான். கேட்டதும் உசாரானார்கள். ரதீபன் தொடர்ந்தான்.

''நமக்கு நிறைய விறகுகள் தேவை. இங்கும் தேவை. குகை வாசலிலும் வேண்டும்.''

கூறி முடிக்குமுன் குரங்குகள் பாய்ந்து வந்தன. அவற்றின் தலைவன் முன்னால் நின்றது.

''என்ன செய்ய வேண்டும். கூறுங்கள்''

''விறகு தேவை. உடனே வேண்டும்.''

''இதோ செய்கிறோம்''

தனது பரிவாரங்களை ஒருமுறை பார்த்தது. எதோ சைகை செய்தது. மகிழ்ச்சியோடு கூறியது.

''இதோ செய்கிறோம். நாங்கள் தயார். தேவையான விறகு களைக் கொண்டு வருகிறோம்.''

குரங்குகள் ஒரே குரலில் சத்தமிட்டன. கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. ரதீபன் தொடர்ந்தான்.

''இங்குள்ள அனைவருக்கும் தீப்பந்தங்கள் வேண்டும். இது கடற்கரை. இந்த இடத்திலும் விறகு வேண்டும். குகை வாசலிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகுகள் வேண்டும். அதனை விறகால் அடைக்க வேண்டும். அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.'' ரதீபன் கூறினான். குரங்குகளின் தலைவன் முன்னே பாய்ந்து வந்தது.

''அதனை நாங்கள் செய்கிறோம். அதுமட்டுமல்ல எல்லாக் குழுக்களிலும் பங்கு கொள்வோம்''

என்று கூறியது. பின் ஒரு ஒலி எழுப்பியது. குரங்குகள் ஒரு புறமாக ஒன்று கூடின. தமக்குள் ஏதோ பேசின. ஒரு முடிவுக்கு வந்தன. குரங்குகளின் தலைவன் திரும்பியது.

''களைப்பு வரும்போது உணவு வேண்டும். தண்ணீரும் வேண்டும். பழங்கள் தேவைப்படும். நல்ல பழங்களும் தண்ணீரும் வரும். ஏற்பாடு செய்துவிட்டேன்.''

ரதீபனைப் பார்த்துக் கூறியது. அடுத்த நிமிடமே அவை அங்கில்லை. செயலில் இறங்கி விட்டன. மனிதருக்கு அடுத்தபடி சிந்திப்பவை குரங்குகள். குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன். இதனை விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர். பரிணாம வளர்ச்சி பற்றிப் படித்ததை நினைத்தான். மற்றவர்களோடும் பகிர்ந்து கொண்டான். அவற்றின் செயற்பாடுகள் வியப்பை ஏற்படுத்தின. இராமாயணகாலம் காட்சியாகியது. இராமனுக்குக் குரங்குகள்தான் உதவின. அனுமான் சீதையைக் கண்டான். அவள் அசோக வனத்தில் சிறை இருந்தாள். அதனை இராமனிடம் கூறினான். போரில் குரங்குகள் பங்கு கொண்டன. ஆபத்தான போது சஞ்சீவி மலையைக் கொண்டுவந்தன. உயிர்களைக் காப்பாற்றின. அவற்றால்தான் இராமன் வெற்றி கண்டான். குரங்குகளின் ஆற்றலை வியந்தனர். அன்று இராமனுக்கு உதவி கிடைத்தது. இன்று நமக்கு குரங்குகள் உதவுகின்றன. குரங்குகளை வாழ்த்தினர்.

நிமேசிக்கா குனிந்து இருந்தாள். மணலில் படம் வரைந்தாள். கடற்கரை வரையப்பட்டது. அதிலிருந்து குகைக்குப் பாதை வரைந்தாள். குகையும் தெரிந்தது. தனது செயற் திட்டத்தைக் கூறினாள். கூறும் போது படத்தைச் சுட்டி விளக்கினாள்.

''அண்ணா சொன்னது விளங்கியதா? மீண்டும் நான் சொல்கிறேன். விறகு வந்ததும் இங்கு தீயை மூட்டுவோம். விறகுகளை குகை வாசலிலும் குவிக்க வேண்டும். இடைவெளி இல்லாது வாசலை மூடவேண்டும். அதற்குச் சங்கர் மாமாதான் தலைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு அனுபவம் உண்டு. விறகுகளை அடுக்க அவருக்குத் தெரியும். நிசோவும் நிரூசனும் மாமாவுக்குத் துணை. அனுசியன் பெற்றோலைக் கொடுக்க வேண்டும். பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் பயிற்சி தரப்படும். அனைவரும் இயன்றவாறு தீப்பந்தங்களை ஏந்தவேண்டும். அதற்குரிய பயிற்சியும் வேண்டும். பந்தங்களை ஏந்தி நடக்க வேண்டும். நடந்து குகையைச் சுற்றி நிற்கவேண்டும். குறங்குட்டான் குகையின் பின்வாசலால் வெளியேறும். பாறையின் இரு புறமும் தீப் பந்தங்கள் தெரியும். எல்லோரும் உரத்துக் கூச்சலிட வேண்டும். நாங்கள் குறங்குட்டானைப் பின்னால் தொடருவோம். அது ஓடிக்கொண்டே இருக்கும். முடிவில் வெற்றி நமதே.''

அவள் கூறுவதை நன்கு கேட்டனர். பறவைகளும் மிருகங்களும் குசுகுசுத்தன. குழுக்களாகச் சேர்ந்தன. விறகுகளைக் குரங்குகள் கொண்டு வந்தன. அவற்றை சிறிது பெரிதாகத் தெரிவு செய்தன. தெரிவு செய்வதில் அனைத்தும் ஈடுபட்டன. அவற்றை வல்லமைக்கு ஏற்பக் குவியலாக்கின. பெற்றோல் படகில் இருந்தது. அனுசியன் அதனை எடுத்து வந்தான். சங்கர் மாமா தனது குழுவை அழைத்தார். அவரைத் தொடர்ந்து குழு பின் சென்றது. சங்கர் மாமா குகையை அடைந்தார். குகையோரத்தில் விறகு குவிந்திருந்தது. அவர் அடுக்கத் தொடங்கினார். குரங்கு களும் சேர்ந்து கொண்டன. வாசலில் இடைவெளி இல்லை. விறகு மூடி இருந்தது.

அனுசியன் பெற்றோலை எடுத்துச் சென்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

கடற்கரையில் விறகு குவிக்கப்பட்டது. ரதீபன் விறகின்மேல் பெற்றோலை ஊற்றினான். நிமேசிக்கா தீக்குச்சியை எடுத்தாள். பற்றவைத்து வீசினாள். அது விறகுக் குவியலில் விழுந்தது. தீப் பற்றிக் கொண்டது. எல்லோருக்கும் சந்தோஷம் பிறந்து விட்டது. தீப் பந்தங்களை ஏந்தும் பயிற்சி நடந்தது. குரங்குகள் முதலில் பயிற்சி பெற்றன. பின் மிருகங்கள் பயிற்சி பெற்றன. குரங்குகள் பயிற்சிக்கு உதவின. பறவைகள் தீப்பந்தங்களை அலகுகளில் கௌவின. அதி தீவிரமான பயிற்சிகள் நடந்தன. கொம்புகள் உள்ள மிருகங்கள் ஒரு பிரிவாக நின்றன.

கொம்புகளில் தீப் பந்தங்கள் கட்டப்பட்டன. பயிற்சிகள் வேகமாக நடந்தேறின. யாவும் தீப் பந்தங்களோடு தீவிரமாக நின்றன. பார்ப்பதற்கு அழகாக இருந்தது. பறவைகள் தனியே வரிசையாக வந்தன. அவை தீப் பந்தங்களோடு பறந்தன. பறந்து வேடிக்கை காட்டின. வானம் எங்கும் தீப்பந்தங்கள் மத்தாப்பு விரித்ததுபோல் இருந்தது. தரையிலும் வானத்திலும் தீப் பந்தங்கள். பயிற்சிகள் முடிந்தன. இரு பிரிவுகளாகப் பிரிந்து குகையை நோக்கி நடந்தன.

கடற்கரையில் வரிசையாகத் தீப்பந்தங்கள். குகையைச் சூழ்ந்தும் தீப்பந்தங்கள். எங்கும் நீக்கமற நிறைந்திருந்தன. நிமேசிக்காவும் ரதீபனும் வந்து சேர்ந்தனர். விறகுக் குவியலைப் பார்த்தனர். அனுசியன் பெற்றோலை ஊற்றினான். நரியார் ஓடோடி வந்தார். அவரது வாயில் இரண்டு தீப் பந்தங்கள். விறகின் அடிப்பகுதிகளை வாயில் கௌவி இருந்தார். இரு புறமும் தீ சுவாலை விட்டு எரிந்தது. அவரது கண்களில் விடுதலை வேட்கை தெரிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நரியாரே தீயை நீங்களே மூட்டுங்கள்''

நிமேசிக்கா அன்புக் கட்டளை இட்டாள்.

நரியாருக்குச் சந்தோஷம். தீப் பந்தங்களோடு சுழன்று பாய்ந்தார். செவிகளை நிமிர்த்தி வாலை முறுக்கினார். கண்கள் சிவந்து தீவட்டிகளாய்த் தெரிந்தன. பதுங்கி எழுந்தார். பின் முன்னும் பின்னும் நகர்ந்தார். வேகமாகப் பாய்ந்தார். வாயில் இருந்த தீப்பந்தங்கள் அசைந்தன. அவை விறகுக் குவியலுக்குள் புகுந்தன. அவ்வளவுதான். விறகுக் குவியலில் தீப்பற்றிக் கொண்டது. பற்றிக் கொண்டதும் வாலைச் சுருட்டினார். துள்ளிக் குதித்தார். வானைப் பார்த்தார். வாயைத் திறந்தார். உற்சாகமாக பெரிதாக ஊளையிட்டார். தீ பற்றிக் கொண்டது. காய்ந்த விறகு பற்றி எரிந்தது.

இருளில் தீச் சுவாலை படபடத்து விரிந்தது. கூடவே புகையும் வெப்பமும் பரவியது. பறவைகளும் மிருகங்களும் ஒலியெழுப் பின. அபிசேக்கும் சனோவும் இசைக்கருவிகளை எடுத்தனர். மிருதங்கத்தையும் மத்தளத்தையும் பலமாகத் தட்டினார்கள். சல்லாரியைத் தொடர்ந்து ஒலித்தார்கள். ஒலி வானைப் பிளந்து இடித்தது. புகையும் வெப்பமும் குகையுள் புகுந்தது. வெளிச்சம் குகையின் இருளை விரட்டியது. சத்தமும் வெப்பப் புகையும் குறங்குட்டானை மிரட்டியது. முன்வாசல் பக்கம் தீ பற்றி எரிந்தது. குறங்குட்டானுக்கு மெல்ல மூச்சுத் திணறியது. அது பயங்கரமாக அலறியது. பறவைகளும் மிருகங்களும் பயந்தன. முன்னால் போக முடியவில்லை. பின் நோக்கி ஓடத்தொடங்கியது. பின்னால் உள்ளது சிறிய வாசல். அதனூடாக நுழைந்து வெளியில் வந்தது.

எங்கும் தீப் பந்தங்கள். கண்களைக் கூசச் செய்தன. பேரொலி காதுகளில் பாய்ந்தன. என்றும் இல்லாத பயங்கரம். என்ன இப்படி இருக்கிறது?. பயம் பிடித்துக் கொண்டது. அலறியபடி சுழன்று பார்த்தது. வாசலை விட்டு ஓடியது. ரதீபன் சந்தர்ப்பத் தைப் புரிந்து கொண்டான். தீப் பந்தத்தை உயர்த்தி அசைத்தான். குறங்குட்டான் நின்று சுழன்று பார்த்தது. முன்னும் பின்னும் தீப் பந்தங்கள். அதனைத் துரத்திச் சென்றன. பாறையின் இருபுறமும் தீப் பந்தங்கள் அசைந்தன. இளைக்க இளைக்க அது ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து செல்லும் நிலத்தில் இடறி ஓடியது. பின்னாலும் இருபக்கங்களிலும் தீப் பந்தங்கள். ஆரவாரம் அதிகரித்தது. நிமேசிக்கா உற்சாகப்படுத்தினாள். ரதீபன் மத்தளத்தைக் கையில் எடுத்தான். பலமாக அடித்தான். பெரும் சத்தமிட்டுத் துரத்தினான். பயந்து அலறியபடி குறங்குட்டான் ஓடியது. பின்னால் தீப் பந்தங்களும் தொடர்ந்தன. இருளில் தீப் பந்தங்கள் தெரிந்தன. பெரிய சத்தம் எழுந்தது. ஒன்றும் கண்களுக்குத் தென்பட வில்லை. தீப் பந்தங்கள் மட்டுமே தெரிந்தன. குறங்குட்டான் திக்குத் தெரியாமல் ஓடியது. எங்கு ஓடுவது எனத் தெரியாது ஓடியது. தீப் பந்தங்களும் பெரும் சத்தங்களுமே தொடர்ந்தன.

நிமேசிக்கா களைத்து விட்டாள். வெயர்த்துக் கொட்டியது. குறங்குட்டான் ஓடுவதைக் கண்டனர். ரதீபனுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. நிரூசனும் மற்றவர்களும் சிரித்துக் களைத்தனர். குரங்குகள் தண்ணீரும் பழங்களும் வழங்கின. பழங்களை உண்டார்கள். தண்ணீரைக் குடித்தார்கள். கடமையில் ஈடுபட்டார்கள்.

மான் மரைகள் தம் விருப்பப்படி ஆடின. அவற்றின் கொம்பு களில் தீப் பந்தங்கள் கட்டப்பட்டிருந்தன. கரடியார் இரு கால்களில் நடந்தார். முன்னங் கால்களில் தீப் பந்தங்கள். பறவைகள் தீப் பந்தங்களைத் தூக்கிப் பறந்தன. எங்கும் தீயின் விளையாட்டு. இனி தப்பிப் பிழைக்க முடியாது. குறங்குட்டானுக்கு வேறு வழி தெரியவில்லை.

ஓடிக்கொண்டே இருந்தது. தீப் பந்தங்களும் சத்தமும் தொடர்ந்து கொண்டே இருந்தன. தான் வேட்டை ஆடுவதை நினைத்துக் கொண்டது. பறவைகளும் மிருகங்களும் ஓடுவதையும் எண்ணிக் கொண்டது.

''எனது உயிரைக் காப்பாற்ற நான் ஓடுகிறேன். பாவம் இந்த விலங்குகள். இனி இந்தத் தீவில் இருக்க மாட்டேன். வேறு எங்காவது போவேன். இங்கு இருந்தால் நெருப்பு விடாது. இனி காய் கனிகளைத்தான் சாப்பிட வேண்டும். உயிர்களைக் கொன்று உண்ணல் பாவம். எங்காவது கால்போன பக்கம் ஓடுவோம்.''

எண்ணிக் கொண்டே விரைந்து ஓடியது. விரைவும் பயமும் மனதில் பரவியது. மலையின் உச்சிக்கு வந்துவிட்டது. மலை முடிவு குத்துச் சாய்வாக இருந்தது. அதனை குறங்குட்டான் அறிய வில்லை. ஓடியபடி பாய்ந்தது. அப்படியே பெரிய அலறலோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தது. கடல் இரைச்சலோடு பெரிய அலைகளை எறிந்தது. குறங்குட்டானின் அலறலும் இரைச்சலோடு சேர்ந்து விட்டது.

அங்கு பெரிய அமைதி நிலவியது. ஒரு சத்தமும் இல்லை. தீப் பந்தங்களும் அணையும் நிலையில் இருந்தன. பல தீப் பந்தங் களை ஒன்று சேர்த்தனர். அவற்றைப் பிடித்துக் கவனமாகப் பார்த் தனர். குறங்குட்டான் தென்படவில்லை. கரையிலும் அதனைக் காணவில்லை. மலை உச்சியில் இருந்து பார்த்தனர். குறங்குட்டா னின் அடையாளமே தெரியவில்லை. எங்கும் பயங்கர அமைதி. பறவைகளும் மிருகங்களும் ஒன்று சேர்ந்தன. படகை நோக்கி மெதுவாக நடந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

படகு நின்ற கடற்கரை வந்தது. அங்கே ஒன்று கூடினர். பழங்களும் தண்ணீரும் வழங்கப்பட்டன. நரியார் முன்னே வந்தார். கரடியாரும் சேர்ந்து கொண்டார். முயல் முன்னால் பாய்ந்து நின்றது. எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர். நிமேசிக்காவின் கைகளைக் கரடியார் பிடித்தார். நரியார் ரதீபனின் கைகளைப் பற்றினார். ச2ங்கர் மாமாவைக் குரங்குகளின் தலைவன் கட்டிப்பிடித்தது. ஆளுக்காள் கைகளைச் சேர்த்து நன்றி தெரிவித்தனர். பறவைகள் சேர்ந்து பாடின. மிருகங்கள் சேர்ந்து ஆடின. அவற்றோடு சேர்ந்து ஆடிப் பாடினர்.

**தொல்லைகள் ஓடிப் போனது**
**துயரங்கள் எங்கோ தொலைந்தது.**
**இல்லை இனித் துன்பம் ஆடுவோம்.**
**இன்பமே பொங்கிடப் பாடுவோம்.**

பறவைகள் வானில் வட்டம் அடித்தன. பல பிரிவுகளாகிப் பறந்தன. பாட்டம் பாட்டமாகப் பறந்தன. அவை அழகிய கோலங்களாக அமைந்தன. பறந்து பறந்து பாடின.

**அடிமை விலங்குமே ஒடிந்தது**
**அமைதி மனதினில் மலர்ந்தது.**
**கொடிய பயமதும் இல்லையே.**
**குலவிடும் இன்பம் தனிஎல்லையே.**

பாடலுக்குக் கலைமான்கள் சுழன்று ஆடின. மான்களின் ஆட்டத்தை என்றுமே கண்டதில்லை. அன்றுதான் கண்டனர். அவை முன்னங்கால்களை வளைத்தன. பின்னங் கால்கள் அசைந்து நிமிர்ந்தன. கொம்புகள் பதிந்து நிமிர்ந்து வளைந்தன. அற்புதமாக இருந்தது. அழகான கண்கவர் ஆட்டமாக மிளிர்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியாக மயில்களும் ஆடின. எவ்வளவு அழகான ஆட்டம். இவை ஆடுவதற்கு யார் கற்றுக் கொடுத்தார்கள். புரியாத புதிராக இருந்தது. அவற்றின் ஆட்டத்தை வியந்தனர். ஆட்டத்துக்குப் பொருத்தமான மெட்டை அமைத்தனர். நிமேசிக்காவும் குழுவினரும் பாடினர்.

**தந்தனத் தந்தனா தானனா**
**தானனா தந்தனத் தானனா**
**தந்தனத் தந்தனா தானினா**
**தானனா தந்தனத் தானனா**

**ஆடுங்கள் ஆனந்தம் ஆடுங்கள்.**
**அனைவரும் வாழ்ந்திடப் பாடுங்கள்.**
**கூடுங்கள் சேர்ந்தொன்றாயக் கூடுங்கள்.**
**கூடியே கைகொட்டி ஆடுங்கள்.**

ஆட்டத்தில் தம்மை மறந்தன. பறவைகளும் மிருகங்களும் சேர்ந்தன. நிமேசிக்காவை அவை சூழ்ந்து கொண்டு ஆடின.

ரதீபனோடு மற்றவர்களும் சேர்ந்தனர். மிருகங்களும் பறவைகளும் சேர்ந்தன. எல்லோரும் சேர்ந்து ஆடிப் பாடினர். அங்கு உயிர்களின் சங்கமம் ஒன்றியது. பாடல் காற்றில் பரவியது.

**ஒன்றாய்க் கூடியே பாடுவோம்.**
**ஒற்றுமை பேணியே வாழுவோம்.**
**இன்று சுதந்திரம் பெற்றுளோம்**
**என்றும் சுதந்திரம் போற்றுவோம்.**

ஆட்டம் முடிவில் பாராட்டும் நடந்தது.


''அற்புதமான ஆட்டம். அழகான ஆட்டம்''

புகழாரம் பரவியது. தங்களின் துயரைத் தீர்த்தமைக்கு நன்றி தெரிவித்தன. பறவைகளும் மிருகங்களும் களைத்திருந்தன. நிமேசிக்கா குழுவினரும் களைப்பால் சோர்ந்தனர். எல்லோரும் சேர்ந்து ஓய்வெடுத்தனர். ஆழ்ந்த உறக்கம் சேர்ந்து கொண்டது.

காலைப் பொழுது அற்புதமாக மலர்ந்தது. நரியாரும் கரடியாரும் கடற்கரைக்குப் போனார்கள். குறங்குட்டான் விழுந்த இடத்தைப் பார்த்தனர். அதன் அடையாளமே இல்லை. மகிழ்ந்து ஓடிவந்தனர். பறவைகள் பாடின. மலர்கள் மலர்ந்தன. குட்டிகளும் குஞ்சுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளித் திரிந்தன. மிருகங்கள் ஒன்று சேர்ந்தன. சுதந்திரமாகக் காற்று வீசியது. பயமின்றி யாவும் நடமாடின. சந்தோசம் எங்கும் பரவியது. குழுக்களாக யாவும் கூடின. கடற் காற்றை உள்ளிழுத் தன. அது சுகமாக இருந்தது. என்றும் இல்லாத மகிழ்ச்சியை அனுபவித்தன. இதனை நிமேசிக்கா குழுவினர் அவதானித்தனர். சந்தோஷப்பட்டனர்.

சில பறவைகள் முன்னால் வந்தன. குயில்கள் மெட்டெடுத்துக் கூவின. அது பாரதியின் கும்மிப் பாட்டுப் போன்றிருந்தது. காது கொடுத்துக் கேட்டனர். கும்மிப் பாடலை அசைபோட்டனர். அற்புதமாக இருந்தது. பறவைகளோடு சேர்ந்து கொண்டனர். பறவைகள் சேர்ந்து பின்னணி பாடின. மயில்கள் கூட்டமாகச் சேர்ந்தன. பாடலுக்கு ஏற்ப ஆடின.

***"நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின***
***நன்மை கண்டோம் என்று கும்மியடி***
***கும்மியடி கும்மியடி கும்மியடி கும்மியடி***
***கும்மியடி கும்மியடி கும்மியடி கும்மியடி"***

என்று பாடிக் கும்மி கொட்டி ஆடின.

வெயில் பரவத் தொடங்கியது. ஆட்டமும் பாட்டமும் முடிவுக்கு வந்தன. வந்த வேலை முடிந்து விட்டது. தங்கள் பயணத்தை நினைத்தனர். புறப்பட வேண்டும். சங்கர் மாமா தயாரானார்.விடை பெறுவதற்காகக் காத்திருந்தனர்.

விடை கொடுக்கப் பறவைகளும் மிருகங்களும் கூடின. தங்களுக்குச் சுதந்திரம் கிடைத்ததை நினைந்தன. பிரிய மனமின்றி நன்றி கூறின. படகு கடலோரம் நின்றது.

படகை நோக்கி வந்தனர். பொருட்களை ஏற்றினர். எல்லோரும் ஏறிக்கெண்டனர். கைகளை அசைத்து விடை கொடுத்தனர். படகைச் சங்கர் இயக்கினார். அது விரைந்து செயற்பட்டது. கடலைக் கிழித்துப் படகு விரைந்தது. பறவைகள் பாதி தூரம் வரை சென்றன. ஒலியெழுப்பி வாழ்த்தி வழியனுப்பின.

செம்மலைத் தீவு மகிழ்ச்சியில் ஆழ்ந்தது. அதனைச் சூழ்ந்து சுதந்திரக் காற்று வீசியது. அதனை அத்தீவின் உயிரினங்கள் சுவாசிக்கத் தொடங்கின. படகில் இருந்து அனுசியன் அத்தீவைப் பார்த்தான். மனதில் ஒரு மத்தாப்பு விரிந்தது. கடந்த இரவை நினைந்து கொண்டனர். படகு இரைந்து புறப்பட்டது. சம்பூரை நோக்கிப் பயணித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் அமைதி காத்தது. நீரைக் கிழித்துப் படகு போனது. காற்று முகங்களில் அறைந்தது. கடலலை நீர்த்துளிகளை விசிறித் தூவி யது. உடல்களில் பட்டதும் சில்லிட்டது. மகிழ்ச்சியாய் இருந்தது. நிமேசிக்காவின் மனம் யோசனையில் நீந்தியது.

''மாமா அந்த ஜீவன்களுக்கு உதவினோம். மனதுக்கு நிம்மதியாக இருக்கிறது.''

நிமேசிக்கா சந்தோஷத்துடன் கூறினாள்.

''கடலில் படகு பழுதடைந்தது. அந்தச் செயலால் உதவி செய் தோம். ஒவ்வொரு செயலுக்குப் பின்னாலும் நன்மைகள் உண்டு. நல்ல விளைவுகளும் உண்டு. இல்லையா மாமா?''

ரதீபன் சிந்தனையோடு கூறினான்.

''அது உண்மைதான். இல்லாவிடில் நமது படகு பழுதடையுமா?'' சங்கர் பதிலிறுத்தார்.

''உல்லாசப் பயணம் நன்மையைத் தந்தது. வாயில்லா ஜீவன்களுக்கு விடுதலை கிடைத்தது. இனி அவை நிம்மதியாக வாழும்.''

நிமேசிக்கா மெதுவாகச் சொன்னாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

தூரத்தே பாதாளமலை தெரிந்தது. பாதாளமலை என்பது ஆழமான கடற்பகுதி. கடற் சுழிகள் ஏராளம். மாரி காலத்தில் கடல் கொந்தளிப்பாக இருக்கும். அந்த இடத்தில்தான் மூதூர் செல்லும் படகு மூழ்கியது. பலர் நீருள் மூழ்கிவிட்டனர். திருகோணமலை மாவட்டம் சோகத்தில் ஆழ்ந்தது. அந்த நாள் துக்க நாளாகும். இன்றும் அதனை நினைவு கூருகின்றனர். சங்கருக்கு அந்தநாள் நினைவுக்கு வந்தது. நிரூசன் கதையைத் திசை திருப்பினான்.

''மாமா! பாதாள மலையடிப் பகுதி எவ்வளவு ஆழம்? மிக ஆழமா''? வியப்போடு கேட்டான். அனுசியன் சமுகக் கல்விப் பாடத்தில் விருப்பு உடையவன். அவன் ஆழத்தை விளக்கினான்.


''மாமா! அந்தப் பகுதியில் பெரிய நகரம் இருந்ததாம். கடல் அடியில் நகரத்தின் சிதைவுகள் கிடக்குதாம். கடல்கோளினால் இந்தப் பகுதி அழிந்ததாம். கேட்க ஆச்சரியமாய் இருக்கிறது. செல்வி தங்கேஸ்வரி கதிர்காமர் எழுதியுள்ளார். தங்கேஸ்வரி பல ஆய்வுகளைச் செய்தவர். சிறந்த ஆராய்ச்சியாளர். மட்டக்களப்பு மாவட்டக் கலாசார அலுவலர். பல ஆய்வு நூல்களை ஆதாரத் துடன் எழுதியுள்ளார். இதை அப்பா எனக்குக் கூறினார்''.

ரதீபன் ஆவல் ததும்பக் கூறினான்.

''இலங்கையில் ஆய்வு செய்பவர்கள் வரலாற்றை மறைக்கிறார் கள். நமது நாட்டின் பூர்வீகத்தை உலகினுக்குக் காட்ட வேண்டும். இந்த நாட்டில் நாங்கள் வந்தேறு குடிகள் இல்லை. இந்த நாட்டின் அசல் குடிமக்கள் தமிழர்கள்தான். நாகரும் இயக்கரும் நமது மூதாதையர்கள். இதிகாச புராணங்கள் இதனைக் கூறுகின்றன. செல்வி.தங்கேஸ்வரி நல்ல நடுநிலையாளர். அவரது ஆய்வு களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். நமது மக்கள் ஆதரவைக் கொடுக்க வேண்டும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர் தனது பாணியில் விளக்கமளித்தார்.

''நானும் தங்கேஸ் அக்கா போல் எழுதவேண்டும். ஆய்வு செய்ய வேண்டும். திருகோணமலை வரலாற்றை எழுத வேண்டும்.''

நிமேசிக்கா நிமிர்ந்து சொன்னாள். படகு சம்பூர்க் கரையை அடைந்தது. அந்த இடம் சிறிய துறைமுகம்போல் இருந்தது. இந்த இடம்தான் கல்குடா. இங்குதான் மீன்பிடிப் படகுகளை நிறுத்து வார்கள். சில படகுகள் கரையில் நின்றன. படகை மெதுவாக இழுத்தனர். நங்கூரத்தையும் நீருள் விட்டனர். படகின் கயிற்றை இழுத்துக் கட்டினர். அந்த இடத்தை ஒருமுறை பார்த்தனர். மாமாவின் வீடு கூப்பிடு தூரத்தில் இருந்தது. தமது பொருட்களை எடுத்துக் கொண்டனர். மெதுவாக நடந்தனர். ஊர்ப் பிள்ளைகள் வேடிக்கை பார்த்தனர். மாமாவின் வீட்டை அடைந்தனர்.

அவர்களைக் கண்டதும் வீடு களை கட்டியது. மாமாவும் மாமியும் வரவேற்றனர். நலம் விசாரித்தனர். பாரதியும் மதுவும் சேர்ந்து கொண்டார்கள். குளித்ததும் உணவு வந்தது. சேர்ந்து உண்டார் கள். உணவின் பின் ஒரே ஆரவாரம். பாட்டும் ஆட்டமுமாக இருந்தது.

சந்திரன் மாமா பிரயாணம் பற்றிக் கேட்டார். சங்கர் அனைத் தையும் கூறினார். சந்திரன் ஆவலோடு கேட்டார். கலா மாமியின் கண்களில் பயமிருந்தது. இடையிடையே நிமேசிக்காவும் விளக்கி னாள்.

''உங்களுக்குப் பயமில்லையா? அப்பாவுக்குத் தெரிந்தால் ..?'' கலா மாமி பயங்காட்டினார். ரதீபன் சிரித்துக் கொண்டான்.

''அப்பா ஒன்றும் சொல்ல மாட்டார். பயம் என்றால் என்ன? என்று கேட்பார். எங்கள் கெட்டித்தனத்தைப் போற்றுவார். இல்லையா மாமா''?

சந்திரனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''முரளி பிள்ளைகளின் வீரத்தைப் போற்றுவார். நான் பக்குவ மாகச் சொல்லுவேன். பிள்ளைகள் அனுபவம் பெறுவது விருப்ப மானது. வாழ்க்கை என்பது பிரச்சினைகள் நிரம்பியது. அதில் வெற்றி பெறுவதற்கு அனுபவம் தேவை. நல்ல பயனுள்ள அனுபவத்தைப் பெற்றுள்ளனர். பிள்ளைகளது துணிவை நேரில் பார்த்தேன். அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள்.''

சங்கர் கூறியதைச் சந்திரன் வரவேற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி பின்னேரம் கல்தோணியைப் பார்ப்போமா'' சந்திரன் மாமா கூறினார்.

''கல்தோணியா அது என்ன மாமா. கல்லால் செய்யப்பட்டதா.? எங்கே இருக்கிறது.''?

ஆவலோடு அனுசியன் கேட்டான். அவர்களுக்கு அதனை அறியும் ஆவல் பிறந்து விட்டது. புதுமைகளைக் கண்டறிவது சிறுவர்களது இயல்பு. ஐம்புலன்கள்தான் கற்றலின் திறவுகோல். கண் காது மூக்கு வாய் மெய்(உடம்பு) தான் ஐம்பொறிகள். இவற்றின் துணையுடன் கற்கிறார்கள். கண்டு, கேட்டு, மணந்து, சுவைத்து, உணர்வது கல்வி. அப்போதுதான் அனுபவம் ஆகும். மனதில் பதியும். கல்தோணியைப் பற்றி அறியத் துடித்தனர். அவர் களுக்குப் பொறுமையாக இருக்க முடியவில்லை. சற்று ஓய்வெடுத் தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16


சம்பூர் திருகோணமலையின் கிழக்கே இருக்கிறது. ஒருபுறம் கடல். அதனைச் சூழக் காடு. காட்டுச் சேவல்களின் கூவல் மனதை இழுக்கும். பலவகைப் பிராணிகள் கும்மாளமிடும். கடற் காற்று மரஞ்செடிகளில் விளையாடும். கிளைகள் அசைந்து இசையாகும். மூலிகை மணம் எங்கும் பரவும். காட்டை அடுத்து வயற்பரப்பு. வயல்கள் விளைந்து விரிந்து கிடக்கும். கற்றார்போல் நெற் கதிர்கள் தலை குனிந்து நிற்கும்.

ஊருக்குள் எப்போதும் சந்தோஷம் இருக்கும். தென்னைகள் இளநீர்க் குலைகளோடு அசையும். மா, பலா, வாழை கனிதரும். நிழல் மரங்களும் நிறைந்து இருக்கும். மரங்களில் பறவைகள் கூத்தடிக்கும். ஊரின் நடுவில் காட்டுத் தேங்காய் மரம். அந்த மரத்தின் கீழ் பத்திரகாளி அம்மன் கோவில். அதற்கு நேரே வைரவர் கோவில். அது இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. அம்மனுக்குச் செவ்வாய்க் கிழமைகளில்தான் பூசை. பகல் பூசை மட்டும்தான் நடக்கும். பகல் பன்னிரெண்டு மணிக்கு நடக்கும். அப்போது மணி அடிக்கப்படும். அது முக்கியமான நேரம்.

அந்நேரம் வீதி அமைதியில் இருக்கும். சன நடமாட்டம் இருக் காது. அந்த நேரத்தில் வைரவர் வீதியில் வருவார். அம்மனைத் தரிசிப்பார். பூசை முடிந்ததும் வைரவர் போய் விடுவார். அப்போதும் மணியொலிக்கும். அதன் பிறகே சன நடமாட்டம் தொடரும். இது தொடர்ந்து வந்த சம்பிரதாயமாகும். ஆனால் அந்த வழக்கம் இப்போதில்லை. இப்போது தினப் பூசை நடைபெறு கிறது. வருசம் தோறும் திருவிழா வரும். பங்குனி மாதத்தில் பயபக்தியாக நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னேரம் ஆகியது. கல்தோணி பார்க்கப் புறப்பட்டனர். கிராமத்துப் பிள்ளைகளும் வந்தார்கள். இரண்டு கிலோமீற்றர் தூரம் சென்றார்கள். சற்று உயரமான பாறை தென்பட்டது. ஒரு குடத்தைக் கவிழ்த்து வைத்தது போலிருந்தது.

''இதுதான் மத்தளமலை. தட்டிப் பாருங்கள்'' சந்திரன் புன்னகையோடு கூறினார். ஆர்வத்தோடு தட்டினார்கள். ஆச்சரியத்தால் அதிர்ந்தார்கள். ஒவ்வொரு தட்டும் இசையாக ஒலித்தது. வெவ்வேறு சத்தங்கள். அனுசியன் பாடலுக்கு ஏற்ற வாறு தட்டினான். மத்தளம் போல் அதிர்ந்தது. வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு ஒலிகள். எல்லோரும் விரும்பியவாறு தட்டி மகிழ்ந்தார்கள். பின் சந்திரன் மாமாவின் பின்னால் நடந்தார்கள். மெதுவாகக் கடற்கரைப் பக்கம் வந்து விட்டார்கள்.

கடல் சிரித்தது. சிறிதாக அலைகளை வீசி அழைத்தது. மெல்லிய காற்று வீசியது. மேற்கே சூரியன் பிரகாசித்தது. வெயில் தணிய வில்லை. சந்திரன் கையைச் சுட்டிக் காட்டினார்.

''அதோ அங்கே பாருங்கள். அங்கே தெரிவதுதான் கல்தோணி. அருகே போய்ப் பார்ப்போம் வாருங்கள்''. கூறிக் கொண்டு நடந்தார். வரிசையாக ஒருவர்பின் ஒருவராக நடந்தனர். தோணி கரையோரமாகக் கிடந்தது. அந்த இடம் சிறு துறைமுகம் போலிருந்தது. இயற்கை அழகு நெளிந்தது. தோணியின் பக்கம் வந்து விட்டார்கள். அவர்களுக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி. நன்றாகப் பார்த்தார்கள்.

அந்தத் தோணி சுமார் இருபது அடி நீளமுடையது. நடுவில் அகன்றது. அகலம் ஐந்தடி இருக்கும். இருமுனைகளும் ஒடுங்கி நீண்டு இருந்தன. தோணி கரையில் இருந்தது. சங்கிலியால் இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. எல்லாமே கருங்கல்லாக இருந்தன.

''மாமா எப்படி இவை கல்லாக மாறின.?'' நிமேசிக்கா சந்தேகத்தை வெளியிட்டாள். சந்திரனுக்குச் சங்கடமாக இருந்தது.

''இந்தத் தோணியில்தான் அம்மன் சம்பூருக்கு வந்தாள். இவ்வூர் மக்களுக்கு அருள்பாலிக்க விரும்பினாள். கரையிறங்கி ஊருக் குள் சென்றாள். தனக்கு விரும்பிய இடத்தைத் தேடினாள். காட்டுத் தேங்காய்மரம் தெரிந்தது. அந்தக் காட்டுத் தேங்காய் மரத்தின்கீழ் அமர்ந்தாள். நமது பிரதேசம் புண்ணிய பூமி. இராவணன் சிறந்த சிவபக்தன். சைவசமயத்தைப் போற்றியவன். கோணேசப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் பக்தன். அவன் வணங்கிய இறைவனின் திருத்தலம் இது. திருக்கோணேஸ்வரம் பெருமை வாய்ந்தது. திருகோணமலை மாவட்டம் கோயில்கள் நிறைந்தது.

கோயில்களில் உற்சவங்கள் நடைபெறும். அதற்காக கொடி ஏற்றப் படும். உற்சவ காலங்களில் மக்கள் வெளியே வருவார்கள். அவர்களை தீய தெய்வங்கள் தாக்கலாம். அதிலிருந்து மக்களைக் காக்க வேண்டும். அதற்காக அம்மன் இத்தோணியில் உலா வருவாளாம். இவள் இந்த ஊரின் காவற் தெய்வம்.''

சந்திரன் பயபக்தியோடு கூறினார். அந்தத் தோணியைத் தடவிப் பார்த்தனர். ''இது அம்மன் உலாவரும் தோணி. அம்மனின் தோணியில் நாம் ஏறுவதா''? அதனுள் ஏறிப் பார்க்கப் பயந்தார்கள். அவர்களது எண்ணத்தைச் சந்திரன் புரிந்து கொண்டார்.

''ஏறிப் பார்க்கலாம். காளித்தாய் நமது அன்னை. நாம் அவளது பிள்ளைகள். அவள் நம்மைக் காப்பவள். அதனை விரும்பி ஏற்றுக் கொள்வாள். ஏறிப் பாருங்கள். பயம் வேண்டாம்'' நம்பிக்கையோடு சொன்னார். பிள்ளைகள் அதற்கு இசைய வில்லை. அவரே தோணியினுள் ஏறினார். சங்கரும் ஏறிக் கொண்டார். பிள்ளைகளுக்குத் துணிவு வந்துவிட்டது. மனதுள் அம்மனைப் பக்தியோடு வணங்கிக் கொண்டனர். எல்லோரும் ஏறிப் பார்த்தனர். பார்த்து விட்டு இறங்கி நடந்தனர்.

'அந்தத் தோணி எப்படிக் கல்லாய் மாறியது. சங்கிலியும் கல்லாகி இருக்கிறதே. இது எப்படி'? நிமேசிக்காவின் மனதில் பெரிய கேள்வி. யோசனையோடு நடந்தாள். சந்திரன் மாமா நின்றார்.

''இந்தப் பகுதியில் உவர்நீர்தான் கிடைக்கும். இதுதான் நல்ல தண்ணீர்க் கிணறு. இதில் மட்டுந்தான் நல்ல தண்ணீர் கிடைக்கும். இத்தண்ணீர் புனிதமானது. நோய்களைத் தீர்க்க வல்லது. நாமும் மேல்கால் கழுவிக் குடிப்போம்'' சந்திரன் கூறிக்கொண்டே வாளியை எடுத்தார். தண்ணீரை அள்ளிக் கொடுத்தார். முகம் கழுவி தண்ணீர் குடித்தார்கள்.

புத்துணர்ச்சி வந்தது போல் உற்சாகமானார்கள். ''எனக்குக் களைப்பெல்லாம் போய் விட்டது.''

ரதீபன் மிகுந்த சந்தோஷத்தோடு கூறினான். கெவுளியாமுனை வெளிச்ச வீடு தெரிந்தது. அதிலிருந்து ஒளி பிசிறிப் பரந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வெளிச்ச வீடு கப்பல்களுக்கு வழிகாட்டுகிறது. இரவு நேரங்களில் மிகவும் உதவுகிறது. ''கலங்கரை விளக்கம் கப்பல் களின் வழிகாட்டி'' அனுசியன் மெல்லக் கூறினான். மெதுவாகப் பொழுது மறைந்தது. மாலையாகி வந்தது.

''நேரமாகி விட்டது. புறப்படுவோம்''. சந்திரன் துரிதப்படுத்தி னார். வந்த வழியே புறப்பட்டார்கள். வழியில் காட்டுப் பூக்கள் சிரித்தன. காட்டுச் சேவல்களின் கூவலை ரசித்தனர். மகிழ்ச்சி யோடு வீட்டை அடைந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

குளித்த பின் கோயிலுக்குப் புறப்பட்டனர். கோயில் அழகாகச் சோடிக்கப்பட்டிருந்தது. கோயில் வீதி விசாலமானது. மக்களால் நிறைந்திருந்தது. வெளி ஊர்களில் இருந்து மக்கள் வந்திருந் தனர். சிலர் உறவினர்கள் வீடுகளில் தங்கினர். பலர் கோயில் வீதியில் தங்கினர். எங்கும் கடைகள். கடைகளில் பல்வேறு பொருட்களின் குவியல். சிறுவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது.

கிராம மக்களுக்குத் திருவிழா சந்தோஷமானது. அது பெருவிழா வாகும். பலவூர் மக்களும் வருவார்கள். காளைமாடு பூட்டிய வண்டிகள் வரும். காளைமாடுகள் மிடுக்காக நிற்கும். கொம்பு களில் வண்ணம் பூசப்பட்டு இருக்கும். காளைகளின் கழுத்து மணிகள் ஒலிக்கும். வழியில் வண்டிகள் வரிசையாக வரும். இளைஞர்கள் மனம் துள்ளும். அவர்களுக்குக் கொண்டாட்டம். காளைகளை முடுக்குவார்கள். அவை காற்றாய்ப் பறக்கும். வண்டிகள் விரைந்து செல்லும். ஒன்றை ஒன்று முந்தியோடும். அவற்றை முந்தவிடாது பார்ப்பார்கள்.

இளைஞர்களின் வண்டிகள் வரும். சவாரிப் போட்டிகள் நடக்கும். பார்ப்பதற்கு இன்பமாக இருக்கும். மாலையானதும் வண்டிகள் வந்து சேர்ந்துவிடும். திருவிழா ஏற்பாட்டாளர்கள் சந்திப்பார்கள். வந்தவர்களுக்கு உரிய வசதிகளைச் செய்வார்கள். உறவினர்கள் வருவார்கள். சந்தித்து உறவினை வளர்ப்பார்கள். எல்லோர் மனங்களும் நிறைவு கொள்ளும். திருவிழா உறவுகளை வளர்க்கும் பெருவிழாவாகும்.

கிராமத்து மக்கள் கபடமற்றவர்கள். பிறரை அன்போடு உபசரிப் பவர்கள். சம்பூர் மக்களும் அன்பானவர்கள். கல்வியில் வல்லவர் கள். பல ஊர்களுக்குச் சென்று கல்விப் பயிர் வளத்தவர்கள். அவர்களுள் பத்தக்குட்டி முதலானவர். கனகசிங்கம் இன்றுவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பவர். அதிபர் சோமசுந்தரம் சம்பூரின் சிறந்த கல்விமான். அவரது சேவையால் சம்பூர் கல்வியில் உயர்ந்தது. அவரது மனைவி மங்களம் அக்கா. இருவரும் சம்பூருக்குப் புகழ் சேர்த்தவர்கள். இன்று படித்தவர்கள் அதிகம் உள்ளனர். அதிகமானோர் வெளியூர்களில் உத்தியோகம் பார்க்கிறார்கள். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வருவார்கள்.

திருவிழா தொடங்கியது. காவடிகள் வந்தன. கிராம இசையில் அற்புதமான காவடிச் சிந்துகள். உடுக்குகள் அதிர்ந்தன. தாளத்தோடு மேளங்கள் முழங்கின. அழகான பாடல்கள் பக்தியைப் பரப்பின. மக்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்தினர். பூசையில் கலந்து கொண்டனர்.

பூசையின் பின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. சம்பூர் பாடசாலைப் பிள்ளைகள் பாடினர். அயலூர்ப் பிள்ளைகளும் பங்கேற்றனர். இப்பகுதி மக்கள் மிகுந்த கலையார்வம் உள்ளவர்கள். இயற்கையிலேயே இசை ஞானம் உடையவர்கள். இலகுவாக இசைக் கருவிகளைக் கையாளுவர். அருளம்பலம் அதில் வல்லவர். கலைநிகழ்வு தொடங்கியது. பாடசாலைப் பிள்ளைகளுக்குத்தான் முன்னுரிமை. அவர்களது நிகழ்ச்சிகள் அதிகமாக இருக்கும். கலை நிகழ்ச்சிகளை சுகுமார் நெறிப் படுத்தினார். பல அறிஞர்களது சொற்பொழிவுகள் தொடர்ந்தன.

கிராமத்தில்தான் கலை வளர்கிறது. மொழியும் வளர்கிறது. பண்பாடும் சிதையாமல் காக்கப்படுகிறது. விபுணசேகரம் இசைக் கச்சேரி செய்தார். அது அருமையாக இருந்தது. ரசித்து மகிழ்ந் தார்கள். அவர் பல இசைக்கருவிகளைக் கையாண்டார். அது அவருக்குக் கிடைத்த கொடை. அவரது குடும்பமே ஒரு கலைக் குடும்பம்.

அதிபர் குழந்தைவேலின் பொறுப்பில் கவிதை அரங்கு. தாமரைத்தீவான் தலைமை தாங்கினார். நேரம் நள்ளிரவு தாண்டியது. கவிதையை ரசிக்கக் கூட்டம் காத்திருந்தது. சிம்மக் குரலோன் திருக்கோணமலைக் கவிராயர் எழுந்தார். கைதட்டல் வானைப் பிளந்தது. காளியம்மனைப் பாடினார். புரட்சியும் நகைச்சுவையும் கலந்து தவழ்ந்தது. சிறுவர்களின் சிரிப்பு அலைமோதியது. ஆலையூரன், ஆலிங்கன் கௌரிதாசன், ஈச்சையூர் தவா, கட்டைபறிச்சான் கனகசிங்கம், இன்னும் பலர் கவிதை மழை பொழிந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழா களைகட்டியது. விடியவிடிய நிகழ்வுகள் நடந்தன. சிலர் உறக்கத்தில் இருந்தனர். சிலர் விழித்திருந்தனர். சாரணச் சிறுவர்களும் சிறுமியரும் கடமையில் இருந்தனர். சாரணச் சிறுவர்களுடன் ரதீபன் ஐக்கியமானான். அனுசியனும் நிரூசனும் சேர்ந்து கொண்டனர். சிறுமிகளுடன் நிமேசிக்கா சேர்ந்து கொண்டாள். குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டனர். ஒரு குழு கடமையில் இருக்கும். இன்னுமொரு குழு ஓய்வெடுக்கும். சாரணர்களை ஶ்ரீதரன் வழி நடத்தினார். ஶ்ரீதரன் பிரதேச சபையின் செயலாளர். நல்ல வழிகாட்டியாக இருந்தார்.

சாரணர்கள் முதலுதவிப் பணியிலும் ஈடுபட்டனர். உதவிகள் செய்தார்கள். நேரம் ஓடிப்போய்க் கொண்டிருந்தது. உசாராக உலா வந்தார்கள். ஒருவாறு நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன. நேரம் அதிகாலை மூன்று மணி. உறக்கம் சிறுவர்களை விரட்டியது. நண்பர்களிடம் விடைபெற்றனர். வீடு சென்றனர். பாயில் படுத்ததும் உறங்கி விட்டனர்.

அதிகாலை விரைவாக வந்தது. சந்திரன் மாமா எழுந்து விட்டார். கலா மாமி தேநீர் தயாரித்தார். குடித்தார்கள். "இன்று திருவிழா நிறைவு நாள். குடும்பம் குடும்பமாகச் சேருவார்கள். கோயில் வீதியில் பொங்குவார்கள். பத்து மணிக்குப் பொங்கல் தொடங்கும். பொங்கி முடிந்ததும் பூசை நடக்கும். அது கண்கொள்ளாக் காட்சி" என்று கலா மாமி கூறினார். ரதீபன் அனுசியனை அழைத்தான். இருவரும் பேசிக்கொண்டனர். பின் கோயிற் பக்கம் போனார்கள். போனதுபோல் திரும்பி வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

“மாமா! கோவிலடி குப்பையாய்க் கிடக்கிறது. சுத்தம் செய்ய வேண்டும். மண்வெட்டியும் குப்பைவாரியும் வேண்டும். கிடைக்குமா?”

ரதீபன் கேட்டான். மாமாவுக்கு மனம் நிறைந்தது. “கிடைக்குமாவா .. இதோ நீங்கள் கேட்டவை.” மாமா பொருட்களை முன்னே வைத்தார். நிமேசிக்கா விளக்குமாற்றை எடுத்தாள். ஆளுக்கொரு பொருளை எடுத்தனர். வரிசையாக கோயிலுக்கு நடந்தனர். கோயில் வீதி அசுத்தமாய் இருந்தது. எங்கும் கழிவுப் பொருட்கள். உணவுப் பண்டங்களின் கழிவுகள். கடதாசித் துண்டுகள். பொலித்தின் உறைகள்.

ரதீபன் அப்பாவை நினைத்துக் கொண்டான். அவர் சொன்ன கதை எட்டிப் பார்த்தது. யோசித்தான்.

“ரதீபன் என்ன யோசனை”? அனுசியன் கேட்டான்.

“அப்பா சொன்ன கதையை நினைத்தேன்” என்றான்.

“என்ன கதை சொல் பார்ப்போம்”

நிரூசன் ஆவலோடு கேட்டான்.

“இந்தியா அந்நியர் ஆட்சியில் இருந்தது. அடக்குமுறை நிறைந்த ஆட்சியது. சொந்த நாட்டில் சுதந்திரம் இல்லை. சுதந்திரம் வேண்டும். காந்தி சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கினார். போராட்டம் அகிம்சை வழியில் தொடங்கியது. காந்தியின் சுதந்திரப் போராட்டம் வித்தியாசமானது. அவர் சாந்தி சமாதானத்தை விரும்புபவர். அதனை மக்களுக்கு விளக்க விரும்பினார். பல மகாநாடுகளை நடத்த எண்ணினார். பந்தல்களும் பாசறைகளும் அமைக்கப்பட்டன. பல ஊர்களில் இருந்தும் மக்கள் திரண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள். வந்து கலந்து கொண் டனர். தொடர்ந்து சில நாட்கள் மகாநாடு நடந்தது. பகல் முழுவதும் பயிற்சிப் பாசறைகள். சொற்பொழிவுகள் நடந்தன. விளக்க வுரைகள் தொடர்ந்தன. எங்கும் மக்கள் கூட்டம். நள்ளிரவு வரை கூட்டம் தொடர்ந்தது. முதல்நாள் நிகழ்வு முடிவுற்றது. நள்ளிரவுக் குப் பின் ஓய்வு எடுத்தனர்.

அதிகாலை வந்தது. தொண்டர்கள் தங்கள் வேலைகளைக் கவனித்தனர். மகாத்மா காந்தி தியானத்தை முடித்தார். வெளியில் வந்தார். சுற்றுப்புறச் சூழலை அவதானித்தார். சிலரை அழைத்துக் காண்பித்தார். வந்தவர்கள் வந்தவாறே சென்றனர். எங்கும் குப்பைக் கழிவுகள். சுத்தம் செய்வார் யாரும் இல்லை. காந்தி ஒருமுறை எடுத்துக் கூறினார். யாரும் முன்வந்து செய்வதாக இல்லை. விளக்குமாற்றை எடுத்தார். மண்வெட்டியையும் எடுத்தார். சுத்தம் செய்யத் தொடங்கி விட்டார். காந்தி கழிவுகளை வாரி எடுத்தார். குழியைத் தோண்டி அதனுள் இட்டார். சுறுசுறுப்பாக இயங்கினார்.

தொண்டர்கள் வந்தார்கள். காந்தியின் செயலைக் கண்டார்கள். பதறியடித்து ஓடி வந்தார்கள். அவர்களும் சேர்ந்து கொண்டார்கள். காந்தி செயல்மூலம் தலைவனின் கடமையை உணர்த்தினார். தொண்டு என்பது நமது இரத்தத்தில் ஊறவேண்டும். என அப்பா இப்படிக் கூறினார்'' என்றான்.

''ஹாய்!'' என்றவாறே நண்பர்கள் வந்தார்கள்.

நண்பர்கள் ஒன்று சேர்ந்து கொண்டனர். ஸ்ரீதரன் வந்தார். அனுசியன் சிரமதானம் பற்றிச் சொன்னான். காந்தியின் கதை யையும் ரதீபன் கூறினான். அவருக்கு மகிழ்ச்சி. சாரணர்களை ஸ்ரீதரன் அழைத்தார். விபரமாகக் கூறினார். அவர்கள் பக்கத்து வீடுகளுக்குச் சென்றனர். மண்வெட்டிகள் வந்தன. குப்பைவாரி களும் விளக்குமாறுகளும் சேர்ந்தன. குழுக்களாகப் பிரிந்தனர். குழிகளைத் தேவையான இடத்தில் அகழ்ந்தனர். குப்பைவாரிகள் இயங்கின. பெரிய குப்பைகள் குழியுள் நிறைந்தன. சிலர் வாளி களில் நீர் நிறைத்தனர். அதனை எடுத்து நிலத்தை நனைத்தனர். வீதி எங்கும் தெளித்தனர். புழுதி அடங்கி விட்டது.

விளக்குமாறுகள் கைகளில் விளையாடின. மக்களுக்கு ஆச்சரியம். பிள்ளைகளின் செயல் அவர்களைக் கவர்ந்தது. கிராமசபைத் தலைவர் தாமோதரம் வந்தார். பார்த்தார். அவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து கொண்டார். சுறுசுறுப்பாக வேலைகள் நடந்தன. ஶ்ரீதரன் தாமோதரத்திடம் வந்தார். பொன்ராசாவும் சேர்ந்து கொண்டார். ஏதோ கதை நடந்தது. பொன்ராசா மாமா தட்டுக்களை ஏந்தி வந்தார். தட்டுக்களில் தேநீர்க் கோப்பைகள். நிரூசனும் நிசோவும் ஓடிவந்தனர். தேநீர் தட்டுக்களைப் பெற்றனர். எல்லோருக்கும் வழங்கினார்கள். பார்த்திருந்த அனைவரும் தேநீர் வழங்கினர். குடித்துக்கொண்டே வேலையில் ஈடுபட்டனர்.

வெளிவட்ட வீதி அழகாய்ப் பளிச்சிட்டது.

''சும்மாவா சொன்னார்கள். கைபட்டால் கைலாசம் என்று''. பார்த்து நின்ற பெரியவர் கூறினார்.

''குப்பைகளைக் குழிகளில் போடுங்கள். இருக்கும் இடத்தைத் துப்பரவாக வையுங்கள்.''

ஒலி பெருக்கி அதிர்ந்தது. ஶ்ரீதரன் பக்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதனை தாமோதரமும் அழுத்தினார். வந்திருந்த மக்களும் ஏற்றனர். செயலில் இறங்கினர். வெளிவட்ட வீதி வேலை முடிந்தது. உள்வட்ட வீதிக்கு வந்தனர். சிரமதானம் தொடங்கியது. உள்வட்ட வீதியைத் துப்பரவு செய்தனர். சிலர் தண்ணீர் எடுத்து வந்னர். சிலர் அதனைப் பெற்றுத் தெளித்தனர். விளக்குமாறு கொண்டு கூட்டினர். குப்பையை அள்ளிக் குழியுள் போட்டனர். உள்வீதி அழகாய் இருந்தது.

கோயில் வெளி மண்டபத்தைக் கழுவினர். சாரணர்ச் சிறுமி களுக்கு உமாவும் ஜோதியும் பொறுப்பாக இருந்தனர். அவர்கள் மத்திய கல்லூரியின் ஆசிரியைகள். வேலைகள் முடிந்து விட்டன. கோயில் சுத்தமாக அழகாய் இருந்தது.

நேரத்தைப் பார்த்தனர். காலை ஒன்பது மணியாகி விட்டது. பத்து மணிக்குப் பொங்கல் தொடங்கும். கோயிலை ஒரு முறை வலம் வந்தனர். கோயில் புனிதமாக இருந்தது. தாமோதரம் ஶ்ரீதரனைப் பார்த்தார். ஶ்ரீதரன் சிறுவர்களைப் பார்த்தார். அவர்களுக்கு நன்றி கூறினார். பக்கத்தில் சந்திரன் நின்றிருந்தார். சங்கருக்குக் கண் சாடை காட்டினார். இருவருக்கும் பெருமையாக இருந்தது. எல்லோரும் வீடு சென்றனர்.

வீடு சென்றதும் குளித்தனர். தூய்மையான ஆடைகளை உடுத்தினர். ஆண்கள் வேட்டி உடுத்து அழகாயிருந்தனர். பெண் கள் சேலை உடுத்து எடுப்பாக இருந்தனர். சிறுமிகள் பாவாடை சட்டையோடு வந்தனர். கோயிலுக்குப் புறப்பட்டனர். மாமா மாமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் சேர்ந்து கொண்டனர். ஊரெங்கும் பக்திப் பாடல் ஒலித்தது. மக்கள் அம்மன் புகழ்பாடி ஆடினர். மனதை ஒருநிலைப் படுத்தி தியானித்தனர்.

வழியில் கோயில் வீதியைப் பார்த்தனர். மக்கள் கூட்டம் அதிகரித்து இருந்தது. அவர்கள் பொங்குவதில் கண்ணாக இருந் தனர். குடும்பங்களாகச் சேர்ந்து இருந்தனர். குடும்ப ஒற்றுமை யைக் கண்டனர். காணச் சந்தோஷமாக இருந்தது. ஆளுக்காள் உதவி செய்வதைப் பார்த்தனர். குழந்தைகளும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். பொங்கும் இடத்தைத் துப்பரவு செய்தனர்.

கோயில் பரிபாலனசபை நன்றாக இயங்கியது. அதன் தலைவர் செல்லக்குட்டி. மிகத் திறமையாக நிர்வகித்தார். அவருக்கு நல்ல மதிப்பிருந்தது. பொங்குவதற்கு உரிய பொருட்கள் கோயிலில் கிடைத்தன. அடுப்புக் கற்கள் கிடைத்தன. தேங்காய் அரிசி பழம் யாவும் இருந்தன. புதுச் சட்டி பானைக் கடைகள் ஒருபுறம். பூக்கடை கள் இன்னொரு புறம். பழக்கடைகள் மறுபுறம். இப்படி ஏராள மான கடைகள் இருந்தன. வியாபாரம் தூள் கிளப்பியது. சனங்கள் விரைந்து வாங்கினார்கள். சிறுமிகள் வளையல் கடையை அலங்கரித்தனர். கைகளில் வளையல்கள் மின்னின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

புதுப் பானைகள் அடுப்புகளில் ஏறின. புத்தரிசி சிரித்தது. அரிக்கண் சட்டிகள் ஆடின. அரிசியோடு கிடந்த சிறுகற்கள் பாடின. அரிக்கண் சட்டி அடியில் பதுங்கின. கோயில் வீதியெங்கும் பொங்கற் பானைகள். ஒரே நேரத்தில் பானைகள் பொங்கி வழிந்தன. எங்கும் ஒரே சந்தோஷம். மக்கள் மனதில் பக்தி பரவிய புளகாங்கிதம்.

கோயில் வீதியில் பெண்கள் நின்றார்கள். அவர்களது கைகளில் கற்பூரச் சட்டிகள். அவற்றைத் தூக்கி ஏந்தியவாறு நின்றனர். அவர்களது மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்தன. கண்களில் எதிர்கால எதிர்பார்ப்புகள். சமாதானத்துக்கான வேண்டுதல்கள். எல்லோரும் இன்புற்றிருப்பதற்கான கண்ணீர். ஆண்கள் நீராடி வந்தனர். தங்கள் உடல்களை நிலத்தில் கிடத்தினர். கைகளில் தேங்காய். கோயிலைச் சுற்றி உருண்டனர். அதனை அங்கப் பிரதட்சணம் என்பார்கள். பின்னால் பெண்கள் கூட்டம். 'அரோகரா' என்ற ஒலியெழுப்பி வந்தனர். பார்ப்பவர்களது உள்ளத்தில் பக்தியை ஊட்டியது.

பொங்கல் படைக்கப்பட்டது. கோயிற் பூசை தொடங்கியது. அம்மன் ஆராதனை நடந்தது. பொன்னூசல் நடைபெற்றது. அற்புதமான இசையில் பாடல்கள். காற்றில் தவழ்ந்தன. அவ்வளவும் அம்மனின் அற்புதங்கள் பற்றியன. இந்தப் பாடல்களுக்குச் சொந்தக்காரர் யார்? தெரியாது. ஆனால் அந்தப் பாடல்கள் இன்றும் இனிக்கின்றன. கிராமிய இசை வடிவங்கள் அற்புதமானவை. காதுகளில் தேன்மழை பொழிவன. பண்டைய இசைக்கருவிகளை கோயில்களில்தான் காணலாம். கோயில்கள் நாகரிகத்தின் சின்னங்கள். பாரம்பரியத்தை கோயில்களே காக்கின்றன. மரபுகளைக் கட்டிப் பேணுகின்றன. வழிபாட்டு முறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவழியாகக் காப்பன. புராண இதிகாசங்களுக்கு கோயில்களே சாட்சிகளாகின்றன.

வழிபாடுகள் முடிந்தன. மாலையாகி விட்டது. சனக்கூட்டம் வந்ததுபோல் கலையத் தொடங்கியது. கோயில் வீதி களையிழந்து விட்டது. இனி அடுத்த திருவிழாவுக்குத்தான் களைகட்டும். சாரணர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தனர். கோயில் வீதியைச் சுத்தம் செய்வதில் ஈடுபட்டனர். கோயில் அழகாகக் காட்சி அளித்தது. பூசகருக்குக் கொள்ளை ஆனந்தம். திருவிழா முடிந்ததும் சனங்கள் போய்விடுவார்கள். கோயில் வீதி அலங்கோலமாய்க் கிடக்கும். ஆனால் இம்முறை அதற்கு நேர் மாறாக அமைந்தது.

இருள் மெதுவாகச் சூழ்ந்து கொண்டது. ஸ்ரீதரன் சாரணர்களை அழைத்தார். காலையில் கோயிலில் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். அவர்களும் ஏற்றுக் கொண்டனர். எல்லோரும் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர்.

மாமாவின் வீடு கலகலத்தது. அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். கலா மாமிக்குக் கவலை பிடித்துவிட்டது. அவர் சோகமாக இருந்தார். சந்திரனுக்கும் கவலைதான். விடிந்ததும் பிள்ளைகள் சென்று விடுவார்கள். பிள்ளைகள் கவலையின்றி இருந்தனர். சிரித்து மகிழ்ந்து கலகலத்தனர். உணவின் பின் நெடுநேரம் உரையாடினர். வீட்டுக்குப் போகவேண்டும் என்ற எண்ணமே இல்லை. சங்கரும் சந்திரனும் ஒருபுறம் கதைத்திருந் தனர். சற்று நேரத்தில் உறங்கி விட்டனர்.

சூரியன் கிழக்கில் பூரித்து எழுந்தான். வானில் வண்ண வண்ண மேகங்கள். குருவிகளின் இன்னிசை. சம்பூர் சிலிர்த்துச் சிரித்தது .விடிந்ததும் கடமைகளை முடித்தனர். உணவு பரிமாறப் பட்டது. கோயிலுக்குச் செல்லவேண்டும். மாமியிடம் கூறினர். மாமாவோடு கோயிலடிக்குச் சென்றனர். சங்கரும் கூடச்சென்றார். அங்கே பெரும் கூட்டம் காத்திருந்தது. கிராமசபைத் தலைவர் தாமோதரம் காத்திருந்தார். கோயில் பரிபாலன சபையினர் வரவேற்றனர்.

ஸ்ரீதரன் புன்னகையோடு உலாவந்தார். சாரணர்களும் அவர் களை வழிநடத்தியோரும் இருந்தனர். கோயிற் பூசகர் விஷேட பூசையினை நடத்தினார். உதவி செய்தவர்களுக்கு நன்றி கூறினார்கள். சந்திரன் மாமாவைப் புகழ்ந்தனர். அவரது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியால்தான் பிள்ளைகள் வந்தார்கள். பிள்ளைகள் வந்த தால் சிரமதானம் நடந்தது. கோயில் தூய்மை கண்டது. நல்ல ஒழுங்கு முறை பின்பற்றப்பட்டது. திருவிழா சிறப்பாக நடந்தது.

''எங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டியுள்ளீர்கள். அவர்களுக்கு முன்மாதிரியாக இருந்தீர்கள். உங்களைப் பெற்றவர்கள் பாக்கிய சாலிகள். அடுத்த முறையும் வாருங்கள். அன்போடு அழைக்கி றோம். உங்களால் நாங்களும் பெருமை அடைகிறோம். நீங்கள் நலமாக வாழ வாழ்த்துகிறோம். என்றும் இந்தக் காளித்தாய் துணையிருப்பாள்.'' தாமோதரம் உணர்ச்சி பொங்க வாழ்த்தி னார். எல்லோரும் பிரசாதம் பெற்றுக் கொண்டனர்.

கைகூப்பி வணக்கம் கூறினர். பெரியவர்கள் கூடிக் கதைத் தார்கள். அவர்களை விட்டு விலகி வந்தனர். நண்பர்கள் ஒன்றாகக் கூடினர். முகவரிகளைப் பரிமாறிக் கொண்டனர். பிரிய மன மில்லாது பிரிந்தனர். சந்திரன் மாமா அழைத்தார். மாமாவோடு பின் தொடர்ந்தனர். வீட்டுக்கு வந்து விட்டனர்.

விடுமுறை நாளையோடு முடிகிறது. வீடு போகவேண்டும். அம்மா அப்பா தேடுவார்கள். விடுமுறை பயனுள்ளதாக அமைந் தது. மதிய உணவின்பின் புறப்பட எண்ணினர். கலா மாமியின் முகத்தில் சந்தோஷமில்லை. சந்திரன் மாமா ஆறுதல் சொன் னார். இப்போதுதான் பிள்ளைகள் கவலையை உணர்ந்தார்கள். பிள்ளைகள் ஒன்றாகக் குளித்தார்கள். உணவினை அருந்தி னார்கள். உடைகளைப் பொதி செய்தார்கள். புறப்படத் தயாரானார் கள். அப்போது கிராமத்து நண்பர்கள் தேடி வந்தனர்.

மூன்று நாட்களில் இத்தனை நண்பர்களா? சங்கரால் நம்பவே முடியவில்லை. கள்ளம் கபடமற்ற பிள்ளைகள். கிராமத்தில் நண்பர்களைத் தேடிக் கொண்டார்கள். வந்தவர்கள் பொதிகளைத் தூக்கினர். கடற்கரை வரை சென்றனர். படகில் அவற்றை ஏற்றினர். கலா மாமி கண்கலங்கி வழியனுப்பினார். சந்திரன் மாமா பக்கத்தில் நின்றார். நண்பர்களின் கண்கள் கலங்கி யிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

சங்கர் படகை இயக்கினார். அது இரைந்து இயங்கியது. எல்லோரும் ஏறியதை உறுதி செய்தார். படகு நீரில் ஆடி யசைந்தது. சந்திரன் சங்கரைப் பார்த்தார். சங்கர் படகை விட்டு வந்தார். சந்திரனின் கைகளைப் பிடித்தார். நன்றி கூறினார். இருவரும் கதைத்துக் கொண்டனர். நிமேசிக்கா சந்திரனிடம் வந்தாள்.

''மாமா! கல்தோணி ஏன் கல்லாகக் கிடக்கிறது''? கேட்டுவிட்டுப் பதிலுக்காகக் காத்திருந்தாள். சந்திரனுக்குச் சங்கடமாக இருந்தது. பிள்ளைகள் கேள்வி கேட்பது நல்லது. அதற்குப் பொருத்தமான பதில் வேண்டும். சந்திரன் சிந்தித்தார். கூறத் தொடங்கினார்.

''நாங்கள் மனிதர்கள். ஒரு காலத்தில் தேவர்களோடு மனிதர்களும் இருந்தார்கள். மனிதர்களை ஆணவம் பிடித்துக் கொண்டது. மனிதன் கடவுளை மறந்தான். மனிதனை மதிக்க மறந்தான். அவனை விட்டு அன்பு விலகியது. அவனது கண்கள் உண்மையைப் பார்க்க மறுத்தன. தர்மத்தை மறந்து விட்டான். பொய்யும் பொறாமையும் சேர்ந்து கொண்டன. மனிதன் பொய்யான வாழ்க்கை வாழ்கிறான். அதனால் அவன் கண்களுக்கு மெய் தெரிவதில்லை. பக்தி அவனிடம் இல்லை. சமய தத்துவங்களை மறந்து விட்டான். மனிதன் மாறிவிட்டான்.

அவன் திருந்த வேண்டும். அன்போடு வாழ வேண்டும். பிறரை நேசிக்க வேண்டும். பிறருக்கு உதவ வேண்டும். எல்லோரையும் சமமாக மதிக்க வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழவேண்டும். நமக்கு உள்ளவை ஊனக் கண்கள். நமக்கும் ஞானக்கண் வரும். அப்போது கல்தோணி தெரியாது. உண்மை யான தோணி தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சித்தர்கள் எல்லாம் தெரிந்தவர்கள். அவர்களை நாம் போற்றுவது இல்லை. அவர்களது உபதேசங்களைக் கேட்பதும் இல்லை. சாதிச் சண்டைகள் பிடிக்கிறோம். சமயச் சண்டைகள் செய்கிறோம். மனிதனை மனிதன் அழிக்கிறான். இந்த நிலை மாறவேண்டும். மாறினால் நாம் தேவர்கள் ஆகலாம். இந்த உலகம் சொர்க்கமாக மாறும்.''

சந்திரன் பிரசங்கமே செய்து விட்டார்.

பிள்ளைகள் அவரையே பார்த்தனர். கலாவுக்கு ஆச்சரியம். இப்படி சந்திரன் பேசியதே இல்லை. அவர் கூறியவை சரியாகப் பட்டன. நிமேசிக்காவின் விழிகள் விரிந்தன. அவளது உள்ளத்தில் சிந்தனை ஊற்றெடுத்தது. ரதீபன் மாமாவின் தத்துவத்தில் ஊறிவிட்டான். அவரின் அறிவைப் பாராட்டினான்.

''நாங்கள் மனிதர்களாக வாழ்வோம். நல்லவர்கள் என்று பெயரெடுப்போம். மாமா எங்களை வாழ்த்துங்கள். நாங்கள் சென்று வருகிறோம்.'' ரதீபன் எல்லோர் சார்பிலும் கூறினான். கலா மாமி பிள்ளைகளைத் தழுவினார். முத்தம் கொடுத்தார். அனைவரும் படகில் ஏறிக் கொண்டனர். படகு இரைந்து புறப் பட்டது. எல்லோர் கைகளும் அசைந்தன. ஆனால் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. அதனால் சத்தமே வரவில்லை.

படகு மறையும் வரை கைகள் அசைந்தன. பின் வீடுகளுக்குள் சென்றனர். வீடே உறங்கி விட்டதுபோல் இருந்தது.

''ஞாயிறு காலை வந்தனர். இன்று வீட்டுக்குச் செல்கிறார்கள். மூன்று நாட்கள் சந்தோஷம் நிலவியது.'' கலா அலுத்துக் கொண்டார். சந்திரன் ஆறுதல் கூறினார். பாரதியும் மதுவும் கவலையில் இருந்தனர். அவர்களை உற்சாகப்படுத்தினார். அவர் களோடு சேர்ந்து விளையாடினர்.

படகு விரைந்து சென்றது. செம்மலைத் தீவின் ஓரமாகச் சென்றது. உயரப் பறந்த பறவைகள் கண்டு கொண்டன. செய்தி தீவெங்கும் பரவியது. பறவைக் கூட்டம் படகைச் சூழ்ந்தது. ஆரவாரம் வானைப் பிளந்தது. அவற்றின் அழைப்பினைப் புரிந்து கொண்டனர். படகு மெதுவாகச் சென்றது. சங்கர் பிள்ளைகளைப் பார்த்தார். அவர்கள் கண்களால் பேசினார்கள். படகு கரையை அடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் பெரிய ஆரவாரம். தீவின் உயிரினங்கள் அங்கே கூடியிருந்தன. படகை விட்டு இறங்கினர். அந்தப் பாறைப் பக்கம் சென்றனர். அந்தப் பாறையில் இருந்தனர். நரியார் தலைமை யில் கூட்டம் நடந்தது. நொண்டி மரை நாவினால் நக்கியது. முயற்குட்டிகள் ஓடிவந்தன. நிமேசிக்காவின் மடியில் ஏறியிருந் தன. குயில்கள் கூவின. மயில்கள் வந்து ஆடின. கலைமான்கள் நடம்புரிந்தன. நிமேசிக்கா கையை உயர்த்தினாள். அங்கு அமைதி நிலவியது. நிமேசிக்கா எழுந்தாள்.

''உங்கள் அன்புக்கு நன்றி. நாங்கள் வீடு செல்ல வேண்டும். அடுத்தமுறை உங்களிடம் வருவோம். நாங்கள் போகவேண்டும். விடை தாருங்கள்.''
என உரத்துப் பேசினாள்.

மிருகங்களும் பறவைகளும் ஆரவாரித்தன. சில 'விடைதர மாட்டோம்' என்றன. சில 'போய் வாருங்கள்' என்றன. ''எங்கள் துயரத்தைப் போக்கினீர்கள். நன்றியை மறக்க மாட்டோம்.'' என்று கூத்தாடின. அவற்றின் அன்பில் திளைத்தனர். மனிதர்கள் இவ்வாறு இருந்தால் துயரமேயில்லை. எல்லோரும் சந்தோஷ மாக வாழலாம். சங்கர் மனதில் எண்ணினார். குரங்குகள் பாய்ந்து வந்தன. பழங்களைச் சுமந்து வந்தன. அவற்றை அன்போடு பரிமாறின. உண்ணும்படி வற்புறுத்தின. திருவள்ளுவரை நினைந்தனர்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'.

திருக்குறளைச் சொல்லிப் பார்த்தனர். அற்புதமான அறிவுரை. மனிதர்கள் இதன்படி நடந்தால் இன்பமயம். எவ்வளவு பொருத்தமான பாடல். சிற்றறிவுள்ள உயிரினங்களின் செயலை வியந்தனர்.

அவர்கள் பழங்களை உண்டார்கள். உண்பதை உணர்வோடு பார்த்து நின்றன. நிமேசிக்கா பழங்களை எடுத்தாள். பறவை களுக்கும் கொடுத்தாள். அனுசியனும் நிருசியனும் மிருகங் களுக்குக் கொடுத்தார்கள். அனைவரும் பகிர்ந்து உண்டார்கள்.

''உங்களுக்குத் துன்பம் வந்தால் உதவுவோம். எங்களுக்கு அறிவியுங்கள். நாங்கள் இருக்கும் இடம் தெரியுமா? அதை நீங்கள் அறிய வேண்டும். எப்படி அறியலாம்.?'' ரதீபன் கூறினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியார் ஒரு புறாக் கூட்டத்தை அழைத்தார். அவை நரியார் முன் வந்தன. அவற்றிடம் ஏதோ கூறினார். புறாக்கள் சற்று விலகி இருந்தன. ஆட்டம் பாட்டம் தொடங்கியது.

''என்ன பார்க்கிறீர்கள். பழங்களைச் சாப்பிடுங்கள். அதுவரை தான் ஆட்டம் பாட்டம். பின் நீங்கள் செல்லலாம்.'' நரியார் அடக்கமாகக் கூறினார். பழங்களை விரைவாக உண்டனர். சங்கர் நேரத்தைப் பார்த்தார். நான்கு மணி. விரைவாகப் போக வேண்டும்.

''இன்னும் பத்து நிமிடங்களில் புறப்படுவோம்''. சங்கர் விரைவு படுத்தினார். விரைவாக உண்டனர். பின் எழுந்தனர். விடை பெற்றனர். படகை நோக்கி நடந்தார்கள். பின்னால் உயிரினங்கள் தொடர்ந்தன. படகில் ஏறிக் கொண்டனர். படகை சங்கர் இயக்கினார். படகு புறப்பட்டது. கைகளை அசைத்துச் சென்றனர். படகின் பின்னால் பறவைகள் வந்தன. பின் அவை திரும்பிச் சென்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

அலை கிழித்துப் படகு விரைந்தது. புறாக்கூட்டம் தொடர்ந்து வந்தன. அவை பல வடிவங்களில் பறந்தன. ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாகின. இரண்டு அணிகளாகி வந்தன. வானூர்தி வடிவில் பறந்தன. ஒரு வரிசை மேல்நோக்கிப் பறக்கும். மறுவரிசை அதன் கீழ் அசையும். விரைந்து மேலெழுந்து பறக்கும். அதேபோல் விரைந்து கீழே வந்து மிதக்கும். புறாக்கள் வேடிக்கை காட்டிப் பறந்தன.

நீல வானில் வெண்மேகக் கூட்டம். நீலக் கடலில் வெண்நுரைக் கூட்டம். நீரின்மேலே படகின் ஓட்டம். காற்றில் புறாக்களின் ஆட்டம். சிறுவர்களது உள்ளம் துள்ளி ஆடின. படகு விரைந்து சென்றது. துறைமுகத்துள் புகுந்தது. ஜெற்றியைக் கண்டனர். ஜெற்றியில் பெற்றோர்கள் காத்திருந்தனர். அனுசியன் படகின் கயிற்றை எறிந்தான். முரளி அதனைப் பிடித்தார். பிள்ளைகளின் பெற்றோர்கள் சேர்ந்து கொண்டனர். அவர்களும் கயிற்றைப் பிடித்தனர். இழுத்தனர். படகு ஜெற்றிப் பாலத்தில் அணைந்தது.

முதலில் சங்கர் வெளியில் வந்தார். படகை ஆடாதவாறு கட்டினார். பின் பிள்ளைகளை அழைத்தார். ஒருவர் பின் ஒருவராக வந்தனர். நிமேசிக்கா முதலில் வந்தாள். தொடர்ந்து மற்றவர்கள் வந்தனர். இறங்கியதும் பிள்ளைகள் ஓடினார்கள். பெற்றோரின் கால்களில் வீழ்ந்தார்கள். வணங்கினார்கள். பெற்றோர் அவர்களை வாரியெடுத்தார்கள். அன்போடு முத்தமிட்டார்கள். பாசங்கள் பகிர்ந்து கொண்டன. ஐந்து நிமிடங்கள் அமைதி நிலவியது.

முரளி சங்கரோடு கை குலுக்கினார். சங்கருக்கு அனைவரும் நன்றி கூறினர். பிள்ளைகள் படகினுள் ஏறினார்கள். தங்கள் பொதிகளை எடுத்தார்கள். பொதிகள் பாரமாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் எடுத்து வந்தார்கள். ஜெற்றியின் அருகில் மண்டபம் இருந்தது. அங்கே சென்றனர். அங்கு இருக்கைகள் இருந்தன. இருக்கைகளில் அமர்ந்தனர். பொதிகளைத் திறந்து பார்த்தார்கள். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. பொதிகளுள் பழங்கள் இருந்தன.

பொதிகளுள் பழங்கள் எப்படி வந்தன.? யோசித்தார்கள். புறாக் கூட்டம் பறந்து வந்தன. அவர்களைச் சுற்றி வட்டமடித்தன. வந்த வழியே பறந்தன. மீண்டும் வந்து சென்றன. இப்போது அவர் களுக்குப் புரிந்து விட்டது. செம்மலைத் தீவு நினைவுக்கு வந்தது. அவர்கள் பாறையில் இருந்ததை எண்ணினர். குரங்குகளின் செயலை நினைந்தனர். சில குரங்குகள் கடற்கரைக்கு விரைந் தன. கயிற்று வழியே படகினுள் நுழைந்தன. பொதிகளைத் திறந்தன. பழங்களைப் பொதிகளுள் திணித்தன. மெதுவாக மூடி வைத்தன. புகுந்தது போலவே சென்றுவிட்டன. இதனை பிள்ளை கள் காணவில்லை. மனிதர்களுக்கு இல்லாத அறிவு குரங்கு களுக்கு. அவற்றின் செயலை பெற்றோருக்கு விளக்கினர்.

பழங்களைப் பெற்றோருக்குக் கொடுத்தார்கள். அவர்கள் சுவைத்து உண்டார்கள். உண்ணும்போது சங்கர் நடந்தவற்றை விளக்கினார். இடையிடையே பிள்ளைகளும் கூறினார்கள். மெய் மறந்து கேட்டனர். பிள்ளைகளின் துணிச்சலைப் பாராட்டினர். அதேவேளை கடலில் தத்தளித்ததை நினைந்தனர். ஏதும் நடந்திருந்தால்..? நினைக்கவே பயந்தனர்.

பிள்ளைகள் நலமாக வந்ததை எண்ணினர். இறைவனுக்கு நன்றி கூறினர். பிள்ளைகளின் கருணை உள்ளத்தைப் போற்றி னர். பிள்ளைகளின் பெருமையை வியந்தனர். அவர்களால் விளைந்த நன்மைகளைப் பாராட்டினர். பிள்ளைகளால் அவர் களுக்குப் புகழ் கிடைத்தது. சம்பூர் மக்கள் கூறியதை நினைந் தனர். அனுஜா தனது பிள்ளைகளை அணைத்தார்.

''கெட்டிக் காரர்கள். உங்களால் எங்களுக்குப் புகழ். பெற்ற மனம் குளிர்கிறது. எனக்குப் பெருமையாக இருக்கிறது. நல்லன வற்றைச் செய்யுங்கள். பிறருக்கு உதவுங்கள்.''

அனுஜா உணர்ச்சி பொங்கக் கூறினார். மற்றப் பிள்ளைகளின் தாய்மாரும் வந்திருந்தனர். அவர்களுக்கும் கொள்ளை மகிழ்ச்சி. அவர்களது கண்களிலே ஆனந்தக் கண்ணீர். பெற்றார் பிள்ளை களை அணைத்துக் கொண்டனர். சங்கரை அனைவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டினர். அவரால்தான் பிள்ளைகள் அனுபவத்தைப் பெற்ற னர்.

சங்கர் எல்லோருக்கும் விடைகொடுத்தார். பிள்ளைகள் சங்கரைக் கட்டித் தழுவினர்.

''மாமா நாங்கள் தவறு விட்டிருப்போம். அதனைப் பெரிதாக எண்ணவேண்டாம். எங்களை மன்னியுங்கள் மாமா. நீங்கள் செய்த உதவிக்கு எங்களது நன்றி.''

ஏகோபித்த குரலில் கூறினர். சங்கரின் கண்கள் குளமாயின. அவர்களிடம் இருந்து சிரமத்தோடு விடுபட்டார். அவர் குரல் தளம்பியது. ''உங்களால்தான் எனக்குப் பெருமை. உங்கள் பெற்றோருக்கும் பெருமை. உங்களை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன். நீங்கள் எல்லோரும் நீடு வாழவேண்டும். சென்று வாருங்கள். அடுத்த விடுமுறை வரும். சம்பூருக்கு மீண்டும் செல்வோம். செம்மலைத் தீவுக்கும் செல்வோம்''

சிரிப்பை வரவழைத்துக் கூறினார். அவர் பேச்சைக் கேட்டுச் சிரித்தார்கள். பிள்ளைகளை அனுப்பி வைத்தார். அவர்கள் தங்கள் வீடுகளுக்குப் புறப்பட்டனர். அனுசியன் பொதியோடு வந்தான். சங்கரோடு படகில் ஏறினான். படகை முடுக்கி இயக்கினான். படகு இரைந்து இயங்கியது. வீட்டை நோக்கிப் புறப்பட்டது. முரளி கையசைத்து வழியனுப்பினார். முரளியின் மனதில் வள்ளுவர் சிரித்தார்.

'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்.'

குறளைக் கூறிக்கொண்டே நடந்தார். பிள்ளைகளை நினைத் தார். அவர்கள் பிரச்சினைகளைக் கண்டு ஓடவில்லை. துணிச்ச லோடு முகம்கொடுத்து உள்ளனர். தாமே முடிவெடுக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். திட்டமிடப் பழகி இருந்தனர். வெற்றி யும் பெற்றுள்ளனர். பிள்ளைகளைச் சுயமாகச் சிந்திக்க விட வேண்டும். தலைமை தாங்கும் சக்தியைப் பெறவேண்டும். வாழ்க்கையில் வெற்றிபெற அது உதவும். உல்லாசப் பயணம் பிள்ளைகளுக்கு இனித்தது. பயனளித்தது.

*நிறைவு*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

*சிறுவர் பாடல்கள்*

1. இன்பக் கனிகள்
2. பாட்டுப் பாடுவோம்
3. பாடி ஆடுவோம்
4. காகமும் தம்பியும்
5. கடலும் காவிரியும்
6. சின்னச் சின்னப் பாட்டு
7. மனதுக்கினிய பாட்டு
8. ஆனந்தமான பாட்டு

*சிறுவர் கதைகள்*

9. பூஞ்சிட்டுக்கள்
10. தங்க மாம்பழம்
11. ஆடி மகிழ்வோம்

*சிறுவர் நாவல்கள்*

12. பனிங்குத்தீவு
13. காட்டில் கலவரம்
14. பயங்கொள்ளலாகாது பாப்பா
15. உல்லாசப் பயணம்
16. மனதில் உறுதி வேண்டும்

*சிறுகதைகள்*

17. அந்த ஆவணி ஆறு
18. வம்மிப்பூ
19. கேணிப்பித்தன் கதைகள்


*கவிதை*

20. கேணிப்பித்தன் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத் தமிழ் இலக்கியத்திற்கு திருகோணமலை தந்திருக்கும் ஆற்றல் மிக்க இலக்கியகர்த்தா திரு. ச. அருளானந்தம். தான் பிறந்த ஊரான ஆலங் கேணியின் மீது பித்துக்கொண்டு 'கேணிப்பித்தன்' என்ற புனைபெயரைப் பூண்டுகொண்டவர். கவிதை, சிறுகதை, சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாவல்கள் என இலக்கியத்தின் பல்வேறு கூறுகளில் தனது ஆற்றலைச் சிறப்பாக வெளிப்படுத்தி வருபவர். இவருடைய சில படைப்புகள் மாகாண, தேசிய இலக்கிய விருதுகளை வென்றுள்ளன.

சிறுவர் உலகம் அற்புதமானது. சிறுவர்கள் அனைத்தையும் ஆர்வத்தோடு பார்ப்பார்கள். ஆடிப் பாடுவதில், கூடி விளையாடுவதில் பெருவிருப்பைக் கொண்டிருப்பார்கள். இப்பருவத்திலேயே வாசிப்புக் கலாசாரம் பதியனிடப்பட வேண்டும். இதன்பொருட்டு நம் நாட்டில் நல்ல தமிழ் நூல்களுக்கான தேவை மிக அதிகமாக உள்ளது. இத்தேவையை சிறப்பாக ஈடுசெய்யும் வகையில் கேணிப்பித்தன் சிறுவர் இலக்கியம் படைத்து வருகின்றார்.

சமுதாய அக்கறையுள்ள ஆசிரியராக, கல்வியாளராகக் கடமையாற்றிய இவர் சிறுவர் உளவியலை நன்கு அறிந்துள்ளார். சிறுவர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய எளிமையான சுவையான தமிழில் 'உல்லாசப் பயணம்' என்ற இந்நாவலை உருவாக்கித் தந்துள்ளார். கவியாற்றல் கொண்ட இவர் சிறுவர்கள் படித்துப் பாடி ஆடக்கூடிய இனிய பாடல்களை ஊடே தந்திருப்பது சிறப்பானது. தந்தையின் படைப்புகளை உணர்ந்து மகன் ச. அ. அருள்பாஸ்கரன் சிறுவர் பார்த்து மகிழத்தக்க சித்திரங்களை வரைந்துள்ளார். இயற்கை அழகு கொஞ்சும் திருகோணமலையைக் கதைக் களமாகக் கொண்டு படைக்கப்பட்ட இந்நாவல் சிறுவர்களின் வாசிப்பிற்கு மிகவும் ஆரோக்கியமானது.



ராஜ ஸ்ரீகாந்தன்
முன்னாள் பிரதம ஆசிரியர்
'தினகரன்'
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955-98211-0-5